Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 15

வாரப்பதிப்பு

# ஈழநாடு

ஈழநாடு
சந்தா விபரம்
வாரப்பதிப்பு உட்பட
ஒரு வருடத்துக்கு ரூபா 40-00
6 மாதத்துக்கு ரூபா 21-00
3 மாதத்துக்கு ரூபா 11-00

போன் 389 EELA NADU National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி எண் 49

மலர் 5 யாழ்ப்பாணம், சுபகிருது பங்குனி 11ஆம் நாள் ஷவ்வால் பிறை 27 (24-3-63) ஞாயிற்றுக்கிழமை இதழ் 44

# ஈழத் திருமகனுக்கு பாரதத் தாய் வரவேற்பு

## கைதான 37 பேர் விடுதலை

— நமது நிருபர் ராஜலிங்கம் —

நாகபட்டினம், மார்ச் 23

இந்திய கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு, தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த 37பேர் (ஈழநாடு நிருபர் உட்பட) நேற்று திருத்துறைப் பூண்டி பொலிஸாரினால் விடுதலை செய்யப்பட்டனர். நீச்சல்வீரர் ஆனந்தன், பாக்கு நீரிணையைக் கடந்துசென்றுகொண்டிருக்கும் பொழுது, அவருக்கு உதவியாக இவர்கள் சென்றனர். இந்தியாவிலுள்ள இலங்கை ஹைகமிஷனரின் தலையீடு காரணமாகவே இவர்கள் விடுதலைசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களை விடுதலைசெய்யும்படி, இலங்கையிலுள்ள இந்திய ஹைகமிஷனர்

(12—ம் பக்கம் பார்க்க)

## சத்தியாக்கிரகம் இன்னும் முடிவாகவில்லை

### திருமலை எம். பி, அறிவிப்பு

திருக்கோணமலை, சனி

"நாம் சத்தியாக்கிரகத்தை மீண்டும் ஆரப்பிக்கப் போவதாக பத்திரிகைகள் செய்திகள் வெளியிட்டுக் கொண்டிருக்கின்றன. ஆனால் மீண்டும் சத்தியாக்கிரகத்தை நடத்துவது பற்றி இன்னும் நாம் தீர்க்கமான முடிவுக்குவரவில்லை" என இங்கு நடைபெற்ற ஏகாம்பர ஞாபகார்த்த விழாவில் பேசிய திருமலை எம். பி. திரு. இராஜவரோதயம் தெரிவித்தார்.

காலம் சென்ற மூதூர் முதலாவது எம். பி. யும் நகராண்மைக் கழகத்தின் முன்னாள் தலைவருமான திரு. தா. ஏகாம்பரத்தின் இரண்டாவது சிரார்த்ததினக்கூட்டம் திருக்கோணமலை முற்றவெளியில் நடந்தபெற்றபோது தலைமை வகித்துப் பேசுகையில் திரு. இராஜவரோதயம் மேற்கண்டவாறு கூறினார்.

### ஆராய்ந்தே முடிவு செய்யப்படும்

தமிழர் நலனுக்காகப் பாடுபடும் தமிழரசுக்கட்சி எந்த ஒரு நடவடிக்கையையும் எடுப்பதற்குமுன் அலசி ஆராய்ந்து தான் முடிவுக்குவரும் என்று திரு. இராஜவரோதயம் தமது தலைமையுரையில் மேலும் குறிப்பிட்டார்.

### ஏகாம்பரம் போன்றவர் தேவை

மூதூர் முதலாவது எம். பி. ஜனாப் எம். ஈ. எச். முகமதலி பேசுகையில் தமிழ் பேசும் இனத்தை அழிக்கக்கங்கணம் கட்டிக் கொண்டிருக்கும் ஸ்ரீமா அரசாங்கத்தின் நடவடிக்கையை முறியடிக்க அமரர் ஏகாம்பரம் போன்றவர்களின் தொண்டு மிக்க தேவைப்படுகிறது என்றார்.

## கோடிக்கரையில் மக்களின் குதூகலம்

(நமது நிருபர் கே. ராஜலிங்கம்)

கோடிக்கரை, சனி

வல்வெட்டித்துறையிலிருந்து பாக்குநீரிணையை வெற்றிகரமாக நீந்திக் கடந்த ஆனந்தனுக்கு கோடிக்கரையில் வைத்து கோலாகலமான வரவேற்பு அளிக்கப்பட்டது. கொந்தளிக்கும் ஆழ்கடலை வெற்றிகரமாகத் தாண்டிய ஆனந்தனை கோடிக்கரையில் திரண்ட ஜனசமுத்திரம் பலத்த ஆரவாரத்துடன் வரவேற்றது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

சமுத்திரக்கன்னியை வெற்றிகொண்ட ஈழத்திருமகனுக்கு பாரதத்தாய் வெற்றிமாலைசூடி வரவேற்று ஆசிகூறுவதுபோல் நீச்சல்வீரர் ஆனந்தன் கோடிக்கரை சேர்வதைபார்க்க மக்கள் ஆவலோடுபலமணிநேரமாகக் காத்துநின்றனர்.

புதன்கிழமைமாலை வல்வெட்டித்துறையிலிருந்து புறப்பட்ட ஆனந்தன் வெள்ளிக்கிழமை காலை 10மணி 40 நிமிஷத்தில் பாரதமண்ணில் (கோடிக்கரை) கால்வைத்தார்.

ஆனந்தனின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்த சனசமுத்திரம் ஆனந்தனின் தலைதெரிந்ததும் உற்சாகமாக கைகளை உயர்த்தி கோஷமிட்டனர். சிலர் ஆனந்தனை எதிர்கொண்டழைக்க கடலில் முழங்கால் அளவு தண்ணீரில இறங்கினர்.

43மணிநேரம் கடலின்பலத்த எதிர்ப்புக்களையும் மிகச் சாதுரியமாகச் சமாளித்து எவ்விதகளைப்புமின்றி முகமலர்ச்சியுடன் தன்னை எதிர்கொண்டழைக்கத் திரண்டிருந்த சனசமுத்திரத்தைக்கண்டு தமது இருகைகளையும் உயர்த்தியது அவர் தம்மை வரவேற்கத் திரண்டிருந்த மக்களுக்கு நன்றி தெரிவிப்பதுபோல இருந்தது.

கோடிக்கரை கடந்த பத்து ஆண்டுகளுக்குப் பின் இரண்டாவது தடவையாக ஒரு இளம் நீச்சல் வீரனை வரவேற்கும் பேறுபெற்றது.

அகமும் முகமும் மலரப் பாரத பூமியில் வாழ்த்தொலியுடன் காலடிவைத்த ஆனந்தனை வல்வெட்டித்துறையிலிருந்து வள்ளத்தில் தொடர்ந்து சென்ற டாக்டர்கள் பாலகிருஷ்ணனும், கதிர்காமத்தம்பியும் பரிசோதனை செய்தனர்.

(12-ம் பக்கம் பார்க்க)

### எல்லாம் தமிழ் இயக்கம்

உடுவில் எம். பி. திரு. வி. தருமலிங்கம் பேசியதாவது:

நேரடி நடவடிக்கை ஒன்றினால் தான் தமிழரின் இழந்த உரிமையை மீட்கலாம். தமிழரசுக் கட்சி இதில் நம்பிக்கை கொண்டுள்ளது.

ஏப்ரம் 8-ம் திகதிக்கும் 16-ம் திகதிக்குமிடையில் நடைபெறவிருக்கும் எல்லாம் தமிழ் இயக்கத்துக்கு தமிழர்கள் எல்லோரும் பூரண ஒத்துழைப்புத் தரவேண்டும். வடக்கு, கிழககு மாகாணங்களிலுள்ள அரசாங்க காரியாலயங்களில் கடமையாற்றும் தமிழ் உத்தியோகஸ்தர்கள் தமிழிலேயே தொடர்புகளை வைத்துக் கொள்ளக் கேட்டுக்கொள்ளுகின்றேம்.

## வரவேற்க யாழ்ப்பாணம் தயாராகிறது

யாழ்ப்பாணம், ஞாயிறு

நீச்சல் வீரர் ஆனந்தனை வரவேற்க யாழ்ப்பாண மாநகர சபை உட்பட பலபொது நல சங்கங்கள் துரித ஏற்பாடுகளைச் செய்து வருவதாகத் தெரிகிறது.

யாழ். மாநகரசபை ஆனந்தனுக்கு ஒரு பொது வரவேற்பளிக்க வேண்டுமெனக் கோரும் பிரேரணைக்கான முன்னறிவித்தலை உதவிமேயர் திரு. ஆ. துரைராஜசிங்கம் சமர்ப்பித்தார்.

பல விளையாட்டுக் கழகங்களும் சனசமூக நிலையங்களும் சிறப்பான வரவேற்பை ஆனந்தனுக்களிக்க ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளன.

### வாழ்த்துச்செய்தி

யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்பொழுது பயிற்சிபெற்று வரும் 152கிராம சேவையாளர் ஆனந்தனின் வீரச்செயலைப் பாராட்டி வாழ்த்துச் செய்தி ஒன்று அனுப்பியுள்ளனர்.

ஆனந்தனின் துணிகர முயற்சி இளைஞர்களுக்கே பெருமை

(12-ம் பக்கம் பார்க்க)

## பாகிஸ்தானுக்கு பிரதமரின் வாழ்த்து

கொழும்பு, சனி

பாகிஸ்தானின் தேசிய தினத்தை முன்னிட்டு இலங்கைப் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா வாழ்த்துச் செய்தியொன்றை இன்று பாகிஸ்தான் ஜனாதிபதி அயூப்கானுக்கு அனுப்பியுள்ளார்.

புளுக்களை அழிப்பதற்கு

BAYER



பொலிடோல்
FOLIDOL
Agents
ROYAL DISPENSARY

T'GRAMS ROYAEL
PHONE 397 JAFFNA

# உங்கள் இராசி பலன்

சோதிட ஆசான் செ. தெல்லியூர் எழுதுவது

சுபகிருது ஆண்டு பங்குனித் திங்கள் 11-ம் நாள் ஞாயிற்றுக்கிழமை (24-3-63) முதல் பங்குனித் திங்கள் 17-ம் நாள் சனிக்கிழமை (30-3-63) வரை உள்ள பலன்கள்.

### மேட இராசி

(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1-ம் பாதம்.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் அவப்பொழுது கழிதல், நீசர் தொடர்பு, காரிய நஷ்டம், முயற்சிகளில் தடை, பணமுடையினல் கடன்படல், வர்த்தகத்துறையில் மத்திம ஆதாயம், உத்தியோகத்துறையில் வெளியூர்ப் பிரயாணம், தொழிற் பொறுப்பு அதிகரிப்பினும் பலனின்மை, அலைச்சல், நற்பெயர் கிடையாமை, கமத்தொழிலில் செலவதிகரித்தல், கால்நடை நட்டம், மாணவர் கல்விச்சிறப்பு, பணவசதி, பெண்களுக்கு குடும்ப ஒற்றுமை, சந்தோஷம், களத்திர புத்திர சுகம் ஆதியன காணப்படுகின்றன. இவர்களுக்கு மார்ச் 24, 31 சுபதினங்களாகும்.

★

### இடப இராசி

(கார்த்திகை, பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடம் முன்னரை.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் நல்லோர் நட்பும் ஆதரவும், சிந்தனைத்தெளிவு, புதியயோசனைகளால் தொழில் விருத்திக்கு முயற்சி செய்தல், பணவழியில் வசதிகள் கிடைத்தல், சமுதாய மதிப்பு அதிகரித்தல், வர்த்தகத்துறையில் வியாபாரம் பெருகுதல், பணவரவு, உத்தியோகத்துறையில் மேலதிகாரிகளிடம் நற்பெயர் கிடைத்தல், புதிய தொழில் முயற்சிப்போருக்கு நன்மை, மாணவருக்கு கல்வி கேள்விச் சிறப்பு, பரீட்சை வெற்றி, கமத்தொழிலாளருக்கு ஆதாயம், அரசாங்க உதவி, பெண்களுக்கு குடும்பசுகம், இனபந்துக்கள் - பிதாவழி உதவி கிடைத்தல், களத்திர புத்திர சுகம் ஆதியன காணப்படுகின்றன. இவர்களுக்கு மார்ச் 24, 26, 29, 30 சுபதினங்களாகும்.

★

### மிதுன இராசி

(மிருகசீரிடம் பின்னரை, திருவாதிரை, புனர்பூசம் முன்முக்கால்.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் தொழில்விருத்திக்கான முயற்சிகள் நடத்தல், பழைய பாக்கிகள்வரவு, மனதிடம், வழக்கு விவகாரங்கள் சாதகமாக வருதல், குடும்ப விருத்தி, வர்த்தகத்துறையில் ஆதாயம், தொழில் விருத்தி, உத்தியோகத்தருக்கு அனுகூலமான இடமாற்றம், நல்ல பெயர் கிடைத்தல். கமத்தொழிலாளருக்கு குடும்பசச்சரவு காரணமாக பயிர்த்தொழில் தடைப்படல், மாணவருக்கு பரீட்சை வெற்றி, கல்விச் சிறப்பு; பெரியோர் நட்பு, பெண்களுக்கு குடும்பசுகம், களத்திர-புத்திரசுகம், தேக நலச்சிறப்பு ஆதியன காணப்படுகின்றன. இவர்களுக்கு மார்ச் 25, 27, 28 சுபதினங்களாகும்.

★

### கடக இராசி

(புனர்பூசம் நான்காம் பாதம், பூசம், ஆயிலியம்.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் வெளியூர்ப் பிரயாணம், குடும்பத்தில் சந்ததிகளுக்காக முற்சிகள் நடத்தல், குடும்பத்தில் வைத்தியச்செலவு அதிகரித்தல், பெரியோர்நட்பு, தெய்வ வழிபாடு, வர்த்தகத் துறையில் மத்திம ஆதாயம் கிடைத்தல், உத்தியோகத் துறையில் படபடப்பால் கஷ்டம், மேலதிகாரிகளிடம் குறை கேட்டல், எதிர்ப்புகள், மாணவருக்குச் சோம்பலும், கல்வியில் மனத்தளர்ச்சியும் காணப்படல், கமத்தொழிலாளருக்கு குடும்பச் சச்சரவு, தொழிற் கேடு, பெண்களுக்கு குடும்ப கஷ்டம், பணமுடை,உடல்நலக் குறைவு ஆதியன காணப்படும். இவர்களுக்கு மார்ச் 27, 28, 30 சுபதினங்களாகும்.

★

### சிங்க இராசி

(மகம், பூரம், உத்தரம் 1-ம் பாதம்.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் பிறரை நம்பி ஏமாற்றம் அடைதல், கடன்படல், தொழிலில் கடும் உழைப்பு, பலிதக்குறைவு, குடும்ப கஷ்டம், அலைச்சல், களத்திரவழி பகை, வர்த்தகத்துறையினருக்கு எதிர்ப்புகளும், போட்டிகளும் அதிகரித்தல், ஆதாயம் குறைதல், கமத்தொழிலாளருக்குச் சொத்துத் தகராறு-ஊழியர் கஷ்டம் காரணமாகப் பயிர்த்தொழில் தடைப்படல், உத்தியோகத் துறையினருக்கு உடல்நலக் கேடு, செலவு அதிகரித்தல், தொழிற் கஷ்டம், மாணவருக்கு கல்வித்தடை, மனச் சோர்வு, பெண்களுக்கு உடல் நலக்குறைவு, களத்திரவழி பகை, பணமுடை ஆதியன காணப்படும். இவர்களுக்கு மார்ச் 24, 29, 30 சுபதினங்களாகும்.

★

### கன்னி இராசி

(உத்தரம் பின் முக்கால் அத்தம், சித்திரை முன்னரை.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் குடும்பச் சிறப்பு. களத்திர-புத்திரவழி உதவி, பெரியோர் உதவியும் நட்பும் கிடைத்தல், பணவரவு, ஊழியர் உதவி, தெய்வவழிபாடு, வர்த்தகத்துறையில் ஆதாயம், தொழில் விருத்திக்கான முயற்சிகள் நடத்தல், உத்தியோகத் துறையில் அதிக பொறுப்புகள் வருதல்,, நண்பர் உதவி, நற்பெண் கிடைத்தல், கமத்தொழிலில் பந்துசன உதவியால் தனதானிய விருத்தி, பொருள்வரவு, மாணவருக்குக் கல்விசசிறப்பு, பெரியோர் ஆதரவு, பெண்களுக்கு உடல் நலம் குறைதல், குடும்பத்தில் சுபகரும முயற்சிகள் நடத்தல், தெய்வவழிபாடு ஆதியன காணப்படும். இவர்களுக்கு மார்ச் 24, 26 சுபதினங்களாகும்.

★

### துலா இராசி

(சித்திரை பின்னரை, சுவாதி, விசாகம் முன்முக்கால்)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் வெளிப் பிரயாணங்கள், வாக்கு சாமர்த்தியத்தால் கஷ்டங்களைச் சமாளித்தல், மனத்திடம், எதிர்ப்புக்கள் நீங்கி உதவி கிடைத்தல், பண விவகார அனுகூலம், தொழில் விருத்தி, பெண்களால் உதவி, வர்த்தகத் துறையில் நற்பலிதமாக இருப்பினும் போட்டியும் எதிர்ப்பும் இருத்தல், கொடுக்கல் வாங்கலில் கவனம் வேண்டும். உத்தியோகத் துறையில் தொழிலில் நற்பெயர் கிட்டல், எதிரிகளே மனம் மாறி தொடர்பு கொள்ளல், புதிய முயற்சிகள் வெற்றிதரல், மாணவருக்குக் கல்வி மேன்மை, நல்லோர் ஆதரவு, கமத்தொழிலாளருக்கு எதிர்ப்புகள் மறைந்து கால்நடை விருத்தி, ஆதாயம் கிடைத்தல், பெண்களுக்கு குடும்ப சந்தோஷம், தாய்வழி ஆதரவு, சந்ததி நன்மை ஆதியன காணப்படும். இவர்களுக்கு மார்ச் 25, 26, 28, சுபதினங்களாகும்.

★

### விருச்சிக இராசி

(விசாகம் 4-ம் பாதம், அனுஷம், கேட்டை)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் பிரயாண சுகம், தொடங்கிய காரியங்களால் நற்பலன் கிடைத்தல், தொழில் வகைச் சிறப்பு,பண விவகாரங்கள் சாதகமாதல், ஊழியர் உதவி, வர்த்தகத்துறையில் ஆதாயம் கிடைத்தல், மதிப்பு உயர்தல், உத்தியோகத்துறையில் மேலதிகாரிகள் வெறுப்பு, தொழிற்கஷ்டம், ஊழியரால் உதவயின்மை, மாணவருக்கு நல்லோர் ஆதரவு, கல்விச் சிறப்பு, கமத்தொழிலாளருக்கு குடும்பத் தகராறு, தொழில் கஷ்டம், கால்நடை நட்டம், பெண்களுக்கு இனபந்துக்களால் உதவி, களத்திர-புத்திர சுகம், குடும்பசுகம் ஆதியன காணப்படும். இவர்களுக்கு மார்ச் 27, 29, 30 சுபதினங்களாகும்.

★

### தனு இராசி

(மூலம், பூராடம், உத்தராடம் 1-ம் பாதம்)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் நம்பிக்கை ஏமாற்றம், பணமுடை, பிரயாணகஷ்டங்கள் அதிகரித்தல், குடும்பத்தில், கஷ்டங்கள், வைத்தியச் செலவு கூடுதல், வர்த்தகத் துறையினருக்கு மத்திம ஆதாயம் கிடைத்தல், தொழில் விருத்தித்தடை, உத்தியோகத் துறையினருக்கு போட்டி - எதிர்ப்பு காரணமாக மனச் சஞ்சலம், பிரயாணம் காரணமாக தேகநலம் கெடுதல், புதிய முயற்சிகள் தடைப்படல், கமத்தொழிலாளருக்கு குடும்ப - பிதுருவழி சச்சரவுகளும் பூமித் தகராறுகளும் ஏற்பட்டு,பயிர்த் தொழில் கேடு, மாணவருக்கு பரீட்சைவெற்றி, கல்விச்சிறப்பு, பெண்களுக்கு குடும்பச்சிறப்பு, சகோதரபந்துக்கள் உதவி, பணவரவு ஆதியன காணப்படும். இவர்களுக்கு மார்ச் 24, 29, 30 சுபதினங்களாகும்.

★

### மகர இராசி

(உத்தராடம் பின்முக்கால் திருவோணம், அவிட்டம் முன்னரை.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் தொழில்வகையில் மதிப்புயர்ச்சி, பழையகஷ்டங்கள் நீங்கி மனத்திடம் ஏற்படல், அரசாங்க உதவிகிடைத்தல், தொழில்விருத்திக்கு நடவடிக்கை எடுத்தல், வர்த்தகத் துறையில் ஆதாயப்பெருக்கும் தொழில்விருத்தியும் காணப்படல், கமத்தொழிலாளருக்கு குடும்பத்தில் உடல்நலக்குறைவும் கஷ்டமும் காரணமாக பயிர்த்தொழில் சுணங்குதல், பணமுடைகாணப்படல், உத்தியோகத்தினருக்கு - நற்பெயர்-நற்பதவி உயர்வு, பணவசதி கிடைத்தல், மாணவருக்கு மாதுருவழிஉதவியும் கல்வியில்

(10ம் பக்கம் பார்க்க)

## மாபெரும் திறந்தவெளி சினிமாத் தியேட்டர்

மோட்டார் வண்டியில், தன் காதலி, தான் வளர்க்கும் நாய் இவர்கள் சகிதம் வந்து இருந்த இடத்திலிருந்தபடியே சிகரெட் பிடித்துக்கொண்டு சினிமா பார்க்கும் வசதியளிக்கும் மாபெரும் திறந்தவெளி தியேட்டர் மேற்குஜெர்மனியில் பிராங்க்பர்ட்டில் முதன் முதலாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பிராங்க்பர்ட் (டாட்) — கிரேவன்பர்க் என்ற இடத்தில் மோட்டார் காரிலிருந்தபடியே தன் காதலி அல்லது மனைவி, குழந்தை, வளர்க்கும்நாய் இவர்கள் சகிதம் ஆனந்தமாக சினிமாபடம் பார்க்கும் தியேட்டர் ஏற்படுத்தப்பட்டு சென்ற இரண்டுவருடங்களாக நடைபெற்று வருகிறது. நாளுக்கு நாள் இதற்குப் பேராதரவு அதிகரித்து வருகிறது. ஒரு தடவை இந்த சினிமாவிற்கு வருபவர்கள் மறுமுறை வரத் தவறுவதில்லை. மேற்குஜெர்மனியில் இம்மாதிரி திறந்தவெளி தியேட்டர் இதுவே முதலாவதாகும்.

சாதாரணமான சினிமா தியேட்டராக இருந்தால் உள்ளே சிகரெட் பிடிக்கக் கூடாது, நாய்களைக் கொண்டு வரக்கூடாது என்றெல்லாம் கட்டுப்பாடுகள் இருக்கும். இந்தத் திறந்தவெளி சினிமா தியேட்டரில்அம்மாதிரிக்கட்டுப்பாடுகள் எதுவும் இல்லை. பின்னல் இருப்பவர் முன்வரிசையிலுள்ள சீமாட்டியிடம் 'திரை மறைக்கிறது; உங்கள் தொப்பியை எடுங்கள்' என்று கேட்கவேண்டியஅவசியமில்லை. படம் பார்த்ததுபோதும் என்ருல் மோட்டாரை திருப்பிக் கொண்டுபோய்விடலாம்.

பிராங்க்பர்ட் நகருக்கு அருகாமையில் 20,262ஏக்கரா விஸ்தீரணமுள்ள பூமியில் இந்த சினிமா தியேட்டர் நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. அழகிய காட்சிகள் கொண்ட இயற்கையழகு பொருந்திய இடத்தில் இது அமைக்கப்பட்டுள்ளது. எந்த இடத்திலிருந்து பார்த்

(11ம் பக்கம் பார்க்க)

## குப்பைத் தொட்டிகளாகும் சுரங்கங்கள்

வட ஜெர்மனியில் எல்ப்நதிக்கும் எம்ஸ் நதிக்குமிடையே சுமார் 200 உப்புச் சுரங்கங்கள் இருந்துவருகின்றன. இவைகளில் சில பயனற்றவையாக இருந்து வருவதால் கதிரியக்க கழிவுப்பொருட்களை இந்தச் சுரங்கங்களில் போட்டு அடைத்துவிடலாம் என்று விஞ்ஞானிகள் யோசனை கூறியுள்ளனர்.

கதிரியக்க கழிவுப்பொருள்களை எப்படிப்பைசல் செய்வது என்ற பிரச்னை மாஸ்கோ, நியூயார்க் முதலிய இடங்களிலுள்ள விஞ்ஞானிகளுக்குப் பெருந் தலைவலி கொடுத்துவருகிறது. வியன்னவில் கூடிய சர்வதேச அணுசக்திக் கமிஷனிடம், மேற்கு ஜெர்மனி பூமிக்கடியில் சுரங்கத்தில் போட்டு அடைத்துவிடலாம் என்று யோசனையைத் தெரிவித்துள்ளது. இதுவரை இக்கழிவுப் பொருள்கள் கடலிலேயே போடப்பட்டு வந்திருக்கின்றன. ஆனல் இதுவும் தக்க ஏற்பாடாகக் காணப்படவில்லை.

பூமிக்குள் இக்கழிவுப் பொருள்களைப் புதைப்பதிலும் சில விஷயங்கள் கவனிக்கப் படவேண்டும். பூமியின் அடியிலுள்ள ஊற்றுகளில் இக்கதிரியக்கம் கலக்காமல் பார்த்துக் கொள்ளவேண்டும். உப்புச் சுரங்கங்கள் இவைகளைப் போட்டுவைக்க ஏற்ற இடங்கள். இச்சுரங்கங்கள் ஐரோப்பா முழுவதிலும் ஒதுக்கப்படும் கதிரியக்கக் கழிவுப் பொருள்களைப் போட்டு மூடிவிடப் போதுமானவை.


## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நகரசபை எல்லைக்குள், பண்ணையிலிருந்து கால் மைல் தொலைவில் (பீச்ரோட், கொட்டடி), 28 பரப்பு (நெற்பரப்பு) காணி (தென்னைகளுடன்) விற்பனைக்கு உண்டு. விரும்புவோர் கீழ்க் காணும் விலாசத்தில் கலந்து கொள்க:- A. R. ஆறுமுகம், 102, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். 785

### வீடு வாடகைக்கு

கொக்குவில் கிழக்கு, கோவில் வீதியில் உள்ள எமது வீடு வாடகைக்குக் கொடுக்கப் படும். தண்ணீர் சேவை முதல் சகல வசதிகளுமுண்டு. றெயில்வே, பஸ்நிலையங்கட்கு அருகாமையிலுள்ளது. விபரங்கட்கு, விவேகானந்தா றெக்ஸ்ரைல்ஸ், பெரியகடை, யாழ்ப் பாணம். 791

### தொய்வு: நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய சுற்ற லோக் இனம். தொய்வுக்கு 10நாள் மருந்து 12/50. நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50.

வைத்தியர் பரிபூரணநந்தர், கலாயபிள்ளையார்கோவிலடி. [illegible]பாணம்

### வீடு விற்பனைக்கு

மூன்று படுக்கையறை, ஒரு 'ஆபீஸ்' அறை, ஒரு 'ஸ்டோர்' றூம், சமையலறை, குழாய்த் தண்ணீர், மின்சார வசதி, வடிகால் வாய் வசதியுமுடைய 1954-ம் ஆண்டில் நவீனமுறையில் கட்டப்பட்ட 'திலக நிவாசா' என்னும் ஒரு வீடு 6 பரப்புக் காணியுடன் நவாலி வடக்கு மானிப்பாயில் விற்பனைக்கு உண்டு. விபரங்கட்கு: எஸ். முருகேசன், 31, முதலாம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம் அல்லது புரக்டர் திருநாவுக்கரசு, ஆனைக்கோட்டை. 788

### வீடு வாடகைக்கு

வண்ணார்பண்ணை, தட்டா தெருச் சந்திக்கு அண்மையில் ஐயனர்கோயிலடி வீதியில் எல்லா வசதிகளுடனும் உள்ள 28/1 இலக்க வீடு வாடகைக்குக் கொடுக்க இருக்கின்றது. தேவையானேர் கீழ்க்காணும் விலாசத்தில் அறியலாம். இந்துக் கல்லூரிக்கும், இந்து மகளிர் கல்லூரிக்கும் அண்மையில் இவ்வீடு இருப்பது குறிப்பிடத்தக்கது. தா. நவரத்தினம், (இளைப்பாறிய விதானையார்) ஐயனர் கோயிலடி, வண்ணார் பண்ணை. 799

### ஆசிரியை தேவை

தராதரப்பத்திரமும், அனுபவமும் உள்ள மொண்டிசூரி ஆசிரியை ஒருவரும், றெஸ் மேக்கிங் திறமையுடன் செய்யக்கூடிய ஒருவரும் தேவை. கீழ்க்காணும் விலாசத்திற்கு மனுச்செய்யவும்.

### தேவை

றெஸ் மேக்கிங், பாவைகள் செய்தல், பெயின்ரிங், எம்பிராய்டறி, பூக்கள் செய்தல் முதலிய வகுப்புகளில் சேர விரும்புவோர் விபரங்கட்கு எழுதுக். ஆசிரியை, 97 பலாலி ரோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். 798


### யௌவனத்தின் அற்புதம்

இந்தப் பூலோகத்தில் அற்புதமான சரக்கு யௌவனம்! யௌனத்தைப் போல் வேறொன்றுமில்லை. மத்திய வயதினர் வாழ்க்கைக்குஅடமானம் வைக்கப்பட்டவர்கள். கிழவர்கள் வாழ்க்கையின் கிடங்கில் இருப்பவர்கள். வாலிபர்களோ வாழ்க்கையின் பிரபுக்கள்!

— அஸ்கார் வயில்ட்

**அடுத்த வீட்டுப் பிள்ளைகள் அழகான மூன்று சில்லுச் சைக்கிளில் ஓடி விளையாடும் காட்சியைக் கண்ட சந்திரனின் பிஞ்சு உள்ளமும் அந்தச் சைக்கிளைச் சுற்றி ஓடுகிறது ....**

**"வாம்மா... அதை வாங்கித் தாம்மா.."**

**அன்னம்— அவள் என்ன செய்வாள்... குழந்தைக்குச் சைக்கிள் கிடைத்துவிட்டது.... ஆம்! அவனுகத் தேடிக் கொண்ட சைக்கிள்... தென்னை மரத்தின் வளைந்த ஓலை மட்டை அவனது சைக்கிள்... ஆனால்...**

# நினைவும் நிழலும்

## சிறுகதை

### இ. செ. கந்தசாமி

தீவிட்டையும் பிண்ணாக்கையும் பிசைந்து குழைத்து ஆட்டுக்கு வைத்துக்கொண்டிருக்கிறாள் அன்னம்.

குழந்தை சந்திரன் அவள் பக்கத்தில் வந்துநின்று, வலது கையால் அவளுடைய தோள்ப் பட்டையைப் பற்றிய வண்ணம் இடதுகையால் தன்னுடைய தலையைச் சொறிந்து சிணுங்குகிறான்.

தளர்ந்துகிடந்த தாவணிச் சேலையை ஒதுக்கிச் சரிசெய்துகொண்டு "என்ன ராசா" என்று கேட்டபடியே அவனுடைய முதுகை வருடுகிறாள். கையை வெறுப்புடன் தட்டிவிட்டு "அங்கைவாம்மா" என்று தெற்குப் புறத்தை நோக்கிச் சுட்டுவிரலால் காட்டுகிறான்.

"அங்கை என்ன ராசா?"

முதுகை வருடியபடியே அன்னம்கேட்கிறாள். சிணுங்கல் ஒலி பலத்தது. "அங்கை வாம்மா" என்று மறுபடியும் முனகிய சந்திரன் ஏதோ சொல்லத்திக்குமுக்காடுகிறான். அன்னம் அவஸ்தைப் படுகிறாள்.

"வாம்மா ... வாம்மா ..."

பிஞ்சுச்கையால் தாயாரின் முந்தானைச் சேலையைப்பற்றியபடியே இழுத்துக் கொண்டு வருகிறான்.

பக்கத்து வளவு அது. தரை மட்டத்திலிருந்து ஒருஅடி பரிமாண இடைவெளிவிட்டு முட்கம்பி அடித்து அதன்மேல் தகரத்தால் அடைக்கப்பட்டிருந்தது வேலி.

தாயாரை இழுத்துக் கொண்டு வேலியண்டைவந்து விடுகிறான். குந்திக்கொண்டிருந்து தாயாருக்கு அடுத்தவளவைக் காட்டுகிறான். பின் திரும்பி தாயாரின் முகத்தை அண்ணாந்து நோக்குகிறான். அந்த நோக்கில் உணர்ச்சிக் கீறல்கள்நெளிந்தோடுகின்றன.

அன்னம் உடம்பை வில்லாக வளைத்துக்குனிந்துபார்க்கிறாள்.

... ... ?

மூன்றுசில்லுகளுள்ள சிறிய சயிக்கிளில் அடுத்த வீட்டுப் பிள்ளைகள் ஓடித் திரிகிறார்கள். மாமரத்தைச் சுற்றிச் சுற்றி ஓடுகிறார்கள்.

சிவப்பும் நீலமும் கலந்துபுது மெருகுடன் மின்னும் அந்த சைக்கிள் – அதில் கிணீர்கிணீர் என எழும் மணியோசை ...

சந்திரனின் மனமும் அதைச் சுற்றி ஓடுகிறது.

"வாம்மா ...அதை வாங்கித் தாம்மா."

தாயாரின் இரண்டு கைகளையும் தனது இரண்டுகைகளாலும் உன்னி இழுக்கிறான்.

அன்னம் ஸ்தம்பித்து நிற்கிறாள். சர்வாங்கமும் ஒருகணம் விறைத்துச் சிலிர்க்கிறது.

"அவங்கள் தருவாங்களா. அவங்கடை பிள்ளையளுக்கு வாங்கிக் குடுத்திருக்கு. அது உனக்கு வேண்டாம்ராசா."

வேதனையின் சுமையில்பரிணமித்த வார்த்தைகளுடன் சந்திரனைத் தூக்கி இடுப்பில் இருத்தினாள். தாயாரின் கையை விடுவித்துக் கொண்டு கீழே இறங்கினான். மறுபடியும்குந்தியிருந்து அந்தக்காட்சியை பார்வையால் விழுங்குகிறான். ஆசை அதிகரிக்கிறது.

எழுந்து நிற்கிறான்.

"வாங்கித்தாம்மா ... நானும் ஓடப்போறன்" — கால்களைத் தரையில் உதைத்து தலையை, அசைத்து ஆட்டி, முகத்தைக் கோணிவிகாரப்படுத்திக் கொண்டு அடம்பிடிக்கிறான்.

அன்னம் கூடியமட்டும்தெண்டித்துப் பார்த்துவிட்டாள். அவன் இம்மியும் இசைவதாயில்லை. பலாத்காரமாக அவனைத் தூக்கித்தோளில் போட்டுக் கொண்டு நடக்கிறாள் அன்னம். கையையும் காலையும் உதறி அழத்தொடங்கினான் சந்திரன்.

அன்னத்தின் நெஞ்சக் கூட்டுக்குள் தாளமுடியாத வருத்தம். அவள் நினைவுக்குருவி எங்கோ பறக்கிறது.

கணவனின் நினைவு மனத்திரையில் மானசீகமாகத் தோன்றி உருவெழில் காட்டுகிறது. மாறி மாறித்தென்படும் நினைவின் எழுச்சிகள் அலைகடலாக இரைகிறது.

அவள் கணவன் மாணிக்கம் ஒருடிரைவர். யாழ்ப்பாணவர்த்தக நிலையமொன்றில் லொறி டிரைவராக வேலைபார்த்துக்கொண்டிருந்தவன் — கொழும்பிலிருந்து சாமான்கள் ஏற்றிக்கொண்டு வரும்போது அநுராதபுரத்துக் கருகாமையில் இன்னொரு லொறியுடன் மோதுண்டதால் ... ...

இப்படி நடக்கும் என்று யார்தான் எதிர்பார்த்தார்கள்.

துணைமலர் உதிர்ந்து தனி மலரானாள்.

கணவனுடைய உழைப்பென்ற பாதையில் ஓடிய வாழ்க்கைச் சக்கரம் அகஸ்மாத்தாக அச்சாணி முறிந்தபோது...

அவளின் மனத்தில் கேள்விக்குறி எழுந்து வாழ்க்கைப் பாதையில் வழிகாணும் வெளிச்சத்துக்குப் பூதாகாரமாக நின்றது.

மும்முனைத் தாக்கங்கள் அவளைக் குத்துகின்றன.

குடும்பத்துக்குத் தலைவன்.

அன்னத்துக்குக் கணவன்.

குழந்தைக்குத் தகப்பன்.

இந்த நிலை நிரந்தரமாகிவிட்டது.

வயதின் மூப்பைத் தாக்குப்பிடித்தபடியே "காடு வாவா; வீடு போபோ" என்கிற நிலையில், பிரபஞ்ச வாழ்க்கை நாடகத்தின் முடிவின் முனையை எட்டிப்பிடிக்கப் 'பந்தயம்' போட்டுக்கொண்டு பாயோடு-நோயாகக் கிடக்கிறாள் அன்னத்தின் தாய். மூன்று ஜீவன்களுடைய வயிற்றுப்போராட்டத்துக்குத் தன்னைப் பணயமாக்கிக்கொண்டாள். நாய்படாப் பாட்டுக்குப் பிறகு ஒரு மில்லில் வேலையாளாகச் சேர்ந்துவிட்டாள்.

சந்திரன் அம்மணக்கோலத்துடன் தான் திரிவான். மேலிலே சட்டை போடுவதென்றால் அவனுக்கு ஒரே 'அரியண்டம்.'

அடுத்த வளவின் வேலியிலிருந்த சிறிய கண்டாயத்தால் வளவுக்குள் நுழைந்து மாமரத்தின்கீழ் உதிர்ந்து விழுந்து கிடக்கும் மாம்பிஞ்சுகளைப் பொறுக்கிக்கொண்டு வருவான்.

ஒருநாள்—

மாம்பிஞ்சுகளைப் பொறுக்கி ஓரிடத்தில் குவித்துவிட்டுச் சற்றுத் தூரத்தில் கிடந்த ஒரு பேணியை எடுத்துவந்து மாம்பிஞ்சுகளை அதற்குள் திணித்துக்கொண்டிருந்தான். அப்போது அவ்விடம் வந்த அந்த வீட்டுப் பையன் 'எங்கடை பேணியை ஏனடா எடுத்தனி, இஞ்சை கொண்டுவா' என்றான்.

பேணியைப் பிடித்து இழுத்து மாம்பிஞ்சுகளையும் காலால் சிதறிவிட்டுச் சந்திரன் முதுகிலும் அடித்துவிட்டான். கண்களைப்பிசைந்துகொண்டு அழத்தொடங்கினான் சந்திரன். அடுக்களையிலிருந்து சமையல் செய்துகொண்டிருந்த அன்னம் சந்திரனின் அழுகுரலைக் கேட்டதும் உடனே எழுந்து ஓடினாள். அந்த வீட்டு வேலைக்காரப்பெண் கிணற்றடியிலிருந்து தண்ணீர் அள்ளிக்கொண்டு வந்தவள் அங்கு நடந்ததைக் கண்டுவிட்டுச் சந்திரன் அருகில் வந்து மாம்பிஞ்சுகளைப் பொறுக்கிப் பேணிக்குள் போட்டு "இந்தா கொண்டுபோ" என்று கொடுத்தாள்.

அன்னம் வேலிக்கருகாமையில் வந்துவிட்டாள். "இனிமேல் நீ அங்கை போகக் கூடாது ராசா. உனக்கு அந்த மாம்பிஞ்சுகள் வேண்டாம்."

சந்திரனின் மூக்கால் வழிந்திருந்த சளியையும் கண்களிலிருந்து வந்த கண்ணீரையும் சேலைத்தலைப்பால் துடைத்துக் கொண்டாள்.

சந்திரன் 'உம்'மென்று தலையசைத்தான்.

அன்று தொடக்கம் சந்திரன் மாம்பிஞ்சுகள் பொறுக்குவதற்குப் போவதில்லை. பிள்ளைகள் விளையாடும் ஒலியும் கலகலப்பும் கேட்டால் வேலிக்குப் பக்கத்தில் போயிருந்து பார்த்துக்கொண்டிருப்பான். பார்த்துக்கொண்டிருக்கும் போதுதான் அந்தக் காட்சியைக் கண்டான்.

சந்திரன் மனதில் வரவர ஆசை விஸ்வரூபமெடுத்து விரிகிறது. குழந்தையின் சின்னஞ்சிறிய உள்ளம் அந்தச் சயிக்கிளில் ஏறிச் சவாரிசெய்யத் துருதுருக்கிறது. குழந்தை உள்ளம் எதற்கும் கட்டுப்படுமா?

அவன் துளியும் கேட்பதாயில்லை.

"சயிக்கிளை வாங்கித் தா, வாங்கித் தா" என்றே அடிக்கடி கரைச்சல் கொடுத்தான். அன்னத்தின் மனப்பீடம் தழல் பிழம்பாகச் சுட்டது. தாயுள்ளமல்லவா?

'அடுத்த வீட்டுப்பிள்ளை சயிக்கிளில் ஏறிச் சவாரிசெய்யும்போது என்னுடைய குழந்தைக்கும் அந்த ஆசை இருக்கத்தானே செய்யும். அதுகள் பணக்காரவீட்டுப் பிள்ளைகள்.' துக்கத்தின் கொந்தளிப்பால் இமை வட்டத்துள் கண்ணீர்த் துளிகள் துளும்பியது. நெஞ்சறைக்குள் பெரிய பாரம் அழுத்துவது போன்ற நோவும், அதன் நசிவாலும் உராய்வாலும் ஏற்படும் வலியும்......

கனவுபோல நடந்து கழிந்த கணவனின் பிரிவு, அதனால் சூழ்ந்த இருள், மனத் தகிப்பு, வாழ்க்கைத் தவிப்பு.

தலைவிறைத்துக் கனக்கிறது. 'அவர் இருந்தால் குழந்தை கேட்டதையெல்லாம் வாங்கிக் கொடுப்பாரே! ஐயோ கடவுளே, நான் என்ன செய்வேன்...'

பொருமினாள்.

புழுங்கினாள்.

துடித்தாள்.

'சீ குழந்தையின் ஆசையைத் தீர்க்கமுடியாத வக்கற்ற நிலைமை...'

"அம்மா... அம்மா சயிக்கிள்" என்ற பிதற்றலோடு சந்திரன் நித்திரை கலைந்து எழுகிறான். பக்கத்தில் ஏதோ தடவுகிறான். சுற்றும் முற்றும் பார்க்கிறான். இரண்டு புறங்கைகளாலும் கைகளைப் பிசைகிறான்.

நினைவு மீள்கிறது.

"அங்கை வாம்மா... அதை வாங்கித் தாம்மா"—பழைய பல்லவியை மீண்டும் பாடத் தொடங்குகிறான். பராக்காக வேறு வார்த்தைகளைக் கூறி அந்த எண்ணத்தை மறக்கச் செய்வதில் முனைந்து படுதோல்வியடைந்தாள் அன்னம்.

இடையிடையே அந்த எண்ணம் கலைந்து விளையாடிக் கொண்டிருப்பான்.

குழந்தைகளின் விளையாட்டு ஒலியும் ஆரவாரமும் சந்திரனின் செவியில் மோதியடியும் வேளையில் அந்த எண்ணம் பழையபடி வேதாளம் முருக்க மரத்தில் ஏறிய கதையாகத் தான் முடியும்

கால்களை முன்னால் நீட்டியபடி விரித்துவிட்ட கூந்தலைத் துளாவி 'ஈர்கொல்லியால்' பேன்களை வாரி 'ஸ்ஹ ஸ்ஹ' என்ற ஓசை நுதம்பும் ஒருவித ஒலிவடிவில் 'சம்ஹாரம்' செய்துகொண்டிருக்கிறாள் அன்னம்.

வான்முகட்டில் சூரியனின் செம்முகம் தெரியவில்லை. ஒரே மப்புத் தன்மை. தாவி ஓடிவரும் முகிற்கூட்டங்கள் ஒன்றையொன்று ஆலிங்கனம் செய்துகொள்கின்றன. இலேசான ஒரு காற்று. உடம்பு ஜில்லிடுகிறது. வானம் முழுமையும் கருமையுள் தோய்ந்துவிட்டது. "டும்டொடோம்" - வானமங்கை பிரசவ வேதனையால் குளறுகிறாள்.

மயிரிழைத் துளிகள் பிசுபிசுக்கத் தொடங்குகின்றன. இலேசாக விழுந்த தூறல் மழையுருக்கொண்டு கனத்தது.

அப்போது சந்திரன்—

இளந்தென்னை மரமொன்றின் மட்டை சரிந்து - வளைந்து தரையை முத்தமிட்டுக்கொண்டிருந்தது. சந்திரன் அதற்குமேல் ஏறியிருந்துகொண்டு... 'அம்மா இஞ்சை சயிக்கிள்'—தான் சயிக்கிள் ஓடுகிறானாம். பாற்பற்களைக் காட்டிச் சிரிக்கிறான். அவனுக்கு சயிக்கிளில் ஏறிச் சவாரி செய்வதுபோன்ற உணர்ச்சிப் பிரமை. மழை கொட்டியதைக் கூடப் பொருட்படுத்தவில்லை. பதறித் தவித்து ஓடிய அன்னம் அவனைத் தூக்கிக்கொண்டுவந்து விறாந்தையில் நிறுத்துகிறாள். தலை நன்றாக நனைந்திருந்தது. ஒரு துணியால் ஈரத்தைத் துவட்டி எடுக்கிறாள்.

அன்றிரவு—

சந்திரனுக்கு உடம்பு கணகணவென்றிருந்தது. மழையில் நனைந்து சுவறிய ஈரம்தான் உடம்புக் கொதிக்குக் காரணம். இது அன்னத்துக்குத் தெரியும்.

இரவின் பொழுது ஆமை வேகத்தில் நகர்ந்துகொண்டேயிருக்கிறது.

கொத்தமல்லியை எடுத்து - அவித்து அந்த நீரைத் தெளித்து சீனியும் போட்டு சந்திரனுக்குப் பருக்குகிறாள். மடமடவென்று அவ்வளவையும் குடித்துவிடுகிறான். அந்த அந்தரித்த இரவில் அதைத்தவிர வேறெதை அவளால் செய்ய முடியும்?

இடையிடையே இரவின் அமைதியைக் கிழித்துக்கொண்டு சந்திரனின் முனகல் சத்தம் கேட்கிறது. குழந்தையின் தலைமாட்டில் இருந்துகொண்டு என்னவெல்லாமோ யோசித்து அழுதுகொண்டிருக்கிறாள்.

விடிவிளக்கு அணைகிறது.

இருளின் சாவில் உதயமாகும் கதிரவன் கீழ்வானில் சிரித்து வருகிறான். ஒளிக்கற்றைகள் உலகத்தாயின் மேனியை வருடுகின்றன

எங்கும் புத்தொளி—கலகப்பு—ஆரவாரம்.

அன்னத்தின் முகம் சலனமற்றுக் கிடக்கிறது, ஒளியிழந்த விழிகள்; அதிலே ஏக்கத்தின் சாயல்.

சந்திரனின் நெற்றியிலும் நெஞ்சிலும் கையை வைத்துப் பார்க்கிறாள். உடல் தணலாய்க் கொதிக்கிறது. அவள் நெஞ்சு படபடவென்று பயத்தால் அடிக்கிறது இதற்கு முன் இப்படியொரு தகிப்பை அவள் கண்டதேயில்லை.

சந்திரனை உடனே டாக்டரிடம் கொண்டு செல்ல வேண்டும்... ஊசிக்கும் கலவை மருந்துக்கும் பணம் வேண்டுமே! யாரிடம் போவது? எவரிடம் கேட்பது?

அன்னத்தின் மனவெளியில் ஆட்டின் உருவம் வந்து நிற்கிறது. அன்புடன் வளர்த்த ஆடு அதிலிருந்துதான் பெறப்போகும் ஆதாயங்களை நிரைப்படுத்தி வைத்திருந்தாள். இன்னும் இரண்டு மாதங்கள் சென்றால் தாயும் குட்டியும். குட்டி துள்ளித்திரிய தாயோடு அதன் முதுகில் நாக்கால் தடவும் தாய்மையுணர்ச்சி.

அந்தத் தாய்மையுணர்ச்சியும் அன்னத்தின் தாய்மையுணர்ச்சியும் மனக்களத்தில் போராடுகின்றன!

நாலைந்து வீடுகளுக்கு அப்பாலுள்ள ஒருவர் அந்த ஆட்டின்மேல் கண்வைத்திருந்தார். பலமுறை கேட்டுமிருக்கிறார். என்னதான் வந்தாலும் ஆட்டை விற்பதில்லை என்று சங்கற்பம் பூண்டிருந்தவள்—

சந்திரனின் நிலை மனதைக் குடைகிறது.

அன்னத்தின் தாய்மையுணர்ச்சி தவிக்கிறது.

தொழுவத்தில் கட்டியிருக்கும் ஆடு அசை போட்டபடியே நிற்கிறது. ஆட்டின் அருகில் செல்கிறாள். கைகள் நடுங்குகின்றன. அவிழ்த்துக் கொண்டு நடக்கிறாள்.

"அம்மா ஆட்டை எங்கை கொண்டு போறாய்?"—சந்திரனின் வரண்ட தொண்டையிலிருந்து கரகரத்த கேள்வியொலி எழுகிறது.

'எதைச் சொல்வது?'

அன்னம் மரணவஸ்தைப் படுகிறாள். நாக்குத்தளதளத்து புரள மறுக்கிறது.

(9-ம் பக்கம் பார்க்க)

பூமியின் வரலாறு–2

# அதிக மழை பாறைகளை சிதையவைக்கும் அதிசயம்

— தெல்லியூர் செ. நடராசா —

இயற்கையாக மாறுதலடைந்துகொண்டு வரும் மண்ணானது இடையறாது பல பொருள்களை ஏற்றுக்கொள்வதுடன் பல பொருள்களை இழந்துகொண்டும் வருகின்றது. கடும் வெய்யிலினால் உட்டணமூட்டப் பெற்ற பாறைகள் மீது மழை பொழியும்போது மேற்புறம் விரைந்து சுருங்க, உட்புறம் சுருங்காதிருக்க, இப்பாறைகள் உள்ளடக்கியவுலோகப் பொருள்களிடையே போர்மூள, பாறைகள் பிளக்கின்றன. இடியும் மின்னலும் ஏற்படும் காலங்களில் மழையும் பொழியும்போது காற்றிலே உள்ள நைதரசன் வாயுவானது அமோனியமாகவும் நைதரச அமிலமாகவும் மாறி பாறைகளது சிதைவுக்கு உதவுகின்றது. கற்பாறைகளிடையே பெய்யும் மழைநீரானது பாய்ந்து செல்கையில் அவற்றைப் புரட்டி உடைத்துத் தள்ளுகின்றது. இப்பாறைகள் ஒன்றோடொன்று மோதும்போது உடைகின்றன. உடையும் பாறைகள் வெள்ளத்தோடு அள்ளுண்டு செல்கின்றன.

இவற்றைவிட, கற்பார்களும் புல்பூண்டுகளும் விலங்கினங்களும் அழிந்துபோக, அவற்றின் அமிசங்கள் மண்ணுடன் சேர, அவற்றையும் மழைநீரானது வாரிக்கொண்டோடுகின்றது. ஓடும் நீரானது பள்ளத்தாக்குகளுக்கு இப்பொருள்களைக் கொண்டு சேர்க்கின்றது. திடரான பாறை நிலங்களிலிருந்து நீரோடு அள்ளுண்டு வரும் மண்ணானது வாவி குளங்களுள் நிரம்புகின்றன. மலைப்பாறைகள் தேய்ந்துபோக ஓடும் நீரானது அள்ளுண்டுவரும் மண்ணை பள்ளத்தாக்குகளுள் கொண்டு சேர்க்கின்றது. நீரோட்டமானது வளைவுகள் உள்ள இடங்களிலே பொடிக் கற்களையும் மண்ணையும் அடையச் செய்து பின்னர் ஆழமற்ற நீரிலே மென்மையான மண்ணையும் களிமண்ணையும் ஒதுக்கிவிடுகின்றது. இப்படியான மணற்றிடர்கள் ஆறுகளது முகத்துவாரங்களில் காணக்கூடியதாக இருக்கின்றன. நீரோட்டத்தினால் தரைக்கு நன்மையுண்டாவது போல தீமையுமுண்டு. ஆறுகளுக்கு அணித்தாகவுள்ள சமநிலைகளிலே வளம்பொருந்திய சேறு அடைந்து அப்பிரதேசத்தை செழிப்பாக்குகின்றது. கமத்தொழிலுக்கு இவ்வாறு ஆறுகளால் கொண்டு வரப்படும் மண் மிகவும் உகந்ததாகும். இவ்வாறு மண்ணை அகற்றுவதுடன் நீர்ப்பாய்ச்சலானது கற்பாறைகளையும் தேய்த்துவிடுகின்றன. நீரிலே கலந்திருக்கும் எல்லாவித உலோகப் பொருள்களும் கற்பாறைகளைக் கரைப்பதற்கு உதவுகின்றன.

### கற்பாறைகளை காற்று தகர்க்கிறது

கடல் அலைகளும் அருகே இருக்கும் கற்பாறைகள் மீது மோதுவதால் அவைகளைத் தகர்த்து துகள்களாக்கிவிடுகின்றன. இவ்வாறு ஏற்படும் துகள்களை அலைநீரானது கரையிலே ஒதுக்கிவிடுகின்றது. இதனைவிடக் காற்றும் கற்பாறைகளைத் தகர்த்து மண்ணாக மாற்றுதற்கு பேருதவி செய்கின்றது. சுழல்காற்றாக வேகமாக அடிக்கும் காற்றான மணல்களை அள்ளிச்சென்று கற்பாறைகளிலே மோதி அவற்றைத் தகர்க்க உதவுகிறது. துகள்களாக கரைகளில் கிடக்கும் மண்ணைக் காற்று அள்ளிச்சென்று கும்பலாக பல இடங்களிலும் திடர்போல ஒதுக்கிவிட்டிருப்பதை காண்கின்றோம். மழை குறைவான இடங்களிலும் கடலைச் சார்ந்த இடங்களிலும் செழிப்பான தரைகள்கூட மண்ணால் மேடிட்டிருப்பதைக் காணலாம். வரட்சியான பிரதேசங்களிலே மண்ணணுக்களை கோடிக்கணக்காக காற்றானது அள்ளி வீசுவதால் கற்பாறைகள் தேய்ந்து மண்ணோடு மண்ணாகின்றன.

பயிர்கள் மண்ணிலே உண்டாவதால் ஆண்டுதோறும் அம்மண்ணைச் செழிப்படையச் செய்கின்றன. மரஞ்செடிகொடிகளிலிருந்து உதிரும் இலைகள் சருகாகி நிலத்திலே படைபடையாகச் சேர்ந்து அடைகின்றன. புற்றரைகளிலுள்ள புற்கள் அற்றுப்போகும்போது அவைகளது சாரமானது காலஞ்செல்லச்செல்ல மண்ணுடன் சேர்ந்துவிடுதலினால் தேவையற்ற களைப்பூண்டுகள்தான் ஆங்காங்கு தோன்றுகின்றன. பாறைகளின் வெடிப்புக்களிடையே தோன்றும் மரங்களது வேர்கள் அப்பிளவுகளைத் தொடர்ந்தே அதிகமான ஆழத்துக்கு வளர்கின்றன. அவ்வேர்களது வளர்ச்சியின் வலிமையானது அப்பாறைகளைப் பிளவுபடுத்தி சிதறச் செய்கின்றன. மரவேர்களிலிருந்து ஒருவித புளித் திராவகம் தோன்றுகின்றது. அத்திராவகமானது கற்பாறைகளை அரித்துக் கொள்வதற்கு உதவுகின்றது.

### மண்ணுக்கும் பிராணிகள் மண் சேர்க்கின்றன

மண்ணின் உற்பத்திக்கு பிராணிவர்க்கமும் பெருந்தொண்டுகளாற்றுகின்றன. அதே பிராணிகள் இறுதியில் அம்மண்ணுக்கே சேருகின்றன. மிருகங்களும் இதர பிராணிவர்க்கங்களும் காலத்துக்குக் காலம் இறக்கும்போது மண்ணுடனேயே சேர்ந்துவிடுகின்றன. எலி, அகழான், எறும்பு, மண்புழுக்கள் முதலியவைகள் யாவும் ,மண்விருத்திக்குப் பெரிதும் உதவுகின்றன. நிலத்தின் கீழ்ப்படையிலுள்ள மண்ணை மேலே கொண்டுவந்து மண்ணினது அணுச் சேர்க்கையில் மாற்றத்தை ஏற்படச் செய்கின்றன. மண்ணுக்குள்ளே காற்றானது புகுந்து அடிப்படை வரையும் செறிந்துள்ள மண்ணிலே பெரிய அணுமாற்றத்தைக் கொண்டுவருதற்கு இவைகள் தோண்டும் அளைகள் உதவுகின்றன. பயிர்களுக்கு அழிவைவிளைக்கும் எலி, அகழான் முதலியவைகள் மண்ணது அபிவிருத்திக்குப் பெரிதும் உதவுகின்றன. கீழ்ப்படையிலுள்ள மண்ணை அகழ்ந்து மேற்படைக்குக் கொண்டுவருவதனால் நிலத்திலே மண்ணது ஈரலிப்புக்காய நீரும் அதன் விருத்திச் செழிப்புக்காய காற்றும் செறிகின்றன. மண்ணினுள்ளும் எரு முதலிய குப்பைகளுள்ளும் 'நாக்கிளிப்புழு','மண்ணுண்ணிப் பாம்பு முதலியவற்றைக் காண்கின்றோம். இவைகளால் மண் தரையானது பெரிதும் பயன்படுகின்றது. கீழ்த்தரையிலிருந்து மேற்தரைக்கு இவைகள் கொண்டுவரும் மண் மிகவும் செழிப்பானதாகஇருப்பதுடன் இவ்விடங்களிலேவளரும் செடிகொடி மரங்களது வேர்கள் இலகுவாக நிலத்துள்ளே படர்ந்து செல்வதற்கு இவைகள் தோண்டி வைத்துள்ள புற்றுக்கள் பெரிதும்உதவியாகவும் இருக்கின்றன. இவ்வளைகள் சில சமயங்களில் பலவடிகளாழத்துக்கும் செல்வதுண்டு. இவ்வளைகளைத் தொடர்ந்து மரவேர்கள் கீழ்த்தரையை அடையவும் இவை மூலமாக நிலத்தினூடாகக் காற்றுச்செறியவும் இடமுண்டாகின்றது.

### மழையினால் ஏற்படும் மண்!

இவ்விதமான மாற்றங்களுடன் மிகமுக்கியமான பிறிதொருவிடயமும் எங்களது அவதானத்துக்கு எடுக்கப்படல் வேண்டும். முன்னதாக நாம் எடுத்தாண்டுள்ள சிதைவுகள் யாவும் இயற்கையாக நடப்பவைகளாகவும் அவற்றால் பாறைப்பொருள்களது உருமாற்றமேற்படுகின்றதே தவிர வேறுமாற்றங்களேற்படுவதில்லையென்றும் கண்டோம். இச்சிதைவுகளிலே பல இரசாயனச் செயல்களாலும் ஏற்படுகின்றன. நீரோடு சம்பந்தப்பட்டே இரசாயனச்சிதைவுகள் ஏற்படுகின்றன. பாறைகளிலுள்ள உலோகப்பொருள்களில் இலகுவாகக் கரையக்கூடியவைகள் முதலிற்கரைந்து வெளியேற, அவற்றால் காலியாக்கப்பட்ட வெற்றிடங்களிலே இரசாயனச் செயல்கள் நடக்க இடமுண்டாகின்றது. பாறைகளிலுள்ள உலோகப்பொருள்களைக் கரைப்பதற்கு மழைநீரோடு கலக்கும் காற்றிலுள்ள கரியமலவாயு, அமோனியா, நைதரசன் முதலியவைகள் உதவுவதை முன்னர்குறித்துள்ளோம். இவற்றிலே கரியமலவாயு மிக முக்கியமானதாகும். இது சுண்ணும்புக் கற்களைக் கரைத்து மண்ணின் அடிப்படைக்கு கொண்டுசெல்கின்றது. அவ்வாறு கொண்டுசெல்லப்படும் சுண்ணமானது பழையபடி சுண்ணும்புக்கல்லாக மாறுகின்றது. ஒழுங்கான உருவமற்ற சுண்ணக்கல் முண்டுகள் இவ்வாறே உண்டாகியிருக்கின்றன. பிராணவாயுவானது நீருடன் சிறிது கரைந்து பல உலோகப் பொருள்களையும் பஸ்மமாக்குகின்றது. இரும்பு சேர்ந்த பொருள்கள் கலபமாக பஸ்பமாகும் வேளையில் கந்தகம் சேர்ந்த பொருள்கள் கந்தகாமிலமாக மாறி உலோகப் பொருள்களை சிதைக்க உதவுகின்றது. இவற்றைவிட நிலத்திலேயுள்ள அங்ககப் பொருள்கள் மக்கிமடியும்போது பலவித அங்கக அமிலங்கள் உண்டாகின்றன. இவையெல்லாமே உலோகப் பொருள்களைச் சிதைப்பதற்கு உதவியளிப்பதாயினும் கார்போனிக்கமிலம் மிகமுக்கியமானது. உயர்ந்த வெப்ப நிலையும் அதிகமழையும் பாறைகளை இயற்கையாகச் சிதைய வைக்கின்றன.

### தன்னிடத்து மண்ணும் பிறஇடத்து மண்ணும்

இவ்வாறெல்லாம் உற்பத்தியாகும் மண்ணானது ஒரேயிடத்திலே தங்கியிருத்தற்கு தன்னிடத்து மண் என்றும் காற்று-மழைநீர்-ஆறுகள் முதலியவற்றால் அள்ளி, அரித்துக் கொண்டுவந்து குவிக்கப்படும் மண்ணை பிறவிடத்துமண் என்றும் அழைப்பர். தன்னிடத்து மண்ணைத் தோண்டிப்பார்த்தால் மேற்படையில் நயமுடையதிருதுவானமண்ணும் அதற்கடியில் பருத்த் இம்மிகள் சேர்ந்த மண்ணும் அதற்கடியிலே பல நிலைகளிலுள்ள தகர்ந்த பாறைகளும் கடைசியாக தாய்ப் பாறைகளும் இருப்பதைக் காணலாம். பிறவிடத்து மண் இருக்குமிடத்து மண்ணுடன் எவ்வித தொடர்புடையதாகவும் இருக்கமாட்டாதெனினும் அதன் அணுக்கள் எங்குவந்து சேர்கின்றனவோ அவ்விடத்திலேயே இணைந்துவிடுகின்றன. இயற்கைச்சிதைவு தீவிரமாக நிகழ்வது மேல் மண்ணிலேயேயாகும். அடிமண் முரடாக இருக்கின்றது. மேல் மண்ணானது பதவிதமான மாறுதல்களையும் அடைந்து பலவுக்கும் உதவுகின்றது.

---

# தமிழன்னை

— ஆடலிறை —

அன்னை யொருத்தி எனையீன்ருள்
அவளை யொருத்தி இங்கீந்தாள்
இன்னல் தாங்கி எமையிங்கே
ஈன்ற தாயார் ஏராளம்.

இளமை முதுமை இறப்பென்னும்
இயற்கைச் சுழலில் வீழ்கின்ருர்
அழகும் புகழும் சிலநாளில்
அழிந்து போக மாழ்கின்ருர்.

என்றும் அழியாப் பேருருவாய்
எதிலும் நிறைந்த ஓருருவாய்
அன்னை ஒருத்தி எமைப்பெற்ருள்
அவளைத் தமிழென் றுரைக்கின்ருர்.

இறைவன் ஒருவன் இவ்வுலகில்
என்றும் உள்ள பொருளாவான்
இறைவன் போன்று தமிழன்னை
என்றும் உலகில் வாழ்கின்ருள்.

அவளின் மங்கைப் பருவத்தில்
அவனி யறிய வாழ்ந்திருந்தோர்
தவறி உலகில் வீழ்ந்தொழியத்
தானே தனியாய் நிற்கின்ருள்.

அகமாய்ப் புறமாய் அவள்மலர்ந்தாள்
அரிய குறளாய் அவளுயர்ந்தாள்
திகழும் பத்திச் சுவைமிக்க
தேடற் கரிய கவியானுள்.

அவளை நிதமும் போற்றிடுவோம்
அரியா சனத்தில் ஏற்றிடுவோம்
அவளின் புகழை உலகெல்லாம்
அறியும் படியாய் ஆக்கிடுவோம்.

— ★ —

# இயற்கையே இறைவன்

மு. சுப்பிரமணியம்

இந்த உலக இயற்கையெலாம்
இறைவன் ஆளும் மறைவிடந்தான்
சொந்தமாகத் தான் எதிலும்
தோன்ரு நின்று காக்கின்ருன்

சீறிப் பாயும் காற்றென்ன
சிதறிக் கிடக்கும் அணுவென்ன
வாரி இறைக்கும் கடலென்ன
வளைந்து பற்றும் கொடியென்ன

உயர்திணை அஃறிணைப் பொருளெல்லாம்
ஓங்கி வளரச் செய்கின்ருன்
உயிர்களின் நல்வினைத் தீவினையால்
உய்யும் வகையும் புரிகின்ருன்

நீரில் இறைவன் இருக்கின்ருன்
நெருப்பின் சுடரில் உறைகின்ருன்
பாரின் இயற்கைத் தோற்றமெலாம்
பரமன் அருளைக் காட்டுதன்ரே!

---

# இந்தியாவின் தேசியப் பறவை

சுதந்திரமடைந்த ஒவ்வொரு நாடும் தேசியக்கொடி, தேசிய கீதம் தேர்ந்தெடுப்பதைப் போல தேசியப்பறவைஒன்றையும் தேர்ந்தெடுப்பது வழக்கம். உதாரணமாக பிரிட்டன், அமெரிக்கா, தென்னுபிரிக்கா, இலங்கை, நேட்டால், கனடா, டென்மார்க், ஜெர்மனி, பர்மா, ஹாவாய், ஜப்பான் ஆகிய நாடுகள் முறையே ரெபின், கழுகு, நீலக்கொக்கு, காட்டுக்கோழி, நெருப்புக்கோழி, வாத்து, வானம்பாடி, வெள்ளைக் கொக்கு, மயில், வாத்து, பச்சைக் கொண்டைக் கோழி ஆகிய பறவைகளை தேசியப் பறவைகளாகத் தேர்ந்தெடுத்திருக்கின்றன. இந்நாடுகளைப் பின்பற்றி இந்திய அரசாங்கம் தமது நாட்டுக்கும் ஒருதேசியப் பறவையைத் தேர்ந்தெடுக்க விரும்பியது. அவ்விதமான பறவை ஒன்றைத்தேர்ந்தெடுக்கும் பொறுப்பை இந்திய வன உயிர் பரிபாலன சபையிடம் ஒப்படைத்தது. அந்தச்சபை ஐந்து பிரபல இந்தியப்பறவைகளை அரசாங்கத்துக்குச் சிபார்சு செய்து அவற்றில் ஒன்றைத் தேசியப் பறவையாகத் தேர்ந்தெடுக்கும்படி கூறிவிட்டது. வனஉயிர் பரிபாலன சபை சிபார்சு செய்திருந்த மயில், கருடன், அன்னம், நாரை, கொக்கு ஆகிய ஐந்து பறவைகளில் இந்திய அரசாங்கத்தினர் மயிலைத் தமது நாட்டின் தேசியப் பறவையாக இப்பொழுது தேர்ந்தெடுத்திருக்கின்றனர்.

# கலை அரங்கம்



## நடிகரின் உருக்கமான பேச்சு

இருபத்தைந்து தமிழ்ப்படங்கள் உட்பட நூற்றி நான்கு படங்களில் நடித்துமுடித்துள்ள நடிகர் ஏ. நாகேஸ்வரராவ், சென்னையை விட்டு ஹைதராபாத்துக்குச் சென்று குடியேறத் தீர்மானித்துவிட்டார்.

நன்றி தெரிவித்து விடைபெற அண்மையில் பத்திரிகை நிருபர்களை அழைத்து தேநீர் விருந்தளித்தார்.



தான் தொடங்கவிருக்கும் 'அன்னபூர்ணா டெக்ஸ்டைல்ஸ்' காரணமாகத்தான் ஹைதராபாத்துக்குப் போவதாகவும், தமக்குச் சென்னைமீது எந்தவித வருத்தமும் இல்லையென்றும் அவர் சொன்னார். "சென்னை எனக்கு வாழ்வளித்த நகரம். தாய் போன்றது. தாயை மறக்கமுடியுமா?" என்று உருக்கமாகச் சொன்னவர் இனி தமிழ்ப்படங்களில் நடிக்கப்போவதில்லை என்றும், ஆண்டுக்கு ஒன்றிரண்டு தெலுங்குப் படங்களில் மட்டுமே நடிக்கப்போவதாகவும் சொன்னார்.

தான் நடித்த நூறாவது படமான 'மனிதன் மாறவில்லை' திரையிடப்பட்டபோது, சென்னை சர்வகலாசாலைக்கு இருபத்தையாயிரம் ரூபாய் நன்கொடை அளிப்பதாக அவர் வாக்களித்திருந்தார்.

அந்த நன்கொடையை இம்மாதம் 10ம் தேதி, சென்னை விஜயாத் தோட்டத்தில் நடந்த ஒரு விழாவில், மத்திய மந்திரி கோபால் ரெட்டியார் மூலம், சென்னை முதலமைச்சரிடம் சேர்ப்பித்தார்.

## சிறையில் ராதா!

சிறைக்கம்பிகளுக்குப் பின்னால் எம். ஆர். ராதா நிற்க சிறைக்கு வெளியே தேவிகா கண்ணீரும் கம்பலையுமாக நின்று அவருக்கு ஆறுதல் கூறிக்கொண்டிருந்தார்.

எம். ஆர். ராதா தந்தையாகவும் தேவிகா அவரது மகளாகவும் நடித்த இக்காட்சிமுக்தா பிலிம்ஸ் 'இதயத்தில் நீ' படத்திற்காக டைரக்டர் வி. சீனிவாசனால் படமாக்கப்பட்டது.

இப்படத்தில் ஜெமினிகணேசன் கதாநாயகனாக நடிக்க மற்றும் கே. ஏ. தங்கவேலு, வி. கோபாலகிருஷ்ணன், டி. எஸ். முத்தையா, எம். சரோஜா, குமாரிருக்மணி, லக்ஷ்மிராஜ்யம் ஆகியோர் நடிக்கின்றனர். இப்படத்தின் வெளிப்புறக் காட்சிகள் பூண்டி நீர்த்தேக்கத்தில்சி படமாக்கப்பட்டன.

# ஒரே சமயத்தில் மூன்று படங்கள் தயாரிக்கிறார்

## வேலுமணியின் திட்டம்

சரவணா பிலிம்ஸ் அதிபர் ஜி. என். வேலுமணி உழைப்பால் உயர்ந்த படத்தயாரிப்பாளர். இவர் அடுத்துச் செயலாற்றச் சில திட்டங்களை வகுத்திருக்கிறார்.

ஒரே சமயத்தில் மூன்று படங்களின் தயாரிப்பை அவர் தொடங்கவிருக்கிறார். அவைகளில் ஒன்றை ஹிந்தியிலும் மற்றவைகளைத் தமிழிலும் தயாரிக்கப்போகிறார்.

ஈஸ்ட்மன் கலரில் அவர் தயாரிக்கத் திட்டமிட்டுள்ள ஹிந்திப் படத்தை ஒளிப்பதிவு செய்ய பிரபல பம்பாய் காமிராமேதை பர்தூன் இரானியை ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கிறார். ஷம்மி கபூர், சாதனா, பிருதவி ராஜ்கபூர், பிரான், ஓம்பிரகாஷ் ஆகியோர் நடிக்கும் இப்படத்தை கே. சங்கர் டைரக்ட் செய்கிறார்.

சிவாஜி கணேசன் - சாவித்திரி ஜோடி நடிக்கும் "யாருக்காக அழுதான்" ஸ்ரீதர் டைரக்ஷனிலும், ரா. கி. ரங்கராஜனின் நாவலான "இது சத்தியம்" கே. சங்கர் டைரக்ஷனிலும் சரவணாவின் தயாரிப்புகளாக இருக்கும். "இது சத்தியத்"தில் எம். ஜி. ராமச்சந்திரன் கதாநாயகனாக நடிக்கிறார்.



இம்மூன்று படங்களின் படப்பிடிப்புகளும் எந்தவிதமான இடையூறுகளுமின்றி தொடாந்து நடக்கவேண்டுமென்பதற்காக வேலுமணி புரட்சிகரமான சில ஏற்பாடுகளைச் செய்துவருகிறார்.

நெப்டியூன் ஸ்டுடியோவில் இரண்டு படப்பிடிப்புக் கொட்டகைகளை அவர் நீண்டகாலக் குத்தகைக்கு எடுத்துக்கொண்டிருக்கிறார். அவைகளைத் தனியே பிரித்து அதற்கான தனி நுழைவு வாசலையும் அமைத்துத் தனியான ஒரு குட்டி ஸ்டுடியோவாகவே மாற்றியிருக்கிறார்.

## புதிய நகைச்சுவைப் படம்

கதாசிரியர் இயக்குநர் எஸ். ஏ. சுப்பராமன் எழுதியுள்ள நாடகமான 'அதிர்ஷ்டசாலி'யைப் புகழ்பெற்ற இயக்குநர்களான கிருஷ்ணன்-பஞ்சு திரைப்படமாக்கவிருக்கின்றனர். இப்படம் முழுநீள நகைச்சுவைப்படமாக இருக்கும் என்று கூறப்படுகிறது.



சந்திரபாபுவும் நிற்கு நிலையைப் பார்த்தாலே அவர் 'குமார ராஜா' என்பது தெரியவில்லையா? விரைவில் சினிமாஸ் திரைகளில் காட்சியளிக்கவிருக்கும் 'குமார ராஜா'வில் சந்திரபாபு, எம். என். ராஜம், சூரியகலா.

## தேவிகாவிடம் மன்றாடினார் சரோஜாதேவி

ஸ்பைடர் படநிலையத்தின் "குலமகள் ராதை" படத்திற்கான உச்சக்கட்டக்காட்சிகள் வாகினியில் படமாக்கப்பட்ன.

நடிகர் திலகம் சிவாஜிகணேசன், சரோஜாதேவி, தேவிகா, மனோகர், சாந்தினி, சாரங்கபாணி ஆகியோர் நடித்த காட்சிகள் படமாக்கப்பட்டன.

சர்க்கஸ் விளையாட்டுக்காரர் சந்திரனாக சிவாஜிகணேசன் இப்படத்தில் நடிக்கிறார்.

தன்னுடைய உள்ளத்தில் ஒருகாலத்தில் இடம்பெற்றிருந்த ராதையை திடீரெனக் கண்டவுடன் அதிர்ச்சியடைந்து மேலே விளையாடிக் கொண்டிருந்த சந்திரன் கைநழுவிக் கீழே விழுந்துவிடுகிறான். மருத்துவ விடுதியில் உயிருக்குப்போராடிக் கொண்டிருந்த சந்திரனைக் காணத் துடித்தாள் ராதை. ஆனால் சர்க்கஸ்காரரின் மகள் லீலாவோ சந்திரனை உயிரினும் மேலாகக் காதலித்து வந்தாள். ஆகவே சந்திரனைக்காணக்கூட அனுமதிக்க மறுத்துவிட்டாள். எப்படியோ லீலாவிடம் மன்றாடி அனுமதிபெற்று சந்திரனைக் காண்கிறாள் ராதை.

## நாடக அங்குரார்ப்பணம்

சென்ற வியாழனன்று மாலை உதயசூரியன் நாடகமன்றத்தினரின் ஆதரவில் ரமணன் - பாலன் நகைச்சுவை நாடகமன்றத்தினரால் அரங்கேற்றப்படவிருக்கும் 'புஞ்சிபண்டாவும்-குஞ்சி ஆச்சியும்' எனும் நகைச்சுவை நாடகம் 'ரமணன்-பாலன்' நகைச்சுவை நாடக மன்ற அலுவலகத்தில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. அப்பொழுது சோ. சீவரத்தினம், தவலிங்கம், ரமணன், பாலன் ஆகியோர் பேசினர்.

சினிமா விமர்சனம்

## பாத காணிக்கை

இரு குடும்பங்களின் ஒற்றுமைக்காகத் தன்னுயிரையே பாதகாணிக்கையாகத் தருகிறார் விஜயகுமாரி. குடும்பத்தின் நலனுக்காகத் தனது காதலியையே மறந்து சிற்றன்னைக்குத் தனது வாழ்வையே அர்ப்பணிக்கும் ஜெமினி கணேசன். காதலுக்காகக் குடும்பியையே இழக்கும் சந்திரபாபு. ஜெமினி கணேசனின் குடும்ப நன்மைக்காகத் தன் காதலைத் தியாகம் செய்யும் சாவித்திரி.

இவ்வாறு பலர் செய்யும் தியாகங்களை அடிப்படையாகக் கொண்டு இப்போது காட்சியளிக்கிறது 'பாத காணிக்கை.'

குடும்ப வாழ்க்கையை பிரதிபலித்துக் காட்டும் சித்திரமே 'பாத காணிக்கை'.

குண்டுமணிப் பரம்பரையில் வந்த நமசிவாயம் (எஸ். வி. சுப்பையா), பட்டாளத்துப் பரம்பரையில் வந்த வீராச்சாமி (எம்.ஆர்.ராதா)முறையே சத்திய வாழ்க்கையும் அதற்கு மாறான வாழ்க்கையும் வாழ்கின்றனர். இவர்களை பின்னிப் படருகிறது கதை. கே. சங்கரின் சிறந்த டைரக்ஷனைப் படத்தின் பல கட்டங்களிலும் காணக்கூடியதாக உள்ளது.

அசோகனின் நடிப்பு படத்திற்குப் படம் மெருகுபெற்று வருகிறது. அசோகன் தாலியிழந்து ஊன்று கோலுடன் தனது தந்தையின் சமாதிக்கருகில் கதறியழுது பாடும் கட்டம் பார்ப்பவர்களின் உள்ளத்தைத் தொடுகிறது. கவிஞர் கண்ணதாசனின் "வீடுவரை உறவு" என்று ஆரம்பிக்கும் பாடல் கருத்தமைவுடன் காணப்படுவதுடன் இசையமைப்பும் பாராட்டக்கூடியதாகவுள்ளது. ஜெமினி கணேசன், சாவித்திரி, விஜயகுமாரி, எஸ். வி. சுப்பையா, எம். ஆர். ராதா, எம். வி. ராஜம்மா ஆகியோரின் நடிப்பு ஒவ்வொரு கட்டத்திலும் மெருகு கூடுகிறது.

சந்திரபாபு, பத்மினி பிரியதர்சினி, எஸ். ராமராவ் நகைச்சுவை விருந்தளிக்கின்றனர். சிறுவன் கமலஹாசன் இப்படத்தின்உயிர்நாடியாக இருக்கிறான். படத்தை இறுதிவரையும் வேகமாக இழுத்துச் செல்ல கமலஹாசனின் நடிப்பு நன்கு உதவுகிறது.

கவிஞர் கண்ணதாசனின் பாடல்கள் தியேட்டரை விட்டு வெளியேறிய பின்புங்கூடக் காதுகளில் ரீங்காரமிடுகின்றன. சோலைமலையின் சிறந்த கதையும், கே. சங்கரின் சிறந்த டைரக்ஷனும், படப்பிடிப்பு, இசையமைப்பு ஆகியவையும் படத்தின் தரத்தை உயர்த்தியுள்ளது. ஒவ்வொரு குடும்பத்தினரும் பார்த்து, பல புத்திமதிகளைத் தெரிந்துகொள்ள வேண்டிய படம் 'பாத காணிக்கை.

இப்படம் சிலோன் தியேட்டர்ஸ் ஸ்தாபனத்தாரின் திரைகளில் காண்பிக்கப்படுகிறது.

— பாலா

## மணிபல்லவன்

நாடக விமர்சனம்

சரித்திரப் பின்னணியோடு பின்னப்பட்ட நாடகங்களை மேடையேற்றுவது ஈழத்தைப் பொறுத்தவரை இலகுவான காரியமல்ல. முயற்சி மட்டுமல்ல செலவும் தேவை. இதில் உதய சூரியன் நாடக மன்றத்தினர் ஓரளவு துணிவைக் காட்டியிருக்கிறார்கள் என்றே சொல்லத் தோன்றுகிறது.

கொட்டடி உதய சூரியன் நாடக மன்றத்தினரின் ஐந்தாவது படைப்பான மணிபல்லவனை யாழ். மனோகரா தியேட்டரில் பார்த்தவர்கள் இவ்விதம் கூறத்தான் செய்வார்கள்.

பனைமுனையை ஆளும் மணிபல்லவன் தமிழ் மன்னன். தமிழில் வற்றாத காதல் கொண்டவன். தெய்வேந்திரமுனையை ஆளும் சமண மன்னன் பணணரசன். பண்ணரசன் நல்லூர்க் கந்தன் ஆலயத்தில் இருக்கும் தங்கவிக்கிரகத்தையும், நயினர் தீவிலிருக்கும் நிலப்பரப்பையும் தனக்குத் தரும்படியும் தரமறுத்தால் போருக்கு வரும்படியும் வலியுறுத்துகிறான். தமிழ் மன்னன் மறுக்கிறான். போர்மூளுகிறது. மணிபல்லவன் வஞ்சகமாகக் கொல்லப்படுகிறான். மணிபல்லவனின் நண்பன் அபூக்கான் விம்மி வெதும்புகின்றான். இது மணிபல்லவனின் மையக கரு.

சண்முகலிங்கம் மணிபல்லவனாக மாறியதற்கு நடிப்பு மட்டுமல்ல குரலும் உதவியிருந்தது என்று கூறிவிடலாம். வெஞ்சினம் கொண்டு வார்த்தைகளை வீசும்பொழுது 'அம்பு படாமலே எதிரி சரிந்துவிடுவான் போலிருக்கிறதே' என்று சொல்லத் தூண்டியது. அபூக்கானாக நடித்த ஆனந்தவிநாயகருக்கு வேஷப்பொருத்தம் நன்கு அமைந்திருந்தது. ஜெயராசாவின் உடலமைப்பு அவரது நடிப்புக்கு நன்கு உதவியது. ஏமாளியாக நடிப்பதற்கும் திறமை வேண்டும் என்பதைக் காட்டாமல் காட்டிவிட்டார் ஜெயராசா. உக்கிரமனாக நடித்தவர் அக்கிரமத்துக்கு அஞ்சாதவர் என்பதை ஒவ்வொரு முறைப்பிலும் வார்த்தையின் இழுப்பிலும் காட்டி ரசிகர்களைக் கலக்க வைத்துவிட்டார். இரா. பாலசுப்பிரமணியம் ஊக்கம் காட்டினால் உக்கிரமனாக என்ன இன்னும் உயர்ந்த பாகங்களையும் ஏற்கமுடியுமே. மதகுருவாக வந்த அமிர்தலிங்கம் கண்களைச் சுழற்றும்பொழுது சதியொன்று சுழன்று விட்டது என ரசிகர்கள் கணக்கிடும் வண்ணம் நடித்தார். தமிழ்ப் புலவராக நடிப்பது இலகுவானதல்ல. பழங்காலத்து உருவம் புதுக்காலம் ஏற்கும் வகையில் நடிப்பு இருக்கவேண்டும். நடிப்புக்கு மலர் மாலை வாங்கிவிட்டாரே தவலிங்கம். போதாதா? விஜயனாக நடித்த முத்துக்குமாரு நடிப்பில் ஜெயம்பெற்றுவிட்டார். காதல் காட்சிகளில் இன்னும் சிறிது கவனம் செலுத்தியிருந்தால் கனிவாக இருக்திருக்கும்.

பாலமுருகன் பூதத்தை ஒழிக்க வரும் காட்சி ரசிகர்களின் நெஞ்சத்தை விட்டு நீங்காத காட்சி.

மேக்கப் ராசா சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி திறமையை ஒப்பனை மூலம் வெளிப்படுத்திவிட்டார்.

சில குறைகளை நிவிர்த்தி செய்தால் நாடகம் ரசிகர்களின் பாராட்டைத் தொடர்ந்து பெறுமென்று தயங்காது கூறலாம்.

— கணேஷ்

ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna. Phone: 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு பங்குனி மீ 11 (24-3-63)

# அன்னதானம்

“ஒருநாள் உணவை ஒழி என்ருல் ஒழியாய், இருநாளேக்கு ஏலென்ருல் ஏலாய், ஒருநாளும் — எந்நோ வறியாய், இடும்பைகூர் என் வயிறே உன்னேடு வாழ்தலரிது” — ஔவையார்.

பட்டினியால் எவ்வளவுநாள் எப்படியெல்லாம் சங்கடப்பட்டாரோ, தமிழ்ப்பாட்டி இப்படிப் பாட! கூழுக்கு ஔவை என்பர். பசிக்குக் கூழ் கிடைத்தால் போதுமாம். அவர் பாடி விடுவாராம்!

பாடினல் ஔவைப் பாட்டிக்குக் கூழ்கிடைத்திருக்கும். அவரைப்போல் எல்லாப்பாட்டிகளுக்கும் பாடமுடியுமா? பாடமுடியாத மூதாட்டிகள் தங்கள் பசியாற என் செய்வது? இக்காலத்தில் ‘பசி’ என்று எவ்வளவு கதறினுலும், யார் காதில் போட்டுக் கொள்ளுகிருர்கள்!

‘அது அவர்கள் விதி. பிச்சை எடுக்கிருர்கள். பிச்சை போடுவது சோம்பேறித்தனத்தை வளர்ப்பதாகும். ஏதாவது வேலேசெய்து பிழைக்கட்டுமே’ என்று வாய் வேதாந்தம் பேசி, மனதை மரக்கட்டையாக்கிக் கொள்பவர் எம்மிடையே பலருண்டு.

வேலே கிடைப்பதாயின், அதைச் செய்து பிழைக்கப் பலரும் தயாராக இருப்பர். மானம் விட்டுப் பிச்சை எடுக்க முன்வர மாட்டார்கள். வேலே யார் கொடுக்கிருர்கள்? பட்டினிப் பிசாசிலிருந்து விடுபட வேறுவழியின்றி, கடைசி வழியாகக் கப்பறை எடுக்கின்றனர். அந்தப் பிச்சையும் போடக்கூடாதென்று நாம் கூறிவிட்டால், அவர்கள் கதிதான் என்ன?

இப்போது நடப்பது பட்டினி ஒழிப்புவாரம். இதை முன்னிட்டு, ஐக்கியநாடுகள் சபையின் பொதுக்காரியதரிசி முதல், இலங்கை கவர்னர் ஜெனரல், பிரதமமந்திரி, விவசாயமந்திரிவரை பலரும் பெரிய பெரிய அறிக்கைகளே வெளியிட்டிருக்கிருர்கள். இந்த நிதிக்காக விசேஷ முத்திரைகளே யாழ்ப்பாணத்திலும் விற்பனே செய்தனராம். ஆனல் உலகிலே ஒருவரது பட்டினியையாவது ஆற்ற உணவு அளித்தனரா? இவ்வாரத்திலாவது உலகில் யாரும் பட்டினியின்றி வாழ ஏதும் ஒழுங்கு செய்தனரா? அப்படி எதுவும் செய்ததாகத் தெரியவில்லே.

உணவுஉற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்றும், சுயதேவையைப் பூர்த்திசெய்யவேண்டுமென்றும், சிரமதானம் செய்யவேண்டுமென்றும், பலரும் பல பல்லவிகளேப்பாடியுள்ளனர். இந்தப் பழைய பல்லவிகள், யாருடைய பட்டினியையும் உடனடியாக மாற்ற உதவமுடியுமா?

இங்கு இலங்கையில் தென்னந்தோப்புகளும் தேங்காய் உற்பத்தியும் அதிகம். மரங்களில் இளநீர் குலேகுலேயாகக் குலுங்குகின்றன. மிகவும் தாகத்துடன் வந்த ஒருவருக்கு, கையில் காசில்லாவிடில், அந்த ஒரு இளநீரும் கிடைக்கமுடியுமா? அதே போல் தேயிலேயை உலகெல்லாம் நாம் ‘சப்ளே’ செய்வோம். இலங்கைத் தேயிலேயை அருந்துங்கள் என்று உலகில் விளம்பரம் செய்வோம். ஆனல் தேயிலேத் தோட்டத்துக்குப் பக்கத்திலுள்ள ஓர் எளிய குடும்பத்திடம் காசில்லாவிடில், அக் குடும்பத்துக்கு ஒரு வாய்த் தேத்தண்ணீரும் கிடைக்கவகையுண்டா?

இப்போது நடைபெறும் ‘பட்டினி விடுதலே வாரம்’ என்பதெல்லாம், பட்டினிப்பட்டாளத்துக்கு அர்த்தமற்ற வெறும் கூச்சலாகவே தோன்றக் கூடும்.

இங்கு உணவு உற்பத்தி செய்வதன் அடிப்படை நோக்கம், அதிக லாபம்பெறவேண்டுமென்பதே ஒழிய, அதிக மக்களின் பசி பட்டினியை நீக்க வேண்டுமென்ற எண்ணம் எத்தனே பேருக்கு உண்டு?

வேளாண்மையும், உணவு சமைப்பதும் பிறரது பசியை நீக்குவதற்கே என்ற பெரு நோக்கம், தமிழ்ப் பண்பாக இருந்துவந்தது. தானங்களில் சிறந்தது அன்னதானமென்று பழமொழியுமுண்டு. அதையெல்லாம் இந்த நவநாகரீகத்தில் மறந்ததால், சமூக அநீதிகள் பெருகி, பலாத்காரப் புரட்சி இயக்கங்கள் நம்மைப் பயமுறுத்துகின்றன. இவற்றிலிருந்து தப்பவேண்டுமாயின் மீண்டும் அன்பின் அடிப்படையில், நமது சமூக வாழ்வு அமைய வேண்டும். அப்போது பிறர் பட்டினியாற்ற, நாம் பட்டினி கிடப்போம். அந்தப்பண்பும் அன்பும் மீண்டும் நம்மிடை வளருமா?

## இரத்தினக் கம்பளம்

# நம்பற்குரியர் இவ்வீரர்!

காலஞ்சென்ற கல்கி ஆசிரியர் கொழும்பு தமிழ்ச் சங்க ஆண்டுவிழாவுக்காகச் சில வருஷங்களுக்கு முன்பு கொழும்பு வந்திருந்தபோது கலேக்களஞ்சியத் தொகுதி ஆசிரியர் திரு பெரியசாமித்தூரனும் கூட வந்திருந்தார். இவர்கள் கொழும்பில் தங்கியிருந்த சில தினங்களில் ஒருநாள் இலக்கிய நண்பர்கள் கூடிப்பேசிக்கொண்டிருந்தார்கள். திரு. பெரியசாமித்தூரனே ஏற்கனவே நன்கு தெரிந்திருந்த ஒரு நண்பர், திரு. தூரன் அப்பொழுது தான் புதிதாக வளர்த்துவிட்ட மீசையைக் குறிப்பிட்டு கிண்டலாக ஏதோ தமாஷ் செய்தார். அவரோடு சேர்ந்து கொண்டு கல்கி ஆசிரியரும், “ஆமாம், எதுக்காகப் புதிதாக மீசைவிடத் தொடங்கியிருக்கிறீர்கள் தூரன், கலேக் களஞ்சியத் தொகுதி முழுவதும் வெளியிட்டபிற்பாடுதான் மீசை எடுப்பது என்று சபதம் பூண்டிருக்கிறீர்களா?” என்ருர். திரு. தூரனே இந்தக் கிண்டல் பேச்சுக்கெல்லாம் பதிலாகச் சும்மா ஒரு மென்முறுவல் செய்துவிட்டுக் கையில் வைத்திருந்த ஓர் இலங்கை நண்பரின் கதைப்புத்தகத்தைத் தொடர்ந்து படித்துக் கொண்டிருந்தார். பதின்மூன்று ஆண்டுகளுக்குப் பிற்பாடு கலேக்களஞ்சியத் தொகுதி வெளியீட்டை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்துவிட்ட திரு. தூரன் சமீபத்தில் பணமுடிப்பு அளித்துக் கௌரவிக்கப்பட்டதாக ஒரு செய்தி தெரிவிக்கிறது. அந்த வைபவத்தில் பேசிய ஒரு பெரியார் திரு. பெரியசாமித்தூரனின் தன்னடக்கப் பண்பைப் பெரிதும் பாராட்டி “இத்தனே பெரியதொரு வெளியீட்டு முயற்சியில் இவ்வளவு காலமாகத் தனித்து நின்று அயராது, சலியாது உழைத்த மனுஷன் தமது பெயரை எங்கேயாவது எந்த ஒரு சந்தர்ப்பத்திலாவது சேர்த்துவிட எண்ணவில்லேயே” என்று வியப்புத் தெரிவித்தார்.

திரு. பெரியசாமித்தூரன் ஒரு சிறந்த எழுத்தாளர்; கவிஞர். பாரதியாரின் பாடலேத் தொட்டுப் பேச ஆரம்பித்துவிட்டால் உணர்ச்சியில் மூழ்கிப்போய்விடுவார். “தமிழா, பற! மேலே மேலே பற! பற!!” என்று அவர் குரல் தழதழக்கப் பேசும்போது சுப்பிரமணிய பாரதியார் அப்படித்தான் உணர்ச்சிவசப்பட்டிருப்பாரோ என்று நமக்குத் தோன்றும். எட்டயபுரத்தில் பாரதியார் பிறந்த வீட்டில் ஒருசமயம் அவர் கொடியேற்றி வைத்த போது “எம்பெருமானே, நீர் வாழ்ந்த காலத்தில் உமக்கு உரிய மதிப்பைத் தரத்தவறிய நம்மை மன்னித்தருளவேண்டுகிருேம்” என்ருர். அவரின் கண்களில் அப்பொழுது நீர் துளிர்த்துவிட்டது.

திரு. தூரன் இராமகிருஷ்ண மிஷன் பள்ளியொன்றில் ஆசிரியராகப் பணிபுரிந்து வந்தவர். ‘அரிய பெரிய காரியங்களேச் சாதிக்கப் பிறந்த’ இந்தியரில் ஒருவராகிவிட்டார் இன்று.

அரிய பெரிய காரியங்களேச் சாதிக்கப் பிறந்த மற்ருெரு தமிழ்ப் புதல்வரைப் பற்றியும் சமுத்திரத்தை வென்ற அவரது அரிய நீச்சல்சாதனே பற்றியும். எங்கும் பேச்சாக இருக்கும் இந்தத் தருணத்தில் நீச்சல் சாஸ்திரம் பற்றி ஒரு விகடத்துணுக்கு கேட்கிறீர்களா?

ஒரு படகில் நாலுபேர் பிரயாணம் செய்துகொண்டிருந்தார்கள். நால்வரும் ஒவ்வொரு சாஸ்திரத்தில் தேர்ந்த புலமை மிக்கவர்கள். ஒருவர் விஞ்ஞானி. இன்னெருவர் சோதிடர். மற்றவர் கணிதப்பேராசிரியர். அடுத்தவர் பெரிய கல்விமான்.

படகு நடுக்கடலில் போய்க்கொண்டிருந்தது. அதிலிருந்த சாஸ்திர விற்பன்னர்கள் நால்வரும் ஏதோ ஒரு பொருள் குறித்துத் தங்களுக்குள்ளே காரசாரமாகத் தர்க்கம் செய்துகொண்டிருந்தார்கள்.

இருந்தாற்போலிருந்து வானம் இருண்டு இடிமின்னலுடன் மழை பெய்ததையும் கவனிக்காமல் அவர்கள் தர்க்கம் செய்துகொண்டிருந்தார்கள்.

இந்தச் சமயம் படகு ஒரு சுழியில் சிக்குண்டு பாறையில் மோதிச் சேதமாகிவிட்டது. படகின் அடியில் ஓட்டை விழுந்து அதன் வழியே தண்ணீர் பெருகத் தொடங்கிவிட்டது.

இன்னமும் தொடர்ந்து தாங்கள் கற்றறிந்த சாஸ்திரப் புலமையுடன் தர்க்கம் செய்து கொண்டிருந்த பேரறிஞர்களேப் பார்த்து படகோட்டி “ஐயா கனவான்களே, உங்களுக்கு நீச்சல் சாஸ்திரம் தெரியுமா? படகில் ஓட்டை விழுந்துவிட்டது; நாமெல்லோரும் தண்ணீரில் மூழ்கப் போகிருேம். இப்பொழுது உயிர்தப்பிக்கொள்ள நீச்சல் சாஸ்திரம் தெரிந்தால் ஆச்சு. இல்லாவிட்டால் அதோ கதிதான்” என்று கூச்சலிட்டான்.

(7ம் பக்கம் பார்க்க)

# காது அடைத்தது: கற்பனை திறந்தது
# இசை மேதை பேதோவன்

— வி. என். பி. —

**கர்நாடக சங்கீதத்துக்கு தியாகையர் எப்படியோ அப்படித்தான் ஐரோப்பிய சங்கீதத்துக்கு பேதோவன். இளம் வயதிலேயே காது இரண்டும் முழுச்செவிடாகிவிட்டது. ஆனல் அந்தச்செவிடே பேதோவனுக்கும் ஐரோப்பிய சங்கீதத்துக்கும் சிறந்த வரப்பிரசாதமாக அமைந்தது. லுட்விக் வொன் பேதோவன் இறைவனடி எய்தியதினம் மார்ச்மாதம் 26-ம் திகதி.**

தியாகையர், முத்துஸ்வாமி தீக்ஷிதர், சியாமாசாஸ்திரி இம்மூவரையும் கர்நாடக சங்கீத திரிமூர்த்திகள் என்றழைப்போம். இதுபோலவே, ஐரோப்பிய சங்கீதத்துக்கும் பேதோவன், பாக், மோஸாட் ஆகிய மூவரும் திரிமூர்த்திகள். தியாகையரும் பேதோவனும் தன்னிகரில்லாத சங்கீத மேதைகள். அவர்களேப் போன்ற இசைப்புலவர்கள் மேனுட்டிலும் சரி இந்தியாவிலும் சரி இனிமேல்தான் பிறக்க வேண்டும். இருவரும் ஒரே காலத்தில் வாழ்ந்தவர்கள்என்பதும் குறிப்பிடத்தக்கது. கர்நாடக சங்கீதத்துக்கு தஞ்சாவூர்மாவட்டம் எவ்வளவு பிரசித்திபெற்றதோ அதுபோல ஐரோப்பிய சங்கீதத்துக்கு ஜெர்மனி. திருவையாற்றிலுள்ள தியாகராஜ சமாதிக்கு இன்றும் சங்கீத வித்துவான்கள் அஞ்சலி செய்கிருர்கள். அது போலவே, ஐரோப்பிய சங்கீத வித்துவான்கள் இன்றும் பேதோவனின் சிலேக்குமுன் நின்று காணிக்கை செலுத்துவார்கள். கர்நாடக சங்கீதத்தின் சிகரங்களாக விளங்குவன தியாகையரின் பஞ்சரத்தினக் கிருதிகள். ஐரோப்பிய சங்கீதத்தின் சிகரங்களாக விளங்குவன பேதோவனின் ஒன்பது ‘ஸிம்ப்வனி’கள்.

இந்த ‘ஸிம்ப்வனி’கள் எல்லாம் வாத்தியக்கோஷ்டிக்கென்று இசைக்கப்பட்டவை. பஞ்சரத்தினக் கிருதிகளேப் போல, தனி ஒருவர் அவற்றைப் பாடவோ வாத்தியத்தில் இசைக்கவோ முடியாது. இன்றும் உண்மையான உயர்தர மேனுட்டு சங்கீதம் கேட்க வேண்டுமாயின் 50, 60 பேர் கொண்ட வாத்தியக்கோஷ்டியில் தான் கேட்கலாம். பேதோவனின் முதலாவது ‘ஸிம்ப்வனி’ வியன்ன நகரத்தில் இசைக்கப்பட்டபோது அவருக்கு 30 வயது. இரண்டு வருடங்கள் கழித்து அவருடைய செவிப்புலன் கொஞ்சம் கொஞ்சமாக மந்தம் அடைந்தது. அவரால் அந்த வெட்கக் கேட்டைத் தாங்க முடியவில்லே. நகரை விட்டு நாட்டுக்குள் சென்று மறைவாக வாழ்ந்தார். இச்சமயத்தில் அவர் எழுதிய ஒரு குறிப்பு அவருடைய கண்ணேயும் கலங்கவைக்கும். தமக்குண்டான வெட்கம், ஆற்ருத் தன்மை, ஆத்திரம், இழிவு — எல்லாவற்றையும் அதில் கொட்டியிருக்கிருர். அது வருமாறு:

‘உரத்துப் பேசு, நான் செவிடன், என்னல் கேட்கமுடியாது’ என்று மற்றவர்களேப் பார்த்து நான் எப்படிச் சொல்வது? எந்தப் புலன் என்னிடம் மற்றவர்களேக் காட்டிலும் அதிக தீட்சண்யமாயிருக்க வேண்டுமோ அது என்னிடம் மழுங்கி விட்டதென்று நான் எப்படி ஒப்புக்கொள்வது? எனக்குப் பக்கத்தில் இருக்கும் ஒருவர் தூரத்தே இனிமையான குழலோசை கேட்கிறதென்று சொல்லும்போது என் மானம் பறிபோகிறது. இக்குறைபாடு என்னேப் பலதடவை தற்கொலேக்குச் சமீபமாயும் அழைத்துச் சென்றிருக்கிறது.’

பிறவி மேதைகளுக்குள்ள விசித்திரமான குணங்கள் யாவும் பேதோவனிடமும் காணப்பட்டன. அடக்கமுடியாத கோபம், பின்னிரக்கம், கவலேயீனம், மறதி, போனது போனபடி கிடந்தது கிடந்தபடிவிடும்ஒழுங்கற்றவாழ்க்கை- இவையெல்லாம் பேதோவனுடன் கூடப்பிறந்தவை.

கம்பரை ஆதரித்த குலோத்துங்க சோழன் போல பேதோவனுக்கும் லிக்னெஸ்கி என்ருெரு இளவரசர் வாய்த்தார். ஒருநாள் சிலபோர்வீரர்களுக்கு வயலின் வாசிக்கும்படி இளவரசர் கேட்க, பேதோவன், கம்பர் சொன்னதுபோல ‘மன்னவனும நீயோ வளநாடும் உன்னதோ’ என்று கூறிவிட்டு, எழுந்துபோய் தமது ஆத்திரம் தீர அந்த இளவரசரின் சிலே

(7-ம் பக்கம் பார்க்க)

# உலகமேடை

டி. எம். எம்.

## கம்யூனிஸ்ட் ஒழிப்பு

அராபிய மண்ணில் நடைபெறும் கம்யூனிஸ்ட் வேட்டையைக் கண்டு, மாஸ்கோ கலக்கம் அடைந்திருக்கிறது. ஈராக்கில் அரசியல்நிலை மாறியபின், அங்கு கம்யூனிஸ்டுகள் கருவறுக்கப்படுகிருர்கள். மத்திய தரைக்கடலை ஒட்டியுள்ள தென்கிழக்கு நாடுகளிலேயே ஈராக்கில் தான் கம்யூனிஸ்ட் செல்வாக்கு அதிகம். இப்போது அங்கு ரஷ்யாவின் செல்வாக்கு வேட்டையாடப்படுகிறது.

ஆனல் வேருெரு சுதந்திர நாட்டில் எடுக்கப்படும் நடவடிக்கைகளை ரஷ்யா என்ன செய்ய முடியும்? நயமாகவும், பயமாகவும் மிரட்டிப்பார்க்கலாம். இதர மறைமுகமான நடவடிக்கைகளில் ஈடுபடலாம். வேறு நாடுகளில் — குறிப்பாக கம்யூனிஸ்ட் செல்வாக்குப் பெற்றுள்ள நாடுகளில், ஈராக் தூதராலயங்களின் முன் ஆர்ப்பாட்டத்துக்கு ஒழுங்கு செய்யலாம். வேறு என்ன செய்வது!

சமீபத்தில் மாஸ்கோவிலும் இவ்வித ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. லுமும்பா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஒருசில ஆபிரிக்க மாணவர்களும் ஈராக் தூதராலயத்தின் முன் ஆர்ப்பாட்டம் செய்தனர். கட்டிடத்தின் மீது மைப்புட்டிகளை வீசினர்கள். இது நிற்க,

ஐக்கிய அராபியக் குடியரசு, ஈராக், ஸிரியா ஆகிய நாடுகளைக் கொண்ட அராபிய சம்மேளனம் பற்றி, கெய்ரோவில் நடைபெற்ற பேச்சுக்களின் மர்மம் தெரியவில்லை. சம்மேளன அமைப்பு சம்பந்தமாக கருத்து ஒற்றுமை ஏற்படவில்லை என்று வதந்திகள் அடிபட்டபோதிலும், அடுத்த வாரம் டமாஸ்கஸிலிருந்தும், பாக்தாத்திலும் பிரதிநிதிகள் மீண்டும் கெய்ரோ வருவார்கள் எனத் தெரிகிறது. அப்போது உத்தேச சம்மேளனம் பற்றி மேலும் விபரங்கள் தெளிவாகும்.

அராபிய சம்மேளனம் ஒன்று உருவாகுமானல் அது கம்யூனிஸ்டுகளுக்குத் தான் நஷ்டத்தை யுண்டாக்கும். ஏனெனில் ஐக்கிய சம்மேளனத்தில் மூன்று தேச ராணுவங்களும் ஒன்ருகச் செயல்படுமாதலால், எதிர்காலத்தில் கம்யூனிஸ்ட் சார்பான புரட்சி அங்கு வெற்றி பெறுவதென்பது துர்லபம்.

மேற்கு நாட்டுச் சார்போ அன்றி கிழக்கு வல்லரசின் சார்போ இன்றி நடுநிலைக் கொள்கையுடனேயே உத்தேச சம்மேளனம் இயங்கக்கூடும். எனவே தான் அமெரிக்கா இந்த ஏற்பாட்டை வரவேற்றிருக்கிறது.

ஒரு விஷயத்தையும் நாம் தெளிவாகப் பார்க்கிருேம். ஸ்திரமற்ற அரைகுறை சார்பு நாடுகளைவிட, ஸ்திரமான நடுநிலை நாடுகளில் வல்லரசுகளின் தீவிரத் தலையீடு அல்லது கெடுபிடி இடம்பெறவில்லை என்பதே அந்த விஷயம். அப்படி ஏதாவது கெடுபிடி இருக்குமானல், சம்பந்தப்பட்ட நாடுகளுக்கு யார் அதிக உதவி செய்வது என்பதிலேயே அது இருக்கிறது.

ஒருவகையில் மத்திய கிழக்கு முழுவதுமே நடுநிலைமைக் கொள்கையின் கீழ் வருமானல், இப்பகுதியில் சமாதானம் ஏற்பட அது பெரிதும் உதவியாய் இருக்கும். இன்னும் ஒருசில நாடுகளில் மேற்கு நாடுகளின் செல்வாக்கு இருக்கிறது இந்தச் செல்வாக்கு மக்களின் ஆதரவினல் ஏற்பட்டதல்ல. பணமும், படைபலமுமே இந்தக் செல்வாக்கைப் பாதுகாத்து நிற்கின்றன.

எண்ணெயும், வறுமையுமே அங்கு வல்லரசுகளின் கவனத்தை ஈர்த்திருக்கிறது. மேற்கு நாடுகள் எண்ணெய் மங்கையின் மீதும், கிழக்கு வல்லரசு வறுமை நாயகி மீதும் காதல் கொண்டிருக்கின்றன 'நடுநிலைமை' என்ற வேலி அங்கு எழும்வரை கிழக்கு, மேறகு நாயகர்களின் ஊடுருவலைத் தவிர்க்கமுடியாது.

★

### பி. பி. ஸி.

பி. பி. ஸி. (பிரிட்டிஷ் ஒலிபரப்பு ஸ்தாபனம்) யின் ஒலிபரப்புகளைத் தடைசெய்யாதிருக்குமாறு மீண்டும் ரஷ்யாவைக் கேட்டுக்கொண்டதாய் வெளிநாட்டு உதவிக் காரியதரிசி திரு. பீட்டர் ஸ்மிதர்ஸ், காமன்ஸ்சபையில் அறிவித்திருக்கிருர். உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதாகவும், பகைமையை வளர்க்கக் கூடியதாகவும் உள்ள ஒலிபரப்பு எனத் தாம் கருதும் விஷயங்களையே, தடுத்துவருவதாய் ரஷ்யா பதிலளித்திருக்கிறதென்றும் அவர் கூறினர்.

சமீபத்தில், பீக்கிங் வானெலி ஒலிபரப்புக்களைக் கிழக்கு ஐரோப்பாவில் கேட்கவிடாமல் ரஷ்யா தடைசெய்து வருவதாகச் சீனவும் குற்றஞ்சாட்டியிருந்தது. ஆனல் கம்யூனிஸ்ட் நாடுகள் அல்லாத இதர நாடுகளின் ஒலிபரப்புக்களையே தாம் தடைசெய்து வருவதாயும், பீக்கிங் ஒலிபரப்பை ஒருபோதும் தடைசெய்யவில்லை என்றும் ரஷ்யா பதிலளித்தது.

ரஷ்யாவுக்கும், சீனவுக்குமிடையே ஏற்பட்டுள்ள கொள்கைத் தகராறில், சீனவின் கட்சியை எடுத்துரைக்கும் ஒலிபரப்பை ரஷ்யா தடைசெய்ததாக, அப்போது சீன குற்றஞ்சாட்டியிருந்தது.

ஆனல் "வாய்ஸ் ஆப் அமெரிக்கா" என்ற வாஷிங்டன் ஒலிபரப்பு, பீக்கிங் வானெலி, மாஸ்கோ வானெலி ஆகியவற்றுடன் பி. பி. ஸி. ஒலிபரப்புக்களை ஒப்பிட்டுப்பார்க்கும் ஒருவருக்கு சிலஉண்மைகள் விளங்கும். குறிப்பாக, உலகச்செய்திகளை அதன் முக்கியத்துவத்துக்கேற்ப ஒன்றன்பின் ஒன்ருய்த் தரப்படுத்திக் கூறுவதில் பி. பி. ஸி. க்கு இணையில்லை என்றே சொல்லலாம். நான்கு அல்லது ஐந்து தலைப்புக்களுடன் மட்டும், பாரபட்சமின்றி செய்திகளை அது ஒலிபரப்பி வருவதை அறியலாம். கிழக்கு, மேற்கு ஒலிபரப்பு நிலையங்களைப் போல், கெடுபிடிக்கான பிரசாரத்தை அது நடத்துவதில்லை என்பது முக்கிய விஷயம். அதே சமயம், சர்வதேச முக்கியத்துவ அடிப்படையில், சுருக்கமாக - ஆனல் தெளிவாகவும், திறமையுடனும் பி. பி. ஸி. ஒலிபரப்பிவருகிறது.

பி. பி. ஸி. நிலையம், அரசாங்கத் தலையீடின்றி சுதந்திரமாக இயங்கிவருவதே இதற்குக் காரணம்.

உலகத்தின் மிகப்பெரும் சக்திவாய்ந்த ஒலிபரப்புநிலையங்களில் பி. பி. ஸி. நிலையமும் ஒன்று. 40 மொழிகளில் அது வெளிநாட்டு ஒலிபரப்புக்களை நடத்திவருகிறது. 16 ஆயிரத்திற்கு மேற்பட்ட ஊழியர்களைக் கொண்ட பிரம்மாண்டமான ஒரு ஸ்தாபனம்தான் பிரிட்டிஷ் ஒலிபரப்பு ஸ்தாபனம். இதர ஒலிபரப்புக்களை விட பி. பி. ஸி. ஒலிபரப்புக்களுக்கு உலகில் மரியாதை உண்டு. செய்திகளை நியாயமாகவும், தரத்திற்கேற்ற முறையிலும் அது வெளிப்படுத்துவதும் அதன் பெருமைக்குக் காரணம்.

அரசியல் நிருபர்கள், ராணுவ நிருபர்கள், பொருளாதார நிருபர்கள், விமானநிருபர்கள் என ஒவ்வொரு அம்சத்திலும் தேர்ச்சிபெற்ற நிருபர்களை உலகம் முழுவதும் அது அமர்த்தியிருக்கிறது.

உலகின் எந்தமூலையிலாவது ஏதாவது முக்கியநிகழ்ச்சிநடைபெறுமானல் உடனடியாக நேர்முக வர்ணனையை அது வெளிப்படுத்திவருகிறது. அது மட்டுமன்றி நிகழ்ச்சிகளை உடனடியான விமர்சனமும்செய்து விடுகிறது.

செய்தித்துறையில் ராய்ட்டருக்கு எவ்வளவு மதிப்புண்டோ, அவ்வளவு மதிப்பு ஒலிபரப்புத் துறையில் பி. பி. ஸி. க்கும் உண்டு என்பதில் சந்தேகமில்லை.

★

### சீனகம்யூனிஸ்ட் கட்சி

சீனக்கம்யூனிஸ்ட்கட்சி மீது 44நாடுகளின் கம்யூனிஸ்ட்கட்சிகள் கண்டனம் தெரிவித்திருப்பதாக பீக்கிங்பத்திரிகைஒன்று ஒத்துக்கொண்டிருக்கிறது. அந்தக் கண்டனங்களையும் அது பிரசுரித்திருக்கிறது. 1962-ம் ஆண்டு நவம்பர் மாதம்முதலே பகிரங்கமாக இக்கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.

கொள்கைவெறி, சந்தர்ப்பவாதம், ஆக்கிரமிப்புநோக்கம், ஆகியவற்றை சீனக்கம்யூனிஸ்ட் கட்சி கொண்டிருப்பதாக இந்தக் கண்டனங்கள் கூறுகின்றன. சீனவின் "சமாதான நோக்க"த்துக்கு இதைவிடச் சிறந்த அத்தாட்சிகள் தேவையில்லை.

சீன இந்தியாவில் மட்டுமா பிரதேசஉரிமை கோருகிறது? அண்டையிலுள்ள எத்தனையோ நாடுகளின் எல்லைகள் சீனவின் எல்லைகளாக வெளியிடப்பட்டிருக்கின்றன. ரஷ்யாவிடமுள்ள சைபீரியாவிலும் கூட அது உரிமை கொண்டாடியிருக்கிறது.

ரஷ்யா இது குறித்து கவனம் கொண்டிருப்பதாகவும் அடுத்த 10 ஆண்டுகளில் 50லட்சம பேரை அங்கு குடியேற்றும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாகவும் வதந்திகள் தெரிவிக்கின்றன.

"சமாதான சீன"வின் நோக்கம் இப்போது தெளிவாகிவருகிறது. அணுயுத்தத்தை அது விரும்புகிறது. 'உடனிருந்து வாழும்' பாண்டுங் கொள்கையை அது சந்தர்ப்பவாதத்திற்குப் பயன்படுத்துகிறது. ரஷ்யாவின் உண்மையான சமாதான சகவாழ்வுக்கொள்கையை எதிர்த்து, உலக கம்யூனிஸ்ட் தலைமைப் பதவிக்குப் போட்டியிடும் சீன, அணுயுத்தத்தை விரும்புவது ஏனே?

ஒருவேளை, உலகவல்லரசுகளுக்கிடையே யுத்தமூண்டால், இருவல்லரசுகளும் அழிந்துவிடும் என்றும், அந்தநிலையில் சீனவே பலம்மிக்க வல்லரசாக விளங்கும் என்றும் அதுகருதுகிறது போலும். இந்தநிலையில் உலக ஆதிக்கத்தைக்கூட சீன மேற்கொள்ளமுடியும் என தலைவர்மாஸே-துங் கருதுகிருர் என நினைக்க இடமுண்டு.

---

## நம்பற்குரியர்...

(6ம் பக்கத் தொடர்ச்சி)

பல்கலை வித்தகர்கள் பேச்சு மூச்சற்று ஒருவரையொருவர் பார்த்து விழித்தார்கள்.

* *

தமிழ்ச் சங்க ஆண்டுவிழாவில் "தமிழர் வீரம்" பற்றி வித்துவான் வேந்தனர் பெருமுழக்கம் செய்து ஓய்ந்ததும் தலைமை வகித்த கல்கி எழுந்து சொன்னர்:

"வித்துவான் வேந்தனர் அவர்கள் தமிழர் வீரத்தைப் பற்றி வீராவேசமாகப் பேசிய போது நான் கூட ஒரு வீரத் தமிழ் மகன் அல்லவா என்று ஒரு வீரஉணர்ச்சியும் பெருமையும் எனக்கு ஏற்பட்டது. கடல் கடந்து இலங்கைக்கு வந்தபோது இரண்டு கைகளிலும் ஈட்டியும் வேலும் கொண்டு தாக்கினர்கள். அதற்கெல்லாம் நான் பின்வாங்கிப் போய்விடாமல் அத்தனை தாக்குதலையும் எதிர்த்து முன்னேறி இன்று உங்கள் முன்னிலையில் வெற்றி வீரனக வந்து நிற்கிறேன் என்ருல் இது வீரம் இல்லையா? நான் ஒரு வீரத் தமிழன் என்று பெருமைப் பட்டுக்கொள்ள முடியாதா?"

கல்கி ஆசிரியர் இரண்டு புயங்களையும் தொட்டுக்காட்டி தமது புயபல பராக்கிரமங்களை இவ்வாறு அளந்தபோது மண்டபத்தில் கூடியிருந்த ஆயிரக்கணக்கான பெண்கள் மத்தியிலிருந்து கலீர் என்று எழுந்த சிரிப்பொலியை யார் மறக்கமுடியும்?

— நிலாம்பரி

---

## காது அடைத்தது....

(6ம் பக்கத் தொடர்ச்சி)

யொன்றை எடுத்து சுக்கு நூருக உடைத்தெறிந்தார்.

வயது போகப்போக அவருடைய கேட்கும் சக்தி குறைந்து கொண்டே போய் கடைசியில் காதுகள் இரண்டும் முற்ருக அடைத்துப் போய்விட்டன. வெளியுலக சத்தங்களிலிருந்து விடுபட்ட பேதோவன், தமது மூளைக்குள்ளேயே இசைக் கோலங்களைக் கற்பனைசெய்து பார்த்து, அற்புதமான இசையைச் சிருஷ்டித்தார். இறக்கும் தறுவாயிலும்கூட பத்தாவது 'ஸிம்ப்வனி' ஒன்று எழுதலாமென்று கற்பனை செய்துகொண்டே இறந்தார். அவர் இறந்தது 1827-ம் வருடம் மார்ச் 26-ம் திகதி.

---

## அவுஸ்திரேலிய ஹைகமிஷனராக முத்துக்குமாரு நியமனம்

கொழும்பு, சனி

மேஜர் ஜெனரல் அன்டன் முத்துக்குமாரு அவுஸ்திரேலியாவில் இலங்கை ஹைகமிஷனராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மேஜர் ஜெனரல் முத்துக்குமாரு இப்பொழுது பாகிஸ்தானில் இலங்கை ஹைகமிஷனராக இருக்கிருர்.

---

## பூஜ்யம் தபால்

### டாக்டர் என். எம். பெரேரா, டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்க, டி. பீ. ஆர். குணவர்த்தன.

மும்மூர்த்திகளே!

நீங்கள் மூவரும் சமீபத்தில் மாத்தறை பொதுக்கூட்டத்தில் ஒரே மேடையில் இருந்து தரிசனம் கொடுத்த காட்சியைக் கண்டேன். எனக்கு வியப்பும் மகிழ்ச்சியும் தாங்கவில்லை. பிரிந்தவர் கூடினல் பேசவும் வேண்டுமோ!

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பாக நீங்கள் மூவரும் சேர்ந்திருந்தீர்கள். தேச விடுதலைக்காகச் சிறைபட்டுத் தியாகம் செய்தீர்கள். ஆனல் நாடு விடுதலை அடைந்த பின், நீங்கள் மூவரும் எக்காரணத்தாலோ பிரிந்து, போட்டிபோட்டீர்கள். அதற்கான காரணங்கள் எதுவும் எனக்குச் சரியாகத் தெரியவுமில்லை; புரியவுமில்லை. ஆனல் நீங்கள் மூவரும் பிரிந்தது பற்றி மிகவும் வருத்தமாகஇருந்தது.

குறுகிய பிரஜாவுரிமைச் சட்டங்கள் கொண்டுவரப்பட்டு, லட்சக்கணக்கான பாட்டாளி மக்களின் அரசியல் உரிமைகள் பறிக்கப்பட்டபோது, நீங்கள் மூவரும் அச்சட்டங்களைப் பலமாக எதிர்த்து நின்று போராடினீர்கள். மொழி விஷயத்தில் தமிழுக்கும் சிங்களத்துக்கும் சம அந்தஸ்து அளிக்கவேண்டுமென்ற கொள்கையையே நீங்கள் ஆதியிலே ஆதரித்து வந்தீர்கள். ஆனல் துரதிருஷ்டவசமாக இதுபற்றி உங்கள் மனம் படிப்படியாக மாறிவிட்டதையும், உங்களில் ஒருவர் பச்சை வகுப்புவாதக் கொள்கையைப் பின்பற்றியதையும் காண மிகவும் வேதனைப்பட்டேன். வகுப்புவாதம் பேசினல்தான் சிங்களப்பொது மக்களின் ஓட்டுகளைப் பெறலாமென்று பிலிப்பையா நினைத்தார் போலும்.

ஆனல் சென்ற பொதுத் தேர்தல், இடைத் தேர்தல், கொழும்பு மாநகரசபைத்தேர்தல் இவற்றின் முடிவுகள், இந்தக் கருததைப் பொய்யாக்கின. சிங்களப் பொதுமக்கள் வகுப்புவெறியை விரும்பவில்லை என்பது அம்பலமாயிற்று. அவர்கள் வகுப்புவெறியை ஆதரிப்பதாயின், கே. எம். பி. கட்சியும், பிலிப்பையாவின் கட்சியும் தேர்தலில் பெரும் வெற்றி பெற்றிருக்கவேண்டும். இரண்டொரு ஸ்தானங்களே வகுப்புவாதத்துக்குக் கிடைக்க முடிந்ததிலிருந்து, சிங்களப் பொதுமக்களும் வகுப்புவாதத்தை ஆதரிக்கவில்லை என்பது தெரிந்துவிட்டது.

அது மட்டுமல்ல, நீங்கள் மூவரும் பிரிந்திருந்ததால், இலங்கையில் சமதர்மஇயக்கத்துக்கே பெரும் பலவீனமேற்பட்டு, இந்த இயக்கமே இனி தலைதூக்க முடியாதோ என்று நினைக்கக் கூடியதாக நிலைமை மாறிவந்தது. 'ஒன்று பட்டால் உண்டு வாழ்வு, ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே' என்று எங்கள் பாரதியார் கூறிய பொன்மொழிகள் தான் எனக்கு ஞாபகம் வருகிறது. இதையெல்லாம் உணர்ந்து, நல்லபாடம் கற்றுத்தான் இப்போது மீண்டும் நீங்கள் மூவரும் சேர்ந்தீர்களா?

இவ்விஷமாக இங்கு பொதுமக்கள் பலபல விதமாகக் கதைக்கிருர்கள். காரணம் எதுவாயினும் சரி, நீங்கள் மூவரும் மீண்டும் ஒன்றுபட்டுள்ளதைக் காண மிக மகிழ்ச்சியும் நம்பிக்கையுமளிக்கிறது. உங்களிடையே ஏற்பட்ட இந்த ஒற்றுமை, தேசிய ஒற்றுமையாக வளர்ந்து நாடுமுன்னேற இனி வழி பிறக்குமா?

இப்படிக்கு,
பூஜ்யம்.

குறிப்பு:

நீங்கள் மூவரும் யாழ்ப்பாணத்துக்கு வரப்போவதாகக் கேள்விப்பட்டேன். இங்கு மக்களில் சிலர் பேசிக்கொள்வதை உங்களுக்குத் தெரிவிக்கவேண்டியது என்கடமை. நீங்கள் மூவரும் தனிச்சிங்களக்கொள்கையையே ஆதரிப்பதாயும், சீனர்களுக்கு இலங்கையை அடிமைப்படுத்தவேநீங்கள் முற்படுவீர்களென்றும் சிலர் கூறுகின்றனர்.

இங்கு பொதுமக்களின் ஆதரவையும் நம்பிக்கையையும் பெறஇச் சந்தேகங்களை நீங்கள் நீக்கவேண்டுமென்றே இதை எழுதுகின்றேன்.

"பூ"

# ஜனதிபதி பதவியை துச்சமாக மதித்த விஞ்ஞான மேதை

விஞ்ஞானம், சர்வதேசியம், சியோன் இயக்கம் ஆகிய மூன்று துறைகளில் அரும்பணியாற்றியவர் பெரியார் ஐன்ஸ்டைன். மூன்றிற்கும் அவர் ஈடு இணையற்ற பணி ஆற்றியிருக்கிறார்.

விஞ்ஞானத்துறையில் அவர் சிறந்த மேதையாகக்கருதப் பட்டார். சிறுபையனாக இருந்த காலத்தில் மிகவும் கூச்சமும்மந்தமும் உள்ளவராகக் காணப்பட்டவர், பின்புஙமது காலத்து மாபெரும் விஞ்ஞானியாக விளங்கினார். தமது புரட்சிக் கருத்துக்களால் பிரபஞ்சத்தைப் பற்றிய பண்டைக்காலக் கொள்கைகளை மாற்றிய விஞ்ஞானி அவர்.

சர்வதேசியத்துறையில் சர்வாதிகாரக் கொடுங்கோன்மையை அவர் எதிர்த்தார். உலகசமாதானத்தைக்தோற்றுவிக்க உலக அரசு ஒன்றை நிறுவ அவர் பாடுபட்டார். மக்கள் ஒன்றுபட்டு வாழப்படிக்க வேண்டும் என்று அவர் வற்புறுத்தினார். அழிவுக்கு அஞ்சி அஞ்சி மக்கள் வாழலாகாது எனபது அவர் கருத்து

ஹிட்லர் யூதமக்களை ஒழித்துகொண்டிருந்த காலத்தில், சியோன் இயக்கத்தவராக அவர் பணியாற்றினர். உலகத்தின் மாபெரும் அழிவுக்கருவியாகிய அணுகுண்டு உற்பத்தி செய்யத் துணைசெய்தவர் அவரே. பெருவாரியான யுரேனியத்தில் அணுத்தொடர்க் கிரியையை உண்டாக்கும் திறுவாயில் ஜெர்மானிய விஞ்ஞானிகள் இருப்பதாக அவர் ஜனதிபதி ரூஸ்வெல்ட்டுக்குத் தெரிவித்து எச்சரிக்கை செய்தார்.

## ஜெர்மனியில் பிறந்தவர்

டாக்டர் ஆல்பர்ட் ஐன்ஸ்டைன் ஜெர்மனியில் உல்ம் நகரில் பணக்காரக் குடும்பம் ஒன்றில் பிறந்தார். குழந்தைப் பருவத்திலேயே அவர் கவி எழுதினர்; பன்னிரண்டாவது வயதில் 'யூக்ளிட் ஜியாமட்ரி' பயின்றார்; பதின்மூன்றுவது வயதில் கான்ட் எழுதிய தத்துவ நூலைக கற்றார். எனினும் ஸூரிச் தொழில்நுட்பக் கல்லூரியில் சேர்வதற்கு அவர் இரண்டு தடவை பரீட்சை எழுதவேண்டியதாயிற்று. அவர் சரியான அறிவு படைத்தவரா என்றுகூட அவருடைய பெற்றோர்கள் நினைத்ததுண்டு.

ஸூரிச் நகரில் 1901-ல் அவரது கல்வி முற்றுப்பெற்றது. அதன் பின் அவர் ஸ்விட்ஸர்லாந்தில் குடியேறினர். மிலீவா மாரெக் என்னும் பெண்மணியை மணம் செய்தார். அவர்கள் இருவரும் நெடுங்காலம் நண்பர்களாக இருந்தவர்கள். மிலீவாவுககுக் கணிதத்தில் திறமை மிகுதியாக இருந்தது. ஆல்பர்ட் ஐன்ஸ்டைன் அரசாங்கப் பதிப்புரிமை அலுவலகத்தில் குமாஸ்தாவாகப் பணியாற்றினர். பகலில் அலுவலகத்தில் வேலை செய்த சமயத்திலும், மாலையில் தம் மகனை உருட்டு வண்டியில் வைத்துப் பொன் நகரத்தின் தெருக்களில் உருட்டிக் கொண்டுபோன போதும், இரவில் வீட்டில் ஓய்ந்திருந்த காலத்திலும் ஏதேனும் நுட்பமான கணித இயல் பற்றித் தம் நாட்குறிப்பில் பொறித்து வைப்பது அவரது வழக்கம்.

## சார்புநிலைக் கொள்கை

1905-ம் ஆண்டில் தமது இருபத்தைந்தாவது வயதிலேயே அவர் புகழ்பெற்ற தமது சார்புநிலைக் கொள்கையை வெளியிட்டார். பௌதிக நிகழ்வுகளுக்கு இடையே தொடர்புகள் உள்ளன என்பதை அது விளக்கியது. ஜடம், புவியீர்ப்பு, இயங்காத் தன்மை, இடம், காலம் ஆகியவற்றிற்கு அது விளக்கம் கூறியது. அக் கொள்கை கணிதத்தை அடிப்படையாகக் கொண்டது. எனினும் வானியல், வான்பௌதிகம் ஆகியவற்றின் துணையாலும் அது அமைக்கப்பெற்றதாகும்.

பௌதிகம், ரஸாயனம், விண்கோள்களின் இயக்கங்கள் பற்றிய பழங்கொள்கைகளை ஐன்ஸ்டைனின் புரட்சிக் கொள்கை மாற்றியது. எனவே, அவரது காலத்து விஞ்ஞானிகளுக்குச் சார்புநிலைக் கொள்கை அதிர்ச்சி விளைத்தது.

புரட்சிக் கொள்கையால் அவர் திடீரென உலகப் புகழ் பெற்றுவிட்டார். தலைசிறந்த பல்கலைக்கழகங்கள் அவருக்குப் பதவி வழங்க முன்வந்தன. 1912-ல் அவர் பெர்லின் நகரிலுள்ள கெய்ஸர் வில்ஹெம் நிலையத்தின் பேராசிரியரானர். அங்கு பதவி வகித்த காலத்தில் பௌதிகத்தில் அவர் நோபல் பரிசு பெற்றார்.

## அமெரிக்கர் ஐன்ஸ்டைன்

1933-வரை ஐன்ஸ்டைன் பெர்லினில் பணியாற்றினர். ஹிட்லரின் யூதர் ஒழிப்புக் கொள்கை காரணமாக 1933-ல் அவர் வெளிநாடுகளில் அடைக்கலம்புக வேண்டியதாயிற்று. முதலில் அவர் பிரான்ஸுக்கும், அதன்பின் பெல்ஜியத்துக்கும் போனர். பின்னர் அவர் இங்கிலாந்துக்குச் சென்றார். இறுதியாக அவர் அமெரிக்காவுக்குப் போனர். அங்கு நியூஜெர்ஸி மாநிலத்திலுள்ள பிரின்ஸ்டன் நகரில் மேற்படிப்பு நிலையத்தில் ஒரு வேலையில் அமர்ந்தார். அவர் தமது வாழ்க்கையின் இறுதிவரை அந்நகரில் தான் வாழ்ந்தார். 1940-ம் ஆண்டில் அவர் அமெரிக்கப் பிரஜையானர். அதற்கு முன்பே "அமெரிக்காவுக்கு வந்த முதல் அகதி" என்று அவர் பெயர் பெற்றிருந்தார்.

1952-ல் இஸ்ரேல் நாட்டின் முதல் ஜனதிபதி காலமான போது, இஸ்ரேல் அரசு அவர் ஜனதிபதியாக வேண்டுமென்று கேட்டுக் கொண்டது. அக் காலத்தில் "உயிர்வாழ்ந்த யூதர்களில் அவரே மிகப் பெரியவர்" என்று கருதப்பட்டார். எனினும், ஐன்ஸ்டைன் ஜனதிபதியாக இணங்கவில்லை. பௌதிகஉலகைப் பற்றிஆராய்வதே தமக்கு விருப்பம் என்றும், "மனிதர்களோடு நடந்து கொள்ளும் இயற்கைத் திறமையாவது அனுபவமாவது எனக்கு இல்லை" என்றும் அவர் சொல்லிவிட்டார்.

அவர் 1955-ல் காலமானர். அக்காலத்திலும்கூட அவர் புதிய கொள்கை ஒன்றை அமைக்க முயன்றுகொண்டிருந்தார்.

ஜனநாயக உலக அரசு ஒன்றை நிறுவவேண்டும் என்பது அவரது கருத்து. 1948-ல் உலக சமாதான அறிஞர் மகாநாட்டின் அமைப்புக் குழுவுக்கு ஐன்ஸ்டைன் ஒரு செய்தி அனுப்பினர். அந்தக் குழு அதை ஏற்றுக்கொள்ளவில்லை. போலந்தில் ராக்லால் என்னும் இடத்தில் கூடிய மகாநாடு அது.

## மனிதகுலம் வாழ....

அவர் அனுப்பியசெய்தியின் ஒரு பகுதி பின்வருமாறு:

"நாடுகளுக்கு மேற்பட்ட அமைப்பு ஒன்றிற்கு மட்டும் ஆயுதங்களை உற்பத்தி செய்யவும் வைத்திருக்கவும் அதிகாரம் இருந்தால், மக்கள் குலம் அழிக்கப்படாமலும் ஒழிக்கப்படாமலும் இருக்க முடியும்."

சுதந்திர ஆர்வம் மிக்கவர் அவர். எல்லா வகைச் சுரண்டலையும் அவர் எதிர்த்தார். "என் விருப்பப்படி நடக்கும் உரிமை எனக்கு இருக்கும் வரை, அரசியல் உரிமையும், சகிப்புத் தன்மையும், சட்டத்தின் முன்னிலையில் மக்கள் அனைவரின் சமத்துவமும்உள்ள ஒரு நாட்டில் தான் நான் இருப்பேன்" என்று அவர் ஒரு தடவை கூறினர்.

இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தில் ஐன்ஸ்டைன் அக்கறை மிகுந்தவராக இருந்தார். காந்திஜி காலமான போது அவர் பின் வருமாறு கூறினர்: "ஒழுக்க நெறியில் ஆர்வங்கொணடு அதில் இணையற்ற பற்றுக்கொண்டு வாழ்ந்ததே காந்திஜியின் ஒப்பற்ற சிறப்பு. அஹிம்ஸை வழியை இந்திய மக்கள் கடைப்பிடிக்கும்படி செய்தது செயற்கரிய ஒரு செயலாகும்..."

ஐன்ஸ்டைன் காலமான போது, பிரதம மந்திரி நேரு பின்வருமாறு கூறினர்: "ஐன்ஸ்டைன் உண்மையாகவே சத்தியத்தை நாடியவர்; தீமைக்கும் அசத்தியத்துக்கும் விட்டுக் கொடாதவர். இருள் மிகுந்த உலகில் ஒளியாகவும், சூழ்நிலையால் வலிமை இழந்தவர்களுக்குஉறுதுணையாகவும்விளங்கியவர் அவர்".

உருவகக்கதை

# தீமையாயினும் செய்யாதிரு

— சு. துரைசிங்கம் —

மாலைக் கதிரவன் மங்கு ஒளியுடன் மரக்கிளைகளுக்கூடே மறைந்து மறைந்து, கீழ் வானை நோக்கிக்கொண்டிருக்கின்றான். குறுகியிருந்த நிழல் நீண்டு குவலயத்தை இருளில் குளிக்கின்றனது. அந்தப் பள்ளிக்கூடத்தின் நிழலும் அக் கிராமத்தின் அரைவாசிப் பகுதியை மூடுகின்றது. ஆகவே இப்பொழுது பள்ளிக்கூடம் விட்டு இரண்டு மணித்தியாலங்களுக்கு மேலாகின்றது என்பது தெரிகிறது. வீதிவழியாக இரு நாய்க்குட்டிகள் ஆடியாடி வருகின்றன. இரண்டும் உருவத்திற் சிறிதாகக் காணப்பட்டாலும் நல்ல வாளிப்பான உடற்கட்டுடன் தோற்றமளிக்கின்றன.

இரண்டு குட்டிகளும் பள்ளிக்கூடத்திற்குக் கிட்ட வந்துவிட்டன. பள்ளிக்கூடத்தின் படலைப்புறத்தை அடைந்த குட்டிகள் படலை பூட்டப்பட்டிருப்பதைக் கண்டு மனவேதனையடைகின்றன. இல்லைத் தங்களது வழமையான உல்லாச இன்ப விளையாட்டுகளுக்கு இடையூறு ஏற்பட்டுவிட்டதே என்பதனல் ஆத்திரமடைகின்றன. அங்குமிங்குமாக நடந்து திரிகின்றன. எப்படிப் பள்ளிக்கூடத்துக்குள் போவது? படலைக்குக் கீழ்ப்புறமாகச் செல்லலாமென்றால் படலையோ தகரத்தாலானது. அதுவும் நிலத்திற்கும் படலைக்கும் உள்ள இடைவெளி நான்கு அங்குலந்தானிருக்கும். படலைக்குக் கீழுள்ள சிறு அவ்விடைவெளியாற் போகலாமென்று முடிபுக்கு வந்த குட்டிகள் முன்னங்கால்களை நீட்டித் தலையைப் பதித்துத் தவழ்ந்து ஒருபடியாகப் பாடசாலை வளவிற்குள் சென்றுவிட்டன.

படிகளைத் தாண்டி விருந்தையில் ஏறிய இரண்டும் திரும்பிப் படலையை நோக்குகின்றன. அவ்வேளையிற் படலைக்கும், விருந்தைக்கும் இடையில் ஒரு பெரிய மெலிந்த நோயுள்ள நாயொன்று போவதைக் காண்கின்றன பீதியினல் உடனே உள் மண்டபத்திற்குள் விரைந்தோடுகின்றன.

மண்டபத்தில் ஒன்றையொன்று துரத்திக்கொண்டு செல்கின்றன. இடையிடையே ஒன்றையொன்று கௌவுகின்றன.

இப்பொழுது ஒன்றின் கழுத்தில் மற்றையது கௌவிப் பிடிக்கின்றது. கௌவப்பட்ட குட்டி நான்கு கால்களையும் மேலே உயர்த்திப் புரண்டு கிடக்கின்றது. உடனே மற்றையது படுத்திருக்கும் குட்டிக்கு மேல் கால்களைப் போட்டுக் கொஞ்சி விளையாடிக் கழுத்தில் மறுபடியும் விளையாட்டுக்குக் கௌவுகின்றது.

கீழே படுத்திருந்த குட்டி ஏதோ நினைத்ததாய்த் துள்ளியெழுந்து பக்கத்திலிருந்த வகுப்பறை ஒன்றை நோக்கி ஓடுகின்றது. முன்சென்ற குட்டி கதிரைக்காலுக்குப் பக்கத்தில் தனது பின்னங்காலை உயர்த்திச் சலம் விடுகின்றது. இதைப் பார்த்த மற்றைய குட்டி மாணவர்களின் மேசைக்கும் கரும்பலகைக்கும் இடையிலுள்ள வெளியில் மலத்தைக் கழிக்கின்றது.

இவ்வேளையில் தனது மக்களைக் காணவில்லையே என்று தேடிவந்த தாய்நாய் குரல் கொடுக்கின்றது. இரு குட்டிகளும் முதலில் திகைப்படைகின்றன. பின் தாயிடம் ஓடுகின்றன.


"பள்ளிக்கூடத்துக்குள் அதுவும் வகுப்பறையில் நீங்கள் மலசலம் கழிக்கலாமா? நாளைக் காலை மாணவர்கள் படும் இன்னலை அறிவீர்களோ? அதுவும் மனிதர்களுக்கு நன்மையே செய்யப் பிறந்த நாங்கள் மனிதர்களுக்கு இன்னல்களைக் கொடுக்கலாமா? நீங்கள் இருவரும் செய்தது சரியா? ஒன்று மட்டும் சொல்லுவேன். அதாவது நீங்கள் நன்மை செய்யுங்கள்; அப்படி நன்மை செய்ய முடியாவிட்டால் தீமையாயினும் செய்யாதிருங்கள்" என்றது தாய் நாய்.


இரு குட்டிகளும் தலையைக் கீழே தொங்கப்போட்டுக் கொண்டு மௌனமாக நின்றன.


ஸி. டபிள்யூ. ஈ.

உங்களுக்கு வரவழைத்துள்ள

## ஏககால ஒளி இணைப்புகள்





கிடைக்குமிடம்:

ஸி. டபிள்யூ. ஈ. ரேடியோ இலாகா

85, மெயின் வீதி, : : கொழும்பு.

ஸி. டபிள்யூ. ஈ. விற்பனை நிலையம்

21, பிறின்ஸ் வீதி, : : கோட்டை.

REMEMBER NOW AND ALWAYS THE CWE BRINGS YOU TOP QUALITY AND VALUE

அத்தியாயம் 12

# கேட்டிருப்பாய் காற்றே

குறுநாவல்

செ. கதிர்காமநாதன்

வாழ்க்கை என்பது வேதனையானால் மரணம் அதன் சொர்க்மாகக் கூடாதா...?

வெண்கலப் பாத்திரங்களைத் தேய்த்துக்கொண்டே, நெடுக நெடுக ஒரே பாத்திரத்திற் கைகள் தாளம்போட அவள் சிந்தனை வெளியில், யாழ்ப்பாணத்திலிருந்து உயர உயரப் பறந்துகொண்டிருக்கிறாள்.

நீலவானும் தொடுமலைத் தொடர்களும் சங்கமமாக முயன்றுகொண்டிருந்த அவள் பிறந்த பிரதேசம்... காட்டு மரங்களும் கானகத்துப் புட்களுமாக – கல்லுப் பாறைகளும் கசிந்தோடும் நீரருவிகளுமாக எழில் நிறைக்கும் அந்தக் குறிஞ்சிமண் தொடரில்... எலமலைத் தோட்டத்தின் அழகே அழகு...

கிளைபரப்பிக் கெட்டியாக முறுக்கேறியிருக்கும் கொய்யா மரங்களில் ஏறி, கொய்யாக் கனிகளைக் கடித்துக் குதறிக் குதித்தோடுவதில் இருந்த குதூகலம்... தேயிலைத் தோட்டத்தில் அங்குமிங்குமாக அலைவதும் சுடலைகளிலே போய்ப் பழைய சமாதிகளுக்கருகில் விளையாடுவதுமான காட்சிகள்... அக்காள் புவனம் நறுக்கென்று தனது வெள்ளிமோதிரக்கையால் குட்டுவதும், தான் ஓவென்று அலறுவதும்... மூக்குச் சளியும் முகமுமாக ஊத்தை படிந்த சட்டையை வாயில் வைத்துச் சப்பிக் கொண்டு அழுதழுது தோட்டப்பள்ளிக்குப் போவதும்...... எல்லாமே அவள் முன்னால் நிழலிடுகின்றன...

அந்தவாழ்வு - இன்றைய நிலையில் பிடித்தமாக அவளுக்கு இருக்கிறது... நினைவுகள் பசுமையாக அவள் மனதில் படிந்த நாளில் இருந்து அவள் வாழ்ந்துவந்த வாழ்க்கையில் அவளுக்கு வெறுப்பு... பல சமயங்களில் தோட்டத்துக்குள் இருந்த சுடலைச் சமாதிகளில் தானும் உறங்க வேண்டுமென்று அவள் நினைத்திருக்கிறாள்...

நாட்டுப் புறத்துக்குப்போய் கித்துள் கள்ளை நன்றாக அவளுடைய 'ஆயி'யும் அப்பனுமாகக் குடித்துவிட்டு வந்து தங்களுக்குள் போடும் அட்டகாசத்தில் 'லயமே' ஒரு கலக்குக் கலங்கும்... பாப்பாவுக்கும் வீரய்யனுக்கும் இதெல்லாம் சர்வ சாதாரணம்... குணவதிக்கோ இந்த ரகளைக்குள் இருந்து அடையும் கஷ்டத்தை விடச் செத்துப்போகலாம் போலிருக்கும்...

புவனத்தில் தான் வீரய்யனுக்கும் அன்பு. பாப்பாவுக்கும் அன்பு.

உதை...அடி...குட்டு — எல்லாம் குணவதிக்குத்தான்... அவள் எல்லாவற்றிற்கும் மௌனியாக இருப்பாள்...யாருமில்லாத சமயம் பலாமரத்தின் கீழ் போயிருந்து விசும்புவாள்... அதை இப்பொழுதும் நினைக்கையில், இப்பொழுது என்னதான் வாழ்வு வாழ்ந்துவிட்டாள்...?

வீரய்யனின் அடியில், பாப்பாவின் அசிங்கமான வசவுகளில் காய்ச்சுக்கொண்டிருந்த குணவதியின் உள்ளம் பெரியய்யாவோடு காந்திமதி வீட்டிற்கு வருகின்றபோது வேதனையடையவில்லை...பதிலாக இனந்தெரியாத குதூகலம்...

'புவனத்திலைதானே அன்பு... நான் எப்பவும் வேறை...'

புவனத்துக்கும் தனக்கும் இடையே ஒரு ஏற்றத் தாழ்வைக் கற்பித்துக்கொண்டு அந்த மனவேதனையில் ஊறி ஊறிக் கசப்பாகவே மாறி விட்ட அவள், பழனியாயி காட்டிய பயத்திற்குக் கூட வசைந்து கொடுக்காமல் காந்திமதியின் வேலைக்காரியாக ஒப்புக் கொள்கிறாள்...

முதல் நாள் ஈஸ்வரியையும் காந்திமதியையும் ஒன்றாகப் பார்த்தபோது, காந்திமதியின் பரிவில் தான் 'புவனமா'கிவிடலாமென்று அவள் பிஞ்சுள்ளம் எண்ணுகிறது... எண்ணங்கள் நாட்போக்கில் மாறுகின்றன... உண்மை அப்பொழுதுதானே துல்லியமாக முடியும்...!

"எடியே என்னடி செய்யுறாய்? எவ்வளவு நேரமெண்டு பாத்திரந் தேய்க்கவெண்டு கிணத்தடிக்குப் போனநீ... உனக்கு முதுகிலை கம்பிகாய வைத்துச் சுடாத குறை... அசமுகியாட்டம் ஆள்... கொப்பன் கடிதம் போட்டிருக்கிறான்... பெத்துவிட்ட சீர்கேட்டிலை..."

அலட்சியமாகத் தரையில் வந்து விழுகிறது ஒரு போஸ்ட் காட்...

ஆவலோடு எத்தனையோ நாட்களுக்குப் பிறகுவந்த அந்தக் 'காட்'டைப் பார்க்கும் குணவதியின் முகத்தில் மலர்ச்சியும் வெறுப்புமாகக் கலவையிடுகின்றன...

"புவனத்துக்குக் கலியாணமாம்... நான் தான் என்றும் அன்னியள்... எல்லில ஒருவருக்கும் கவனமில்லே..."

'நான் என்ன செய்தேன்...? அப்புகாமி கூட என்னாலை... இப்ப என்ன செய்யிறாரோ...?'

அவளால் மேற்கொண்டு எதுவுமே செய்ய முடியவில்லை.

(2)

அப்புகாமியின் நிழலைப் பார்த்து அப்புகாமியே சிரிக்கின்றான்.

யாழ்ப்பாணம் நெடுஞ்சாலையில் தார் உருகி வழிய வாட்டி வதைக்கும் கோடை வெய்யில் அவனுள்ளே புழுங்கும் நீற்று வெண்மையில் துச்சமாகின்றது...

ஓடு என்று விரட்டியபோது, ஓடிப்போய் சோர்விலே- சோகத்திலே குமைந்து, போகிற போக்கிலே தன் வாழ்க்கையைச் செப்பனிட்டுக் கொளவதா...?

வாழ்க்கை அவனை வெறுக்கலாம்... அவன் வாழ்க்கையை வெறுக்கலாம்... அதற்காகப் போராடத் தெரியாத பயந்தாங்கொள்ளியாக அவன் துறவி வேடம் போடுவதா...?

'வாழத்தான் வேண்டும்— அதுவும் யாழ்ப்பாணத்திலே வாழ்ந்துதான் பார்க்கவேண்டும்...

எதிர்ப்புகள் பின்தொடரட்டும்... ஆனால் அந்த எதிர்ப்புகளின் பலன்களுக்குக் கண்ணீர் விட்டாலும் எதிர்ப்புகளோடு முட்டி மோதித்தான் பார்க்கவேண்டும்...'

தளர்ந்து, இருண்டு இருவில் தளரும் அப்புகாமி உறுதியிற் திரண்டு உயிர்த்துத் தினவுடன் நடந்துகொண்டிருக்கிறான்...

எதிரே— பண்டா பேக்கரி.

'ஒருக்கா கேட்டுப் பாத்தா என்ன...? பண்டா... அப்புகாமி... எல்லாம் எங்கடை பேரு... எங்கைதான் இருந்தா என்ன... நம்முடைய பொடியன் எண்ட ஈரம் நெஞ்சிலை இருக்காதா...'

"முதலாளி... எனக்கு பேக்கரியிலை வேலை ஏதும் இருந்தா தாருங்க..."

பண்டா முதலாளி ஏற இறங்கவைத்துப் பார்த்து எச்சிலை உமிழ்ந்துகொண்டு உறுமுகிறார். அந்த உறுமலில் அவன் சுண்டெலியாக வேண்டும் என்ற நினைப்போ என்னவோ.

"எந்த ஊர் ரௌடிப்பய... நீ... ஓட்டடா இடத்தைவிட்டு... ஓடிப்போய் எங்கையாவது முட்டை தூக்கிப பிழை... இல்லாட்டி கடலிலை, குளத்திலை விழுந்து சா..."

நல்லதொரு ஆலோசனை சொல்லிவிட்ட பீடுநடையில் முதலாளி பண்டா உள்ளே போகிறார். அப்புகாமி வெளியே வருகிறான்...

'நல்ல கசவாரப்பய... கடலும் குளமுங்கூட இவங்கட சொத்தா இருந்தா விழுந்து சாகிறதுக்குக்கூட ஒரு போக்கிடம் இருக்காது...'

மறுபடியும் அப்புகாமியின் போக்கற்ற பயணம்—

யாழ்ப்பாணத்தின் சந்துபொந்தெல்லாம் நுழைந்து, கடைசியில் நாலைந்து ரௌடிகளோடு சேர்ந்து அவனும் ரௌடியாகிறான்...

அவர்களுடைய தொழில்—

மூட்டை தூக்கிப் பிழைப்பது... கிடைக்கும் காசில் வயிற்றுக்குப் பசியிருப்பதை உணர்ந்து, அரைகுறையாக உணவென்ற பெயரில் எதையாவது நிரப்பிக்கொண்டு மீதிக்குக் கள்ளும் பீடிகளுமாக...

அதுவே அவர்களின் சொர்க்கம்... குஷி... எல்லாமே அது தான்.

படுக்கை— பெரியகடைச் சந்தை.

பந்தம், துணை எல்லாமே அந்த ரௌடிக் கூட்டங்களுக்கு அவர்கள் தான்.

காலம் மனிதனை எப்படியோ எல்லாம் மாற்றுகிறது... நல்லவனாக்குகிறது... கெட்டவனாக்குகிறது... வெறியனாக்குகிறது ... வேண்டத்தகாத சமூக எதிரியாக்குகிறது... எல்லாவற்றுக்குமே காரணம் இந்தச் சமூகம் தானே...?

ரௌடிகளில் நல்லவர்கள்—

நல்லவர்களில் ரௌடிகள்—

அப்புகாமி சீட்டி அடித்துக்கொண்டே அந்தக் குறுகிய ஒழுங்கைக்குள் இறங்கி மெல்ல நகர்கிறான்... ஒழுங்கைகளை வலம் வருவதும், மூட்டை தூக்குவதும், உறங்குவதும் தான் அவனுடைய தொழில்...

(3)

காந்திமதியின் வீட்டில் டாக்டர் ஐயாத்துரையின் கார் வந்து நிற்கின்றது.

தனது லோங்ஸை இழுத்துத் தொந்திக்கு மேல் விட்டுக்கொண்டே அலட்சியபாவத்துடன், இராமமூர்த்தியின் அருகில் இருந்த 'குஷனில்' உட்காருகின்றார் ஐயாத்துரை...

"எங்கே காந்திமதி?"

"வெளியிலை போயிருக்கிறா..."

டாக்டர் சிறிது நேரம் அமைதியாக இருக்கிறார்; பக்கத்தில் வந்து நின்று மடிப்புக் கலையாத கவர்ச்சிகரமான உடுப்புகளில் ஈஸ்வரி தனது விரல்களை வைத்துத் தடவி விளையாடிக்கொண்டிருக்கிறாள்.

"என்ன இராமமூர்த்தி... நான் சொன்னதைப் பற்றி என்ன நினைக்கிறாய்... நான் குணவதியை 'முடிக்க'த்தான் போறன்... காந்திமதி என்ன சொல்லுறாள்...?"

நரைத்துப்போன — வெண் மண்டைத் தலையில் கையைத் தடவிக்கொண்டே அசட்டுச் சிரிப்புச் சிரிக்கிறார்...

"இது நல்லாயிராதெண்டு நினைக்கிறன்... எங்கேயோ உள்ள இந்தியாக்காறப் பெட்டை... எங்களின்ரை சாதி சனம் எல்லாம் எங்களை எவ்வளவு பேசுங்கள்... இந்த வயதிலை உங்களுக்கேன் இந்தக் குணம்..."

ஐயாத்துரைக்கும், இராமமூர்த்திக்கும் காரசாரமான விவாதம்... நடுவில் காந்திமதியும் வந்துவிட்டாள்... மூன்று பேருமாகச் சேர்ந்து ஒரே களாபுளா... ஈஸ்வரி மெல்லமாக அந்த இடத்தைவிட்டு வெளியேறிக் குசினிக்குள் வருகிறாள் ... அவள் கையில் ஒரு ஐம்பது ரூபா நோட்டு ... டாக்டர் ஐயாத்துரையின் 'பேர்சைத்' திறந்து அவள் எடுத்ததோ பேர்சை வீசியெறிந்ததோ எவருக்குமே தெரியாது ...

"குணவதி ..."

குணவதி ஒன்றும் பேசவில்லை. உலையில் அரிசியைக் களைந்துபோட்டுக்கொண்டிருக்கிறாள்...

"என்னோடை உனக்குக் கோவமா... எங்கட அப்பப்பா இனி உனக்கு தோடு எல்லாம் வாங்கித்தருவார் ...கலியாணங் கட்டப்போறாராம் உன்னை ... எனக்குத்தானே முதல் தெரியும்..."

ஈஸ்வரி ஏதோ சொல்லிக்கொண்டே செல்கிறாள். குணவதியின் காதுகளில் எதுவுமே விழவில்லை... அவள் உடலமே உயிரற்றது போல எந்த

(10ம் பக்கம் பார்க்க)

## நினைவும் நிழலும்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

"ராசாவுக்குச் சயிக்கிள்வாங்கிக் கொண்டுவரப்போறன்"- தன்னையுமறியாமல் வெடித்து வெளிவந்த வார்த்தைகள் ஈனஸ்வரத்தில் ஒலித்துத்தேய்கின்றன. அதைத்தவிர வேறொன்றும் சொல்ல முடியாத சிக்கல்.

அன்னம் ஆட்டைக்கொண்டு தெருப்படலையைத் தாண்டும் போது 'ம்மய்...ம்மய்... என்று ஆடுகத்திய சத்தம் அவளுடைய சின்னக் குடிசைவரை எதிரொலித்தது.

அரைமணி நேரத்துள் அன்னம் திரும்பிவந்துவிடுகிறாள்.

சயிக்கிள் ஓடும் பாவனையில் கைகளையும் கால்களையும் ஆட்டிக்கொண்டு படுத்திருக்கின்றான் சந்திரன்.

அவள் ஓடோடி வந்து அவனை அணைத்துக் கொள்கிறாள். சயிக்கிள் ஓட வேண்டும் என்ற நினைவு தீயாக வியாபித்து அவன் மனதில் சுவாலையாகப் பற்றிவிட்டது. அந்தத் தீ நாக்கின்வெப்ப வெளிப்பாடு அவன் சயிக்கிள் ஓடும் பாவனையுடன் ஒன்றிக் கலந்து கொண்டது.

அவனின் உடம்பு ஜில்லிட்டுக் குளிர்கிறது.

'கடவுளே என்ரை குஞ்சைக் காப்பாத்து'

அன்னத்தின் மனதோடு கைகளும் குவிந்து பிரார்த்தனையில் லயிக்கிறது.

மகனைக் குனிந்து நோக்குகிறாள். மனதின் உள்ளும்புறமும் இருள் சூழ்ந்து—

அவன் கைகளும் கால்களும் சயிக்கிள் சவாரி செய்யும் பாவனையிலே தொழில்படுகின்றன.

இருளா!
ஒளியா!

(யாவும் கற்பனை)

# முத்துக் குவியல்

— உடுநகரான் —

உங்களுக்குப் பிறரிடம் அன்பு ஏற்பட்டால் நீங்கள் அதை எப்படிக் காட்ட வேண்டும்? அவர்களை நீங்கள் புகழ்ந்து விட்டுப் போய்விடக் கூடாது. அது அல்ல அன்பு. அவர்களுக்கு நீங்கள் தொண்டு செய்யவேண்டும். நமக்கு ஆலயங்கள் வேண்டாம். ஆடம்பரமான விழாக்கள் வேண்டாம். முத்திக்கு வித்தாகும் யோக சாதனங்கள் வேண்டாம். அதோ கால்சுட, தலை கொதிக்க, நெஞ்சு தளர, நாவறள, வயிறு வாட, கையிலே கப்பரை ஏந்தி கஞ்சிக்குக் கதறும் எண்ணற்ற ஏழைகளுக்கு கிராமம் கிராமமாக நமது கால்கள் தேய, உடம்பு நோக நடந்து சென்று தொண்டு செய்வோம். —விவேகானந்தர்.

∴ ∴ ∴

கல்கி அவர்கள் ஆனந்தவிகடனின் ஆசிரியராக இருந்த காலத்தில் சிறுவர் சித்திரப்போட்டி ஒன்று நடத்தினார். போட்டியில் பரிசுக்குரிய சித்திரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. ஓர் உயர் அதிகாரி கோபங்கொண்டவராய் விகடன் காரியாலயத்திற்குச் சென்று பரிசுச் சித்திரங்களிலும்பார்க்க எனது குழந்தை அனுப்பிய சித்திரம் மிக அழகானது என்று ஆரம்பித்தார். "எதனால் இவ்வளவு நிச்சயமாகச் கூறுகிறீர்கள்?" என்று கல்கி கேட்டார். வந்தவர் "அந்தச் சித்திரம் நானே வரைந்தேன்" என்றார். உடனே கல்கி, "அதனாற்றான் அந்தச் சித்திரத்துக்குப் பரிசு கொடுக்கவில்லை. இது குழந்தைகள் போட்டி, குழந்தைகளின் பெயரில் பெரியவர்கள் வரைந்த சித்திரத்துக்கு எப்படிப் பரிசு கிடைக்கும்?" என்று சிரித்தபடி சொன்னார். வந்தவர் நிற்பாரா?

∴ ∴ ∴

உலகத்தார் நாடும் பெருமைகளை விரும்பேன். ஆனால் உண்மையை அறிவதொன்றே என் விருப்பம்.—ஸாக்ரடீஸ்

∴ ∴ ∴

ஒருவன் இம்மையில் புரியும் நற்பணியே அவனுடைய உண்மையான செல்வமாகும். —முகம்மது நபி (ஸல்)

∴ ∴ ∴

வாழ்வதற்காகட்டும், சாவதற்காகட்டும் அஞ்சுவதற்கே நேரமில்லாதபடி ஒவ்வொரு விநாடியிலேயும் பணிபுரிந்தபடி இருப்பதே சிறந்தபடிவாழ்வதாகும். —எமர்சன.

தமிழ் வளர்த்த சான்றோர்கள்: 9

# தனித்தமிழ் உரைநடையின் தந்தை

# தவத்திரு மறைமலையடிகளார்

## 1876 — 1950

— வித்துவான் க. வேந்தனூர் —

எச். எஸ். ஸி. வகுப்பில் பயிலும் மாணவர்களுக்குப் பயன் தரத்தக்க முறையில் 'தமிழ் வளர்த்த சான்றோர்கள்' என்ற வரிசையில் தமிழ்ப் பேரறிஞர்கள் சிலரைப்பற்றிய கட்டுரைகள் இங்கு தொடர்ந்து வெளிவரும்.

மறைமலையடிகள் செந்தமிழ் சிவநெறி உலகின் சிந்தாமணியனைய செம்புலச் செல்வர். அருந்தமிழ்ப் புலமையுடன் ஆரியத்திலும், ஆங்கிலத்திலும், ஆராய்வுப்புலமை ஆர்ந்த அறிவொளிக் கதிரவன். தமிழ்மொழி தனித்தியங்கும் ஆற்றல் வாய்ந்த உயர் தனிச் செம்மொழிகளுள் தலையாக வைத்துப் போற்றும் தகைசான்ற உயர்மொழி என்பதை உலகம் ஒப்புக்கொள்ளத் தக்கவகையில் — மொழிநூல்ஆராய்ச்சிப் புலவர்கள் ஏற்று வழிவழியாக போற்றக் கூடிய முறையில் மெய்ப்பித்த மூதறிவாளன். இவர் காவிரியின் வளத்தால் கலைவளனும் நிலவளனும் பெற்று ஓங்கும் சோழநாட்டைச் சேர்ந்துள்ளதும், "கற்றூர் பயிலும் நாகை என்று" நாவுக்கரசரால் பாடப்பெற்றதுமாய நாகைப்பட்டினத்தை அடுத்துள்ள காடம்பாடி என்னும் கவினுறு சிற்றூரில் தோன்றியவர். இவரின் தந்தையார் சோழியச்சைவ வேளாள குலத் தலைவராய் வீற்றிருந்துவாழ்ந்த சொக்கநாதபிள்ளை. தாயார் தன்னிகர் இல்லாத் தவச் செல்வி சின்னம்மையார். அடிகளின் இளமைப்பருவக் கல்வி நாகபட்டணப் பாடசாலையில் முற்றுப்பெற்றது. பள்ளிப்பருவம் முற்றியபின் தெள்ளும் தமிழ்ப்புலமை அடைதற்பொருட்டு அக்காலத்தில் சிறந்த தமிழ்ப்புலமையாளராய் திகழ்ந்தவரும், திருசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்களின் உயர்நிலை மாணவர்களில் ஒருவருமான நாராயணசாமிபிள்ளையவர்களிடம் நற்றமிழ், இலக்கண நூல்களையும் ஆராய்ச்சி முறையில் கற்றுத்தெளிந்தார். அடிகள் பதினறு ஆண்டுநிரம்ப முன்னரே பன்னூற் புலமையாளராய்த் திகழ்ந்தார். அக்காலத்தில் வேதம், ஆகமம், உபநிடதம், புராணம், இதிகாசம் என்னும் வடமொழிநூல்களின் ஆழம் கண்டவரும் வைதிக சைவ சித்தாந்தசண்டமாருதம் என்னும் பட்டம் கொண்டவருமாகிய சோமசுந்தர நாயகர் அவர்களின் தொடர்பு அடிகளுக்குக்கிடைத்தது. அடிகள் நாயகர் அவர்களிடம் சைவசித்தாந்த உண்மைகளை உணர்ந்து சிறந்தார். பின்னர் பேராசிரியர் நல்லசாமிப் பிள்ளையின் அன்பையும் ஆதரவையும் பெற்றுச் சித்தாந்த தீபிகை என்னும் திங்கள் இதழின் ஆசிரியராகத்திகழ்ந்தார். (1897)

இங்ஙனம் அடிகளின் ஆராய்ச்சி வன்மையும், சைவசித்தாந்த நூல்உணர்ச்சியும், பலதமிழ் அறிஞர்களின் பெருமதிப்பையும் பாராட்டையும் பெற்றுக்கொடுத்தன. இவற்றின் பயனால் அடிகள் 9-3-1898ல் சென்னையில் சிறந்துவிளங்கும் கிறீஸ்தவக் கல்லூரியில தமிழ் ஆசிரியராய் வீற்றிருந்து தமிழ்ப்புலமை நடாத்தும் பேற்றைப்பெற்றார். கிறீஸ்தவக்கல்லூரியின் தொடர்பு அடிகளாரின் தமிழ்ப் புலமையைத் தக்கோர் அறிந்து மதிக்கத் தக்க வாய்ப்பை வழங்கிவிட்டது. பி. ஏ. பட்டதாரி வகுப்பு மாணவர்களுக்குச் சங்க நூல்களில் ஒன்றாகிய முல்லைப்பாட்டைப் பாடம் சொல்லவேண்டிய சூழ்நிலை அடிகளுக்கு வாய்த்தது. அடிகள் முல்லைப்பாட்டின்பொருள் நயத்தை மாணவர்கள் உள்ளம் கொள்ளத் தக்க வகையில் எடுத்துரைத்தார். முல்லைப்பாட்டின் நலன் உணர்ந்த மாணவர்கள் அடிகள் சொல்லிய உரைச்சிறப்புக்களை எல்லாம் திரட்டி நூல் உருவமாக வெளியிட முன்வந்தார்கள். பொருளும் வழங்கினர்கள். அப்பொழுதுதான் தமிழ்மக்கள் உள்ளத்தில் சங்கநூல் ஆர்வத்தை அளித்து தமிழை வாழ்வித்த தனிப்பெருஞ்சிறப்பைத் தனக்கே உரித்தாக்கிக் கொண்ட முல்லைப்பாட்டு ஆராய்ச்சியுரை வெளிவந்தது. முல்லைப்பாட்டு ஆராய்ச்சிஉரைதான் அடிகள் முதல்முதலாகத் தமிழ் அன்னைக்குச் சூட்டியருளிய அணிகலனகும். அடிகளின் ஆழ்ந்து அகன்று நுணுகிய சங்கநூற் புலமைத் திறனையும் பிறமொழிகலவாத தூயதமிழ் மொழி நடையையும் கண்ட சான்றோரின் உள்ளம் தழைத்தது. இதனையடுத்துப் பட்டினப்பாலை ஆராய்ச்சி உரையும் வெளிவந்தது. அடிகளின் புகழ் தமிழகம் எங்கும் பரவியது. அடிகளின் விரிவுரையைக் கேட்டுக்கேட்டு தமிழ்மக்கள் மகிழ்ந்தார்கள். புலவர்கள் புகழுரை வழங்கினர்கள்.

இங்ஙனம் தமிழ் ஒளி வீசி தமிழ்மக்களின் அக மலரை மலர்த்தி அறிவுத்தேன் வளங்கிய அடிகளாரின் உள்ளத்தில் தமிழ்மொழியின் மேம்பாட்டையும் தமிழர் நாகரிகத்தின் மேம்பாட்டையும் உலகறியச் செய்யவேண்டும என்னும் ஊக்கம் உண்டாயது. ஒரு மொழியில், பிறமொழிச்சொற்கள் அளவுக்கு மிஞ்சிக் கலப்பதனல் அம்மொழியின் தனிப்பண்பு சிதைந்து அழிந்துவிடும் என்பதே அடிகளின் கொள்கையாகும். மொழிநூல் ஆராய்ச்சியாளர் கொள்கையும் இதுவேயாகும்.

ஒருமொழியில் உள்ள சிறந்த கருத்துக்களை நூல்களை மொழிபெயர்த்துத் தமது மொழியில் ஆக்கிக் கொள்வது சிறந்ததாகும். தமிழ்மொழியில் சிறந்த சொற்கள் இழக்க அச்சொற்களை நீக்கி அவற்றுக்கு பதிலாக வடமொழிச் சொற்களை எழுதுவதும் பேசுவதும் பெருந்தவறான செயலாகும். இச்செயலால் தூய தமிழ்மொழிச் சொற்கள் வழக்கொழிந்துபோக அவ்விடத்தில் பிறமொழிச்சொற்கள் நிலைபெற்று, பெருகி வளர்ந்து காலப்போக்கில் தமிழின் தனித்தன்மை கெட்டு வேறோர் மொழியாக மாறவும் கூடும். தமிழிலமொழிபெயர்க்க இயலாது உலகம் முழுவதற்கும் பொதுச் சொற்களாய் உள்ளவற்றை ஏற்றுக்கொள்வதால் தமிழ்மொழி அழியாது பிற எம்மொழியும் அழியாது. ஆனல் நாள்தோறும் தமிழ்மக்கள் நாவில் நின்று வாழ்ந்துவரும் திருமணம், சோறு, நீர், உறவினர், மூத்தவன், இளையவன் முதலிய தமிழ்ச்சொற்களை ஒதுக்கி விவாகம், சாதம், சலம், பந்துக்கள், சிரேட்டன், கனிஷ்டன் என்னும் வடசொற்களை எழுதுவதும் பேசுவதும் தமிழின் மொழிவளத்தையும் பொருள் வளத்தையும் சிதைத்துவிடும் என்பதே அடிகளின் அழுத்தமான கொள்கையாகும்.

அடிகளார் ஆக்கியருளிய மாணிக்கவாசகர் வரலாறும் காலமும் என்ற ஆராய்ச்சிப் பெருநூல் தமிழ்மொழிக்கு ஓர் முழு மணியாகத் திகழ்கின்றது. பரந்து பட்ட ஆராய்வுப் புலமையுடன் அந்நூல் எழுதப்பட்டிருக்கின்றது. உலகில் மக்கள் வரலாற்று நூல் தொடங்கிய காலந்தொட்டு இன்றளவும் தமிழினமும் தமிழ் இலக்கியமும் எய்திய மாற்றங்கள் யாவும் அந்நூலில் ஆராயப்படுகின்றன. அடிகளாரின் தொண்டையும் தனித்தமிழ் ஆர்வத்தையும் பற்றி கலைமகள் ஆசிரியர் திரு. கி. வா. ஜெகந்நாதன் பின்வருமாறு கூறியுள்ளார்:

"இவருடைய தனிப்பற்றுத் தமிழினிடந்தான் இருந்தது. வடமொழி கலவாமல் தமிழில் எழுதவேண்டுமென்ற முயற்சியைத் தொடங்கி இவர் வெற்றி பெற்றார். இவரைப் பின்பற்றி தனித்தமிழில் எழுதுவோர் பலர் இன்றும் இருக்கின்றனர். மறைமலையடிகள் வடமொழியின்பால் உள்ள வெறுப்பால் இந்தக் கொள்கையை மேற்கொள்ளவில்லை. தமிழின்பாலிலுள்ள முக்கிய அன்பே அதற்குக் காரணம். இவர் நூறு புத்தகங்கள் வரையில் எழுதியுள்ளார். பல துறைகளிலும் இவர் நூல்கள் இயற்றினர். நாவல், கட்டுரைகள், மொழிபெயர்ப்பு, ஆராய்ச்சி, உரை முதலிய பல்வகைகளும் இவர் நூல்வரிசையிற் காணலாம்."

உயர் பெரும் புலவர் திரு. வி. க. அவர்கள் "மறைமலை ஒரு பெரும் அறிவுச் சுடர். தமிழ் நிலவு. சைவ வான். தமிழே சிவமாகவும் சிவமே தமிழாகவும் அடிகளுக்குத் தோன்றுகின்றன என்று யான் கருதுகிறேன். இரண்டையும் ஒன்றாகக் கண்டவர் திருஞான சம்பந்தர். திருஞானசம்பந்தரிடத்தில் மறைமலையடிகள் கொண்ட காதற்கு ஓர் அளவில்லை. தென்னாடு பன்னெடுங்காலம், தன்னை மறந்து உறங்கியது. அவ்வுறக்கம் போக்கிய பெருமை மறைமலை அடிகளுக்குண்டு. அவர் தம் தமிழ்ப்புலமையும், வடமொழிப் புலமையும், ஆங்கிலப் புலமையும் ஆராய்ச்சியும் பேச்சும் எழுத்தும் தொண்டும் தென்னாட்டை விழிக்கச் செய்தன. தென்னாடு அடிகளால் விழிப்புற்றது என்று மண்ணும் முழங்கும், மரமும் முழங்கும். அடிகள் பேச்சு, பல பேச்சாளரைப் படைத்தது. எழுத்து, பல எழுத்தாளரை ஈன்றது. நூல் பல நூலாசிரியன்மாரை அளித்தது. அடிகளே தென்னாடு. தென்னாடே அடிகள்." எனப் பாராட்டிப் பரவுகின்றார்.

இங்ஙனம் புலவர் போற்றும் புகழுடைய மறைமலை அடிகளார், ஆக்கியருளிய நூல்கள் அளக்கலாகாப் பொருள்வளமும் ஆராய்ச்சி வளமும் நிரம்பியனவாய் விளங்கித் தமிழ் மொழியை அணிசெய்கின்றன.

வேளாளர் நாகரிகம், திருவாசக விரிவுரை, திருக்குறள் ஆராய்ச்சி, சிவஞானபோத ஆராய்ச்சி, சகுந்தலை நாடகம், கோகிலாம்பாள் கடிதங்கள், சிந்தனைக்கட்டுரைகள், சைவசித்தாந்த ஞானபோதம் முதலிய பல நூல்களை ஆக்கியுள்ளார்.

அடிகளின் படிப்பார்வம் மிகமிகப் பெரிது. அறுபதினயிரம் ரூபாய்பெறுமதியுள்ள நூல்களை அடிகள் தமது நூல்நிலையத்தில் தொகுத்துவைத்திருந்தார்கள் என அறியும் பொழுது எமதுள்ளத்தில வியப்பும், தமிழ் உணர்வும் அன்பும் அலை எறிகின்றன. சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் 24-8-1958-ல் அடிகளின் பெயரால் நிறுவிய மறைமலையடிகள் நூல்நிலையத்தில் அடிகள் தொகுத்துவைத்திருந்த நூல்கள் யாவும் வைக்கப்பட்டுள்ளன. அடிகளின் நினைவுக்குறியாக நிலவும் அந்நூல்நிலையம் எண்பதினயிரம் ரூபா செலவில் சென்னையில் (105, லிங்கச்செட்டியார் தெரு) நிறுவப்பட்டுள்ளது. அடிகளின் தமிழ்த்தொண்டும் புலமையும் தமிழ்கூறும் நல்லுலகை வாழ்வித்த மாண்பை எண்ணியெண்ணி இன்பமடைவோமாக.

அடுத்த வாரம்

சின்னத்தம்பிப் புலவர்

# கேட்டிருப்பாய் காற்றே

(9ம் பக்கத் தொடர்ச்சி)

உணர்ச்சிகளுமே அறியாமல் திக்பிரமையடைகிருள் ...

'என்ன —? இதற்குத்தானு அப்புகாமி விரட்டப்பட்டான்...?'

இந்த நரகத்தைவிட்டுஅவள் வெளியேற வேண்டும் ... ஒவ்வொரு நிமிடங்களும் அவளைத் தேடி ஒவ்வொரு ஆபத்துக்கள் ... இனி என்ன என்னவோ?

"இந்தா உனக்கு காசு ... நான் வாறன் ... அப்பப்பாட்டைச் சொல்லி உனக்குச்சேலை சட்டையெல்லாம் எடுத்துத் தாறன் ... நீ அழாதை ..."

ஈஸ்வரி போய்விட்டாள். ஆனல் அவள் சொல்லிவிட்டுப் போனசொற்கள் ... ?

குணவதி தீர்மானித்துவிட்டாள் ... அவள் தீர்மானம் நிறைவேறுதற்கு வேண்டியது ஒன்றே ஒன்று ...!

அது —

இருட்டு!

## (4)

'புன்னைக் கட்டுவனும் பொன்னி மகள் சின்னத்தங்கப்...'

அப்புகாமியின் வாயில் இருந்து அசிங்கமானபாடல்...

அவனுடைய அந்தப்பாடலைக் காற்று கேட்கிறது ... இந்தச் சமூகம் கூட அதைக் கேட்கிறது ... விரக்தியில்; சமூகப் புறக்கணிப்பில் ரௌடியாகிவிட்ட அவனின் ஏக்கத்துடிப்புகளையும் அதன்பெருமூச்சுக்களையும் அணு அணுவாக, ஆழ்ந்த சோகத்தின் இழைகளாகக் காற்று உணர்கிறது ... சமூகம் வெறும் ரௌடித்தனமான அலட்சிய பாவத்தை அதிற் கற்பிக்கின்றது ...

அவனுக்கு எவரைப்பற்றியும் கவலையில்லை ... அவன் நினைத்தால் பாடுகிருன் ... இல்லாவிட்டால் பேசாமல் உறங்குகிருன் ... அது அவன் இஷ்டம் ...

அப்புகாமி சென்றுகொண்டிருந்த ஒழுங்கையில் ஒரு முடக்கு —

அந்த முடக்கு நேராக நீளுகிறது... அதன் நீளமான தொலை தூரத்தில், ஒளியைப் பாய்ச்சிகொண்டு ஓடிவரும் அந்தக்கார் ...

"காலமை ரெயிலிலை ஓடு..."

"இல்லை... இல்லை ...காலமை இல்லை ... இப்பவே போக் காட்டிட்டுறேன் ... நான் இப்ப ரௌடிடா ...ரௌடி ... ஐயாத் துரைக் கிழவனுரே ..."

அப்புகாமியின் கைகள் மடங்கி நீள்கின்றன ... திருப்பத்தின் முடக்கில் பூவரசமரத்தோடு மறைந்துகொண்டுநிற்கிருன்... அவன் கைகளில் தெருவோரமாகக் கிடந்த பாராங்கல் ...

ஒளி பெரிதாகிப் பெரிதாகி நெருங்கும் வேளை — இருள் பெரிதாகிப் பெதாகி அவனைச் சூழ்கிறது ...

'படீர்'

அப்புகாமியின் கால்களிலேயே கல்பட்டதைப்போல கல் காலோடு மருவி விழுந்து, மண்ணைக் கிளறிக்காலில் வீசியடிக்கிறது ...

'பளார்'

கன்னத்தில் வலிமையான தாக்கல் ... அவன் தன் கை முஷ்டியை உயர்த்தித்தன்னைத் தாக்கியவனைத் தாக்கமுடியாமலே அவன் கை தாழ்கிறது... கால்கள் ஓடத்துடிக்கின்றன... ஆனல்... ஆனல்... ஓடமுடியாதபடி அவனை அழுத்தும் அந்த அழுங்குப்பிடி ... ?

"அடே ரௌடிப்பய ... நடடா ஸ்டேஷனுக்கு ...என்ன கல்லுத்தூக்கி காருக்கு எறியவாடா பாக்கிறே ... வா ... அங்கே ... பாத்துக்கிறேன் ..."

அப்புகாமி பொலிசைப் பின் தொடர்கிருன் ...

அவன் வாழ்ந்த இந்த உலகம் —

அந்த நரகத்திலும் —

நல்லவர்கள் ... கெட்டவர்கள்... ஈஸ்வரி போன்ற நல்லவர்கள்... காந்திமதி போன்ற கெட்டவர்கள் ...

செருக்கு ... கண்ணியம் ...

அன்று — தன் தூண்டிலில் ஒரு 'சிறு' மீன் என்ற பெருமையில் ஒரு தொழிலாளி நடந்துகொண்டிருக்கிருன் ...

அவன் — பொலிஸ் ...

இன்னெரு தொழிலாளி தனக்காகத் திறந்துவிடப்படும் சிறைக்கதவுகளுக்குள் நடந்து தன்னை அர்ப்பணிப்பதற்காக கொண்டிருக்கிருன் ...

அவன் — அப்புகாமி.

அதே சமயம் —

வீடுதலை கிடைத்துவிட்ட களிப்பில், தனக்காகத் திறந்திருந்த ரெயில் கதவுகளைப் படீரென்று சாத்திவிட்டு எலமலைத் தோட்டத்தை நோக்கிப் பறக்கிறது ஓர் இதயம் ...

எலமலைத் தோட்டத்திலே அவளுடைய வருகை ஆச்சரியமாகத்தான் இருக்கும் —அதற்காக அவள் கவலைப்படப் போவதில்லை!

(முற்றும்)

# உங்கள் இராசிபலன்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

ஊக்கக்குறைவும் காணப்படல், பெண்களுக்கு குடும்பசுகம், தனதானியவிருத்தி, சந்ததிகளுக்கு நன்மைஆதியன காணப்படும். இவர்களுக்கு மார்ச் 25, 26 சுபதினங்களாகும்.

★

**கும்ப இராசி**

(அவிட்டம்பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால்)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் தொழிற்சிறப்பு, பணிநிலையில் வசதிகள் ஏற்படல், குடும்பசுகம், சந்ததிகளுக்கு கல்வி–தொழில்–சுபகரும முயற்சிகள் நடத்தல், வர்த்தகத் துறையில் ஆதாயம், தொழில் விருத்தி. உத்தியோகத்துறையில் கடும்உழைப்பு, மேலதிகாரிகளிடம் நற்பெயரின்மை, பணமுடை, கமத்தொழிலாளருக்கு ஊழியர்கஷ்டமிருப்பினும் கால்நடைச்சிறப்பு, மாணவருக்கு வித்தைச் சிறப்பு, வாக்குச் சாதுரியத்தால் நற்பலன் கிட்டுதல், பெண்களுக்கு குடும்பச் சிறப்பு, சுபகருமச் செலவுகள் அதிகரித்தல், தெய்வவழிபாடு ஆதியன காணப்படும். இவர்களுக்கு மார்ச் 24, 27, 28 சுபதினங்களாகும்.

★

**மீன இராசி**

(பூரட்டாதி நாலாம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் பயனற்றகருமங்களில் தலையிடுவதால் விரோதங்களும் பணக் கஷ்டமும் ஏற்படல், அவசரமும் பிடிவாதமும் துன்பத்துள் மாட்டிவிடல், அலைச்சலால் போசனசுகம் இன்மை, குடும்பத்தகராறும் ஊழியர்விரோதமும் தொழிலைக் கெடுத்தல், வர்த்தகத் துறையில் மத்திம ஆதாயம், பணமுடை, உத்தியோகத் துறையினருக்கு உடல்நலம் குறைதல், மேலதிகாரிகள் வெறுப்பு, கமத்தொழிலாளருக்கு முயற்சிகள் கைகூடிவராமையால் மனமடிவு, பயிர்த் தொழில் நட்டம், மாணவருக்கு பணவசதி கிடைத்தல், கல்விச் சிறப்பு, பெண்களுக்கு களத்திரவழி உதவி, தனதானியச் சிறப்பு, தெய்வவழிபாடு ஆதியன காணப்படும். இவர்களுக்கு மார்ச் 25, 26 29, 30 சுபதினங்களாகும்

# சிறுவர் பூங்கா

## 'மருந்து விரும்பி' மனோகரன்

— மகான் —

மலைவிழுங்கி மகாதேவனைப் பற்றி பலருக்குத் தெரியலாம். அந்தப் பெயரை அறியாதவர்கள் அதிகமானோர் இருக்கமாட்டார்கள் என்றே சொல்லலாம். பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் அந்தப் பெயரை நாம் காணலாம். பல நகைச்சுவைக்கட்டுரைகளிலும் அந்தப் பெயர் அடிக்கடி இடம்பெறும். ஆனால் மருந்து விரும்பி மனோகரனை உங்களுக்குத் தெரியுமா?

பல மனோகரன்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். உங்கள் பெயர்கூட சில சமயம் மனோகரனாக விருக்கலாம்! ஆனால், "மருந்து விரும்பி மனோகரனை"ப்பற்றி நீங்கள் அறிந்திருப்பீர்களா? அவனைப்பற்றித்தான் உங்களுக்குத்தெரியுமா?

தெரியாதவர்களுக்குத்தெரியவைப்பதும், புரியாதவர்களுக்குப் புரியவைப்பதும் எமது கடமை. ஆகையினால், இந்த இருபதாம் நூற்றாண்டில் உதித்த "மருந்து விரும்பிமனோகரனைப் பற்றி சிறிது அறிமுகப்படுத்திவைக்கின்றோம், கேட்டுப் பாருங்கள். அவரை உங்களுக்கு அறிமுகப்படுத்தி வைக்கும்பொருட்டு அவரின் வாழ்க்கையில் நடைபெற்றசில சம்பவங்களைத் தருகின்றோம். படித்துப் பாருங்கள்!

மருந்து விரும்பி மனோகரனுக்கு, நீங்கள் நினைப்பது போல் பெரிய வயதல்ல. அவனின்வயதேநான்குதான். ஆனால் அவனின் "விசேஷகுணங்கள்?" வயது வந்தவர்களிலும் கூட இருக்காது!

மருந்து விரும்பி மனோகரனுக்கு சகோதரர்களோ, சகோதரிகளோ இல்லை. பெற்றோருக்கு ஒரே பிள்ளை. பெற்றோர், வீட்டைவிட்டு வெளியே எங்கும் செல்ல வேண்டுமானால், மனோகரன், "நானும் வரப் போகிறேன்." என்று மற்றப் பிள்ளைகளைப் போல அடம் பிடித்து அழமாட்டான். 'ரற்று' காட்டி பெற்றோருக்கு வழியனுப்புவான். மனோகரன் வீட்டில், வேலைக்காரனுடன் சந்தோஷமாகவிருப்பான். பெற்றோர், சினிமா பார்க்கச்செல்ல வேண்டுமென்றால், மனோகரனிடம் உண்மையைக் கூறி விடைபெற்றுச் செல்லலாம். சிலதாய்மார்கள், தாங்கள் வெளியோ, அல்லதுபடம்பார்க்கவோ அல்லது இனத்தவர்களிடமோ செல்லவேண்டுமென்றால் தங்கள் குழந்தைகளிடம், "ஆஸ்பத்திரிக்கு போயிட்டு வாறோம் ... மருந்து போட

### அவன் ஏன் அழுதான்?

ஆசிரியர்: ஏண்டா மணி, அந்தப் புதியபையன் அழுகிறான்?

மணி: அவனுக்குப் பத்தில் ஐந்து போனால் எத்தனை என்று தெரியாதாம் சார்.

ஆசிரியர்: அதற்கு அழுவானேன்.

மணி: பத்துச் சாக்கிலேட்டுகள் வைத்திருந்தான். அதில் ஐந்தை எடுத்துக்கொண்டு மீதி கொடுத்தேன். அதற்கு அழுகிறான்.

அனுப்பியவர்:
இரா. தர்மலிங்கம்,
கோவில் தெரு,
நெடுந்தீவு.

வாங்க ..." என்று சொல்வது போல் மனோகரனிடம் அவனது பெற்றோர் சொல்லத்தேவையில்லை!

மனோகரனுக்கும் மருந்துக்கும் நல்ல ஒற்றுமையிருக்கிறது. மனோகரனுக்கு வருத்தம். நல்ல காய்ச்சல். 104 டிகிரியில் காய்ச்சல். அந்தநேரத்தில்கூட அவன்மருந்தை விரும்பித்தான் குடிப்பான். நல்ல தடுமல் என்று வைத்துக்கொள்ளுங்கள். மார்பிலும், நெற்றியிலும் ஒருவித எண்ணெய் பூசவேண்டும். மனோகரன் அதைத்தட்டமாட்டான். அவனாகவேவிரும்பி, எண்ணெய்யைப் பூசிக்கொள்வான். பார்ப்பவர்களுக்கும் பக்கத்து வீடுகளிலுள்ளவர்களுக்கும் இது பெரிய அதிசயம்தான்! "எனது மகனுக்கு மருந்து கொடுப்பதென்றால் எவ்வளவு தொல்லை. எத்தனை அடி" என்று சொல்லும் பெற்றோர்; மனோகரனின் செய்கையையும், அவனது பெற்றோரின் வளர்ப்பையும் கண்டு பெருமையும், பொறுமையும் கொள்ளுவார்கள்.

மருந்தென்றால், மனோகரனுக்கு தண்ணீர் பட்டபாடு. அவனுக்கு வருத்தம் வந்தால், அவனுக்கு மருந்து வாங்குவதற்கே ஏராளமான பணம் செலவாகும். ஆனால், அவன் மருந்தை விரும்பிப்பருகுவதில் எந்தவிதமான தடையும் இருக்காது. கிளாஸில் ஊற்றிக் கொடுத்தால், மளமளவென்று மருந்தைக் குடித்து விடுவான் மனோகரன்! மனோகரின் செய்கை, அவனது வீட்டுக்கு வருபவர்கள் எல்லோரையும் விழிப்பில் ஆழ்த்தியது. மனோகரனின் பெற்றோருக்கு நல்ல பாராட்டுதல்கள். "பெற்றோருக்குப் பிள்ளையென்றால் இபபடியல்லவா இருக்க வேண்டும்" என்று சொல்லாதவாயேகிடையாது. அவ்வளவுக்கு மனோகரனுக்கு — மனோகரனின் பெற்றோருக்கு புகழ்மாலை!

சரி, இனிமனோகரனின் அந்தரங்க விஷயங்களை அறிவோமா? மனோகரனின் வீட்டில் ஏராளமான விளையாட்டுப் பொருள்கள் இருக்கின்றன. தினம்தினம் விளையாட்டுப் பொருள்கள் அதிகரித்துக் கொண்டே போகும். பிஸ்கட்டுகளா? இனிப்புகளா? சாக்கிலேட்டுகளா? ஜூஜூப்புகளா? எல்லாம் மனோகரனிடம் இருக்கிறது! மனோகரனுக்கு வருத்தம் வந்தால், அவன் கேட்கும் அத்தனை விளையாட்டு பொருள்களும், அவனுக்குக் கிடைத்திடும். அவனின் பெற்றோர் வெளியே எங்கும் செல்ல வேண்டுமென்றால், அவன் விரும்பும் இனிப்புப் பண்டங்கள், பிஸ்கட்டுகள் அவனுக்குக் கிடைத்துவிடும். இதே மாதிரி, பெற்றோர் எங்குசென்றாலும் அவனுக்கு விதம்விதமான பொருட்கள் வேண்டிக்கொடுப்பார்கள். வருத்தம் ஏதும்வந்தால், அவனுக்கு ஏராளமான சாமான்கள் கிடைத்துவிடும். அவனுக்கு மருந்துகுடிப்பதில் என்னதான் பிரச்சினை? கசப்பு மருந்தென்றாலும் கண்ணை மூடி இழுத்துவிடுவான்! மற்றவர்களுக்கு நல்லபிள்ளையாகவிருக்கும் மனோகரன், எப்படி மருந்துகுடிக்கின்றான், எந்தெந்த நிபந்தனைகளுடன் மருந்தைக் குடிக்கின்றான் என்பது உங்களுக்கு இனியும் நான் சொல்லத்தேவையில்லை. மனோகரனின் பெற்றோருக்கு எப்படி நல்லபெயர் கிடைத்தது? அதுவும் சொல்லத் தேவையில்லை! "மருந்து விரும்பி மனோகரனை" உங்களுக்கு அறிமுகப்படுத்திவிட்டேன். இந்த மனோகரனின் வரிசையில் நீங்களும் இருக்கிறீர்களா?

## அன்னம் ஊட்டிய கை

★

— இமையவன் —

நெற்றியிலே திலகம்
நீள் கயலின் விழிகள்
சுற்றி வந்து இடையைச்
சொருகி நிற்கும் சேலை.
பற்றி உள்ளம் புகுந்து
பரவி நெஞ்சம் எல்லாம்
கொற்றம் செய்யும் வாணி
கொலுவிருக்கும் தன்மை.

அன்ன நடை நடந்து
என்னருகு வந்தாள்
சின்ன இடை துவள
எனை அணைத்து உள்ளம்
கன்ன மெங்கும் முத்தம்
கத கதப்பாய் பொழிந்தாள்.
'என்ன அக்கா' என்றென்
பொன்னின் கரம் பிடித்து.

'தம்பி இந்தா சாதம்'
தளிர்க் கரங்கள் நீட்டி
"அம்பி" அவள் தந்தாள்
அன்ன முடன் கறியும்
கெம்பி மனம் மகிழக்
கெலியில் வாய் திறந்தேன்
செம் பொனெனக் கரங்கள்
செலுத்தியது உணவை.

## குழப்பம்

— மு. ஜெயகுமாரன் —

அன்றொருநாள்—

இரவு பன்னிரண்டு மணி.

எங்கள் விடுதி நிசப்தத்தில் ஆழ்ந்திருந்தது. எங்கும் ஒரே கும்மிருட்டு சூழ்ந்திருந்தது. அந்தக்கும்மிருட்டிலே மாணவர்கள் போடுகிற குறட்டையொலி, என்னையறியாமலே ஏதோ ஒரு திகிலை என்னிடம் உண்டாக்கியது.

'நாசமாய்ப்போன நித்திரை வரமாட்டேன் என்கிறதே' என்றவாறே கண்களை இறுக மூடிக்கொண்டேன். அப்பொழுது யாரோ என் அருகில் வருகிற மாதிரிக் காணப்படவே, மூச்சுவிடுகிற சத்தம் கூட வெளியே கேட்கா வண்ணம், மூச்சை மெதுவாக உள்ளிழுத்து, மெதுவாக வெளியே விட்டேன். ஆனால் அடுத்த நிமிடம் என் கட்டிலின் அருகாக சென்றது எங்கள் ஹாஸ்டல் வார்டன் வளர்க்கும் நாய் என்றறிந்த பொழுதுதான், நான் மெதுவாகச் சிரித்துக் கொண்டேன்.

அப்பொழுது எங்கள் விடுதிக்குள் ஏதோ கலவரமான ஒலி கேட்கவே, என்னை மீண்டும் திகில் கவ்விக்கொண்டது. காதைக் கூராக்கிக் கொண்டு உற்றுக்கேட்டேன். சந்தேகமில்லை, விடுதியில் தெற்குப் பக்கத்திலிருந்து ஏதோ கலவரமான ஒலி கேட்கிறது. என் கைகால்கள் உதற ஆரம்பித்தன. என் இருதயமே பயத்தினால் நின்றுவிடும்போலிருந்து "லைற்றைப் போடுவோமா?" என்று எண்ணிய நான் அதை செயலாக்க எழுந்தேன். ஆனால் ஏதோ பயம் பற்றிக் கொள்ளவே, படுத்துக்கொண்டேன். மீண்டும் எழுந்தேன். ஆனால் அதே பயம். படுத்துக் கொண்டேன். கடைசி முறையாக எழுந்துவிட்டேன். ஏதோ ஒரு முரட்டுத்துணிவுடன் லைட்டையும் போட்டுவிட்டுதெற்குப் பக்கம் பார்த்தபோழுது எனக்குப்பகீரென்றது. ஆம், அங்கே ஒருவரையும் காணவில்லை! ஆனால் கலவரமான குரல் கேட்டுக் கொண்டிருந்தது. அப்படியே கட்டிலில் இருந்துவிட்டேன்.

அதற்கிடையில் லைட்வெளிச்சத்தால் மாணவர்கள் எல்லோரும் எழுந்துவிட்டனர். "என்னடா விஷயம்?" என்றவாறே என்னை எல்லோரும் சூழ்ந்து கொண்டனர். நானும் நடந்த விஷயத்தை நடுங்கும் குரலில் கூறினேன். நாங்கள் எல்லோரும் தெற்குப்பக்கத்தைநோக்கி நடந்தோம். மறுகணம் நாங்களெல்லோரும் ஒருவரைப் பார்த்து ஒருவர் சிரித்தோம். ஆம்! எங்கள் ஹாஸ்டல் ரேடியோ இங்கிலாந்து அவுஸ்திரேலியா கிரிக்கெட் நிலைபரத்தைப் பற்றிக் கூறிக் கொண்டிருந்தது. அன்றிரவு எங்கள் ஹாஸ்டல் மாணவர்கள் பாட்டுக் கேட்டுவிட்டு ரேடியோவை அணைக்க மறந்து விட்டார்கள். அந்த ரேடியோ நான் எழுந்திருந்த நேரத்துக்கு கிரிக்கெட் நிலைபரத்தைக் கூறவேண்டியிருந்ததால் நான் அதைக்கேட்டுத்தான் பயந்தேன். நமக்கெல்லாம் இரவாயிருக்கும் போது அவுஸ்திரேலியாவில் பகலல்லவா?

## மாபெரும்...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

தாலும் நன்றாகத் தெரியக் கூடிய பெரிய ராக்ஷஸ திரை அமைக்கப்பட்டிருக்கிறது. இத்திரையின் கீழ் ஓரம் தரையிலிருந்து 23 அடி உயரத்திலுள்ளது. இந்தத் திரையின் பரப்பளவு 645 . 3 சதுரகஜங்களாகும். இப்பரப்பளவு நிலத்தில் 1024 'பார்க்' செய்யக்கூடிய 'பிளாட்'கள் உள்ளன. ஆடிட்டோரியம் பத்து அரைவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பார்க்கு செய்யும் இடத்தைக் காட்டுவதற்காக, ஒலிபரப்பி உஷ்ணப்படுத்தும் சாதனம் இவைகள் கொண்ட ஒரு தனி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பூமிக்கடியில் இந்த கழிபோல் நிற்கும் சாதனங்கள் எல்லாம் ஒன்றாக இணைக்கப்பட்டிருக்கின்றன. மோட்டார் வண்டியை 'பார்க்' செய்தபின் அந்த ஒலிபரப்பியையும் உஷ்ணப்படுத்தும் சாதனத்தையும் வண்டியின் ஜன்னல் வழியாக வண்டிக்குள் வைத்துக்கொள்ளலாம். வண்டிக்குள் கதகதப்பு இதனால் ஏற்படுத்திக்கொள்ள முடியும்.

நேரம் கழித்து வருபவர்கள் பிறருக்கு இடைஞ்சல் எதுவும் இன்றி வண்டியுடன் வந்து பார்க் செய்துகொள்ளலாம். அதேமாதிரி பாதிக்காட்சியில் போக விரும்புபவர்கள் பிறருக்கு எவ்விதத் தொல்லையும் கொடுக்காமல் வண்டியை ஓட்டிச் செல்லலாம்.

ஒரு வரிசைக்கும் மற்றொரு வரிசைக்குமிடையே போதிய இடமிருப்பதால் வண்டியைத் தாராளமாக ஓட்டிச்செல்லலாம். படம் பார்க்கும்போது பசி எடுத்தால் ஒலிபரப்பியிலுள்ள ஒரு பொத்தானை அழுத்தினால் போதும் உடனே ஒரு ஆள் வந்து வேண்டிய ஆகாரம், ஸாண்ட்விச், கேக்குகள், ஐஸ்கிரீம் எது வேண்டுமோ அவற்றை இருந்த இடத்திலிருந்தே அடையலாம்.

இம்மாதிரி மாபெரும் திறந்தவெளி சினிமா தியேட்டர் ஏற்பட்டது அமெரிக்காவில்தான். அமெரிக்காவில் 20 வயதுக்குட்பட்ட காதல் ஜோடிகளே அதிகமாக இக்காட்சிகளுக்கு வருகிறார்கள். மேற்குஜெர்மனியிலும் இளம்காதல் ஜோடிகள் இருக்கின்றனர் என்றாலும் 30 வயதுக்கு முன்பு சிறு மோட்டார் வண்டிகூட வைத்துக்கொள்ள அவர்களால் முடிவதில்லை.

மாரிகாலத்தைவிட கோடைகாலத்தில் இந்தத்திறந்தவெளி தியேட்டர்களுக்கு தங்கள் கார்களில் வருகிறார்கள். இதற்கு செலவும் அப்படியொன்றும் பிரமாதமில்லை. 2 . 75 ஜெர்மன் மார்க்குகள்தான் ஒரு மோட்டார் வண்டிக்கு!

வரலாற்றுக் கட்டுரை

## யாழ்ப்பாணம்

— எஸ். டி. ராஜன் —

பல வருடங்களுக்கு முன்பு இந்தியாவிலே வீரராகவன் என்ற பிறவிக்குருடன் யாழ் வாசித்துப் பாடுவதில் வல்லவனாக இருந்தான். அவனை அந்தகக் கவிவீரராகவன் எனவும் அழைப்பார்கள். வறுமையால் வாடிய வீரராகவன் மனைவியுடன் சண்டை போட்டுக் கொண்டு, "இலங்கைக்குப் போகின்றேன்" என்று கூறிய போது, அவன் மனைவி, "நாடும் யானையும்வாங்கிவரப்போகின்றீரோ" எனப் பரிகசித்தாள்.

வீரராகவன் துக்கத்துடன் இலங்கைக்கு வந்து, அரசசபையில் யாழ்வாசித்துப்பாடுவதற்கு உத்தரவு பெற்றான். இராஜாக்கள் குருடரைப் பார்க்கக் கூடாதென்ற வழக்கம் இருந்ததால், அவன் பாடுவதைத் திரைமறைவிலிருந்து அரசன் கேட்டான்.

வீரராகவன், "அரசே! பிறவிக்குருடனைப் பார்க்கக் கூடாதெனத் திரைமறைவில் இருக்கின்றீரா?" என்னும் கருத்தையுடைய பாட்டைப் பாடி யாழ்வாசித்தான்.

வீரராகவனின் இன்னிசையில் மயங்கிய அரசன் அவனுக்கு, ஒரு யானையும், மணற்றி என்ற இடத்தையும் பரிசாகக் கொடுத்தான். யாழ் பாடிப் பரிசாகப்பெற்றதனால், மணற்றிடல் யாழ்ப்பாணம் என்று அழைக்கப்படுகின்றது.

வீரராகவன் இந்தியாவுக்குச் சென்று மனைவியிடம்தான் பரிசுபெற்றதையும் கூறி, இந்தியாவிலிருந்து பலரைக் கொண்டுவந்து மணற்றிடலிற் குடியேற்றி அரசனானான்.

## கைதான 37 பேர் விடுதலை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. கபூரும், இந்திய அரசாங்கத்தைக்கேட்டிருந்தது வாசகநேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

பாக்குநீரிணையை முன்னர் வெற்றியுடன் கடந்து முடித்த திரு. நவரத்தினசாமி, பத்திரிகை நிருபர்கள், நீச்சல் வீரன் ஆனந்தனின் தந்தை உட்படப் பலர் இந்திய கடற்படையினரால் கைது செய்யப்பட்டுக் காவலில்வைக்கப்பட்டிருந்தனர்.

### தேவை

பிரபல்யமான புளியங்கூடல் மகாமாரியம்மன் கோவிலுக்குக் குருக்கள் (குடும்பத்துடன்) தினசரி பூஜையை ஏற்க உடனடியாக வேண்டப்படுகிறது. வரும்படியோடு தக்க சம்பளமும் கொடுக்கப்படும். கடிதம் மூலம் தொடர்பு கொள்க. மனேச்சர், மகாமாரியம்மன் கோவில், புளியங்கூடல், ஊர்காவற்றுறை.

### கார் விற்பனைக்கு

டாக்டர் ஒரே பாவிப்பிலுள்ள உன்னத நிலை EY சோமசெட் விற்பனைக்குஉண்டு. இராஜசூரியர் பெற்றோல் செட், மணிக்கூட்டு ரோட், யாழ்ப்பாணம். 804

### கோழிகள் விற்பனைக்கு

ஒரு வயதுக்குட்பட்ட, லெக்கோன், அஸ்லொப், ஆறையார் மற்றும் பலவகைப்பட்ட நல்ல ஜாதிக் கோழிகள், இல. 112, அரசடி வீதி, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் விற்பனைக்குண்டு. 807

## விதானைமாருக்கு வேலைநீக்க அறிவித்தல்

திருக்கோணமலை, சனி
கிராம சேவையாளர் பரீட்சையில் தெரிவு செய்யப்படாத கிராமத் தலைமைக் காரர்களை சித்திரை மாதம் மூன்ருந்திகதி முதல் வேலையிலிருந்து நிறுத்தியிருப்பதாக மாகாண அதிபர்களிடமிருந்து அறிவித்தல் கிடைத்துள்ளதாகத் தெரியவருகிறது. பத்து வருடங்களுக்கு மேல் சேவை செய்தவர்களுக்கு "பென்ஷன்" கொடுப்பதற்குரிய ஒழுங்குகளை உள்நாட்டுமந்திரி செய்து வருவதாகவும் அறியப்படுகிறது. பத்து வருடங்களுக்குக் குறைவாகச் சேவை செய்தவர்களுக்கு சேவை செய்த ஒவ்வொரு வருடத்திற்கும் ஒவ்வொரு மாதச்சம்பளம் மட்டும் நன்கொடையாக வழங்கப்படும் எனத் தெரியவருகிறது.

## ஈழத்திருமகனுக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனந்தன் 43 மணிநேரம் சஞ்சரித்தும் அவருடைய உடலில் எவ்விதமான மாற்றமும் காணப்படவில்லை என்றும் சாதாரணமாக உள்ளதுபோலவே களைப்பின்றி ஆரோக்கியத்துடன் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஆனந்தனை டாக்டர்கள் பரிசோதனை செய்தபின் ஆனந்தன் சனசமுத்திரத்தில் சுமார் இருமணி நேரம் மகிழ்ச்சியுடன் காணப்பட்டார். மக்கள் குதூகலத்துடன் ஆனந்தனுடன் அளவளாவி மகிழ்ந்து வேண்டிய உதவிகளையும் செய்தனர்.

ஆனந்தனுடன் நீச்சல்வீரர் நவரத்தினசாமியும் இருக்கிருர். வியாழக்கிழமை இரவு நடுக்கடலில் கைதுசெய்யப்பட்ட 37 பேர்களும் நாகபட்டினத்தில் வைத்து விடுதலை செய்யப்பட்டனர். கைதுசெய்யப்பட்டவர்களில் நவரத்தினசாமியும், ஆனந்தனின் தந்தை விவேகானந்தனும் இருந்தனர். ஆனந்தனின் தந்தை விவேகானந்தன் கடைசியாக விடுதலை செய்யப்பட்டார்.

நாகபட்டினத்திற்கும் கோடிக்கரைக்கும் இடையேயுள்ள நதி ஒன்றில் தண்ணீர் குறைந்திருக்கிறது. இதனுல் விடுதலை செய்யப்பட்டவர்கள் உடனே திரும்பமுடியவில்லை. நதியில் தண்ணீர் அதிகரித்த பின்னரே ஆனந்தனும், கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டவர்களும் வல்வெட்டித்துறையை நோக்கிப் புறப்படுவார்கள். இன்று நள்ளிரவிற்குப் பிறகோ, நாளை காலையோதான் புறப்படுவார்கள் என எதிர்பார்கப்படுகிறது.

வியாபாரம்பெருக
விளம்பரம்செய்க

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!
முருகன் (ஜிந்துப்பிட்டி)
நவா (கும்பெனித்தெரு)
ஜஸீமா (கிராண்ட்பாஸ்)
2, 6, 9-30 மணி
ஓடியன் (கல்கிசை)
2-15, 6, 9-30 மணி
ஓடியன் (கண்டி)
2-15, 6-15, 9-15 மணி
ராஜா (யாழ்ப்பாணம்)
2-30, 6-30, 9-45 மணி
ஜெமினி கணேஷன்
பி. சரோஜாதேவி
சந்திரபாபு, தேவிகா, எம். வி. ராஜம்மா, கே. டி. சந்தானம், பி. டி. சம்பந்தம்
மற்றும் பலர் நடித்த



ஆடிப் பெருக்கு
டைரக்ஷன்: கே. சங்கர்.

சென் யோன்ஸ் - மத்திய கல்லூரி கிரிக்கட்போட்டி

## வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது

யாழ்ப்பாணம், ஞாயிறு
சென். யோன்ஸ் கல்லூரிக்கும், மத்திய கல்லூரிக்கும் கடந்த இரண்டு நாட்களாக சென். யோன்ஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. மத்திய கல்லூரியின் இரண்டாவது ஆட்டத்தின்போது நேர சந்தர்ப்பத்தால் ஆட்டம் முடிவுற்றது. இதனுல் மத்திய கல்லூரியினர் தோல்வியடையாமல் தப்பித்துக்கொண்டுவிட்டனர் எனலாம்.

முதலாவது ஆட்டத்தில் சென் யோன்ஸ கல்லூரி 138 றன்களும், மத்திய கல்லூரி 80 றன்களும் எடுத்துக்கொண்டன. இரண்டாவது ஆட்டத்தில் சென்யோன்ஸ் கல்லூரி 3 விக்கட் நஷ்டத்திற்கு 184 றன்களும் மத்திய கல்லூரி 8 விக்கட் நஷ்டத்திற்கு 64 றன்களும் பெற்றுக் கொண்டன. சென்யோன்ஸ கல்லூரியினர் தமது இரண்டாவது ஆட்டம் முடிவடைவதற்கு முன்னரே, தாமாக நிறுத்திக்கொண்டனர்.

சென்யோன்ஸ கல்லூரியைச் சேர்ந்த தேவேந்திரா மிகவும் திறமையாக ஆட்டம் இழக்காமல் 74 றன்களும் எடுத்ததோடு சிறந்த துடுப்படி வீரருக்குரிய 'கப்'பையும் பெற்றுக்கொண்டார். இவர் சிறந்த முறையில் பந்தெறிந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. பேனர்ட் என்பவர் 49 றன்கள் எடுத்துப் பாராட்டைப் பெற்ருர்.

மத்திய கல்லூரியைச்சேர்ந்த அம்பலவாணர் மிகவும் திறமையாக விளையாடி இரண்டாவது ஆட்டத்தின் இறுதிவரை ஆட்டமிழக்காமல் 20 றன்கள் எடுத்தார். அம்பலவாணர் ஒரு தரம் உயரமாக 'சிக்சர்' அடித்தபோது பார்வையாளர் கரகோஷம் செய்தனர். இதைத் தொடர்ந்து ஒரு 'பவுன்றி' அடித்தபின்என ஆட்டமிழந்தார் என நினைக்கப்பட்டது. ஆனல் பின்பு அவர் ஆட்டமிழக்கவில்லை யென்று அறிவிக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து கப்டன் அவரை விளையாட அழைத்தபோது அவர் விளையாட மறுத்துவிட்டார்.

மத்திய கல்லூரியைச் சேர்ந்த டோனல் ஆட்டமிழக்காமல் 20 றன்கள் எடுத்துப் பாராட்டுப் பெற்ருர்.

மாலை 5-15 மணியளவில் வெளிச்சம் குறைவாக இருப்பதாகக்கூறி விளையாட்டு தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து பார்வையாளரில் ஒரு பகுதியினர் மைதானத்துள் சென்று மாணவர்களில் ஒரு பகுதியினரைத் தாக்கினுர்கள். நேற்றைய விளையாட்டின் போது இடையிடையே மழை பெய்தது.

## வல்வெட்டித்துறை வெற்றி வீரர்

பாக்கு நீரிணையை நீந்திக கடந்த வெற்றி வீரர் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவராவர். அவர் தொண்டமனுறைச் சேர்ந்தவரென்று நேற்றைய தலையங்கத்தில் தவறுக வெளியானமைக்கு வருந்துகிறேம். அவரது மாமனுர் நவரத்தினசாமிஅவர்கள் தான் தொண்டமானுறைச்சேர்ந்தவராவர்.

(ப - ர்)

## காளிகோவிலில் குளிர்த்தி அபிஷேகம்

யாழ்ப்பாணம், ஞாயிறு
கன்னதிட்டி காளிகோவிலில் இன்று பகல் 10 மணி முதல் 12 மணிவரை விசேஷ குளிர்த்தி அபிசேக ஆராதனைகள் நடைபெறும்.

## வரவேற்க...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

தரக் கூடியதொரு பெரும் முயற்சி பன்றும் இவ்விதம் இன்னும்பல இளைஞர் துணிகரமான தீரச் செயல்களில் ஈடுபட்டு இளைஞர்களுக்கும் நாட்டுக்கும் பெருமை தேடித்தர வேண்டுமெனவும் அவர்கள் அந்தச் செய்தியில் தெரிவித்துள்ளனர்.

## ஆனந்த(ன்) அலை ஓசை!

— காவலூர்க்கவிஞன் ஞா. ம. செல்வராஜன் —

எழுசீர் விருத்தம்

ஆழி தாண்டி விட்டான் தமிழன்
அலையை வென்று விட்டான்
காலுங் கையும் சோர்வில் லாமல்
கரையி லேறி விட்டான்
நாளு மெந்த நாடும் போற்ற
நாமம் நாட்டி விட்டான்
தாழ்வி லாத செந்தமிழ்த் தாய்
தந்த எம்மா னந்தன்

பெற்ற வர்க்கும் நாட்ட வர்க்கும்
பேரெ முப்பி விட்டான்
கற்கும் சட்டக் கல் லூரிக்கும்
கணிப்பை யீட்டி விட்டான்
உற்ற நண்பர் வாலி பர்க்கும்
ஊக்க மூட்டி விட்டான்
நற்ற வத்தால் வந்து தித்த
நண்பன் எம்மா னந்தன்

கொண்டல் வாடை சோள கத்தைக்
குனிய வைத்து விட்டான்
தெண்டி ரைசூழ் மீனி னத்தைத்
திகில டைய வைத்தான்
சண்டை போட்ட கடல லையைச்
சரண டையச் செய்தான்
மண்ட லம்பு கழு மெங்கள்
மாவீர ஞ னந்தன்

மகத்தான 2-வது வாரம்!
வீர காவியம்!!
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
விஜயா (மட்டக்களப்பு) ராஜ் (நீர்கொழும்பு) விஜிதா (அட்டன்)
மொடர்ன் (பதுளை) தீவொளி (நுவரேலியா) ஜெமினி (குகலை) ஸ்ரீகிருஷ்ணு (திருக்கோணமலை)
மற்றும் திரைகளில்!
தொண்டு செய்யும் அடிமை உனக்கு சுதந்திர நினைவோ? என்று கொக்கரித்த வெள்ளையரின் கொட்டத்தை முறியடித்தான் — கப்பலோட்டிய தமிழன்.
★ பார்த்தோர் பரவசப்படுகிருர்கள்
★ பார்க்காதோர் பார்க்கத் துடிக்கிருர்கள்
சிவாஜி கணேசன் ஜெமினி கணேசன்
சாவித்திரி குமாரி ருக்மணி
வி. நாகையா
முத்துலட்சுமி
எஸ். வி. ரங்கராவ்
ஜெமினி சந்திரா
எஸ். வி. சுப்பையா
ஏ. கருணாநிதி
டி. கே. ஷண்முகம்



மற்றும் பலர் நடிக்கும்
பத்மினி பிக்சர்ஸ்
கப்பலோட்டிய தமிழன்

மனோகரா
(யாழ்ப்பாணம்)
எம். ஜி. ராமச்சந்திரன்—பி. சரோஜாதேவி
நடித்த
தாய்சொல்லைத் தட்டாதே

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில்மேலை வீதி 83ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1963-ம் ஆண்டு மார்ச் மாதம் 24-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.